# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 31 திங்கட்கிழமை (16.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 263


# நிறைவேற்று அதிகாரப் பிரதமர்; சர்வஜன வாக்கெடுப்புத் தேவை

## இப்போதைய நிறைவேற்று ஜனாதிபதி முறையே நடைமுறையில் இருக்கும்

கொழும்பு, ஒகஸ்ட் 16

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இணங்கிக்கொண்ட நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் ஆட்சிமுறையைக் கொண்டு வருவதற்கு, சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதனால், தொடர்ந்தும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையே நடைமுறையில் இருக்கும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசமைப்புச்சட்ட திருத்தத்தின் முதற்கட்டம் உள்ளூராட்சித் தேர்தல் முறை குறித்ததாகவே இருக்கும்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் அது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. தொகுதிமுறையிலான உள்ளூராட்சித் தேர்தல் முறை தொடர்பாக 17 ஆவது அரசமைப்பில் மேற்கொள்ளவுள்ள திருத்தங்கள் இதில் அடங்கும். (24 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரான் கொடியேறி வெளி வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்காட்சி தருகிறார். (படம் : ரட்ணம்)

## அடியார்களின் அரோஹரா கோஷத்துடன் நல்லூர்க் கந்தனுக்கு நேற்றுக் கொடி

நல்லூர், ஒக. 16

வரலாற்றுச்சிறப்புமிக்க நல்லைக் கந்தன் பெருந்திருவிழா, பக்தர்களின் கந்தனுக்கு அரோஹரா, முருகனுக்கு அரோஹரா கோஷங்களுடன் நேற்று முற்பகல் பத்து மணிக்கு இடம்பெற்ற கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

அதிகாலை முதல் இடம்பெற்ற பூசைகளைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று முருகன் கொடித்தம்பத்துக்கு எழுந்தருளினார்.

ஆலய மணிகள் ஓங்கி ஒலிக்க, அந்தணர்களின் வேதபாராயணம் காற்றுடன் பரந்து சங்கமிக்க, நாதஸ்வர - தவில் கான மழை சொரிய பக்தர்களின் பக்தி கோஷங்களுடன் கொடியேறியது.

கொடியேற்றத்தைக்காண அதிகாலை (24ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பல் அகதிகள் மீதான விசாரணைகள் கனடாவில் துரிதம்

### விசாரணையின் பின் சிறைக்கு அனுப்பப்படுகின்றனர்

வன்கூவர், ஒக. 16

'சன் சீ 'கப்பலில் கனடா சென்றுள்ள இலங்கையர்களை அடையாளம் காணல், வைத்திய பரிசோதனை மேற்கொள்ளல் போன்ற பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பணிகள் நிறைவுபெற ஒருவார காலம் ஆகும் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

· விசாரணைகள் முடிவுற்றவர்கள் வன்கூவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தடுப்புக் காவலில் வைத்து இவர்கள் இன்று முதல் விசாரணை செய்யப்படுவர் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தஞ்சம் கோரும் இலங்கையர்களை ஏற்றி (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கிற்கு டெங்கு!

கொழும்பு, ஒக. 16

தம்புள்ளையில் இடம்பெற்றுவரும் முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டிருக்கும் இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

தம்புள்ளையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு (23ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி யுவதிகளை தொழிற்பயிற்சிக்கென கண்டிக்குக் கூட்டிச் செல்லும் முயற்சி தடுக்கப்பட்டது

கிளிநொச்சி, ஒக. 16

விளையாட்டு வீரர்களுக்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று கிளிநொச்சியைச் சேர்ந்த 40 யுவதிகளைக் கண்டிக்கு அழைத்துச்செல்ல இருந்த முயற்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

ஏற்கனவே சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயருடன் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தொழில்சார் வசதிகள் விரிவாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிறுவனத்தின் சார்பாக தையல் இயந்திர இயக்குநர்கள், உற்பத்தி மேற்பார்வையாளர்கள் என்ற இரண்டு வேலைகளுக்காக யுவதிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு இருந்தது.

அதில் பயிற்சிக்காலம் முடிவுற்ற பின் அதிகூடிய சம்பளமாக 14 ஆயிரம் ரூபாவும், உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபா வரையிலும், உற்பத்தித் தரக் கொடுப்பனவாக ஆயிரத்து அறுநூறு ரூபாவும், மேலதிக (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து இந்தியத் தலைவர்களையும் விசாரிக்குக!

### பினாங்கு துணை முதல்வர் வலியுறுத்து

கொழும்பு, ஒக. 16

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் இந்தியத் தலைவர்களான பிரதமர் மன்மோகன் சிங், காங் கிரஸ் தலைவி சோனியா காந்தி மற்றும் தமிழக முதல்வர் கருணாநிதி ஆகியோரும் சர்வதேச அரங்கில் விசாரிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு மலேசிய ஜனநாயக நடவடிக்கைக் கட்சியின் தலைவரும், பினாங்கு மாநிலத்தின் துணை முதல்வருமான பேராசிரியர் பி.ராமசாமி வலியுறுத்தியுள்ளார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின், இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தனர். சர்வதேச போர் நெறிமுறைகளை காலில் போட்டு நசுக்கிவிட்டு தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர். இதற (23ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி யுத்தத்தின்போது பிரபாவின் குடும்பத்தை நாட்டை விட்டு வெளியேற்ற முயற்சித்தேன்

### கே.பி. வெளியிட்டிருக்கும் பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஒக. 16

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனியின் வேண்டுகோளின் பிரகாரம், அவரின் குடும்பத்தவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் நான் ஈடுபட்டேன்.

தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பிலுள்ள கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் கனடாவில் ஆங்கில இணையத்தளத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

பிரபாகரன் எனக்கு விடுத்த தனிப்பட்ட வேண்டுகோளின் பிரகாரமே நான் மீண்டும் புலிகள் இயக்கத்தில் இணைந்தேன். நான் இயக்கத்திலிருந்து விலக்கப் (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ரத்தானது; அரசின் செயற்பாட்டில் மாற்றமில்லை

கொழும்பு, ஒக. 16

ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு வழங்கிவந்த ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நேற்றுமுன்தினம் சனிக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது. அதேவேளை இச்சலுகை தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய யூனியன் முன்வைத்துள்ள 15 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வெளிநாட்டமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தெரிவித்தார். வரிச்சலுகைகளை இழக்க நேர்ந்தாலும் இறைமையுள்ள ஓர் அரசினால் இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார் அவர்.

எமது முன்னைய நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை. இதுபற்றி ஐரோப்பிய யூனியனுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் ஜயசிங்க.

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு ஐரோப்பிய யூனியன் துறைமுகங்களில் முழு அளவிலான சுங்கவரி விதிக்கப்படும் என்று கொழும்பிலுள்ள ஐரோப்பிய யூனியனின் காரியாலய தலைமை அதிகாரி பேர்னார்ட் சாவேஜ் கூறினார். (ஒ-ப)

## இளம் பணிப்பெண் மீது துன்புறுத்தல்; நீதிவான் மீது பொலிஸ் விசாரணை

கொழும்பு, ஒக. 16

மலையகத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நீதிவான் ஒருவர் புலனாய்வுப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்பு அதே நீதிவான் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தவர் என்று கூறப்படும் இளம் பெண்ணொருவர் பற்றியும் புலனாய்வுப் பொலிஸார் ஆராய்ந்து வருகிறார்கள். அப்பெண்ணும் குறித்த நீதிவான் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார் என்பது தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப இளம்பெண் செய்துகொண்ட முறைப்பாடு தொடர்பாக முழு அளவில் பாகுபாடற்ற புலன் விசாரணைகளை நடத்தும் படியாக பிரதம நீதியரசரும் நீதித்துறை சேவை ஆணைக்குழுவின் தலைவருமான நீதியரசர் அசோகா டி சில்வா பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரியாவைப் பணித்திருந்தார்.

நீதிவான் ஒருவரின் கண்ணியமற்ற செயற்பாடு குறித்து முறைப்பாடு எழுந்திருப்பது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை தெரிவித்து அறிக்கை விட்டிருந்தது. அத்துடன் பிரதம நீதியரசர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பதையும் பாராட்டியும் இருக்கிறது.

இந்த விடயத்தில் முறையான புலனாய்வு நடத்தப்படவும், நீதித்துறையின் கண்ணியத்தை நிலைநாட்டவும் பிரதம நீதியரசர் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளது.

## யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியில் தொழிற்தகைமை விசேட பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் மூன்றுமாத தேசிய தொழில் தகைமை தரத்திலான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகக் கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் வி.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் திருத்துதல், வீட்டு மின்சார பாவனைப் பொருள்கள் திருத்துதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி உபகரணங்கள் திருத்துதல், கணனி பிரயோக உதவியாளர், வாயு மற்றும் வில் வெல்டிங், குழாய் இணைப்பு, மரவேலை, மேசன் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 20ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

## காற்றுடன் கூடிய மழை தொடரும்

கொழும்பு, ஒக. 16

நாட்டின் பல பாகங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேசமயம், குருவிற்ற ஏரத்த நீரமின் விநியோக நிலையத்துக்கான நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையால் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன என பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லக்ஷபான நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் நேற்று முற்பகல் திறக்கப்பட்டன.

சீரற்ற காலநிலை காரணமாக கரையோரம், தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ஒ-சி)


### தென் இந்தியத் திருச்சபை மூளாய் ஆலயம் 130ஆம் ஆண்டு நிறைவுக்கான நன்றி செலுத்தும் வழிபாடு

மூளாய் திருச்சபையின் நிர்வாகத் தீர்மானத்தின்படி இன்று (16.08.2010) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சபையின் 130ஆம் ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடு பேராயர் அதிவணை. கலாநிதி D.S.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி இந்திரா தவநாயகம்,
செயலாளர்,
மூளாய் திருச்சபை.

### வாழ்த்தி வழியனுப்புகின்றோம்



வண.T.S.யோசுவா

மூளாய் திருச்சபையை விசுவாசத்திலும் சத்தியத்திலும் வழிநடத்தி சமூக விடுதலைக்கும் சமூக ஒருமைப்பாட்டுக்காகவும் உழைத்த எமது அன்பின் போதகரையாவையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்தி வழியனுப்புகின்றோம்.

திருச்சபை மக்கள்,
மூளாய்.

(102055)

### 34ஆவது பிறந்த நாள் நினைவும் 8ஆம் மாத கண்ணீர்த்துளிகளும்

தோற்றம் 16 * 08 * 1976

மறைவு 14 * 01 * 2010



அமரர் சண்முகலிங்கம் லதுர்ஜிக்காந்
(வதனி ஜூவலறி, கொடிகாமம்)

அன்பின் மாமாவே! ஆசை மாமாவே!
எம்மை விட்டு எங்கு சென்றீர்?
நித்தம் உங்களைத் தேடுகின்றோம்.
எம்மை காரில் அழைத்துச் சுற்ற
எப்போ வருவீர் அச்சா மாமாவே!
உங்கள் நினைவில் வாடும்!

சங்கத்தானை, சாவகச்சேரி.
(102053)
அன்பு மருமக்கள் - தேனுக்குட்டி, வர்ணாக்குட்டி.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 04.07.1930

மறைவு 17.07.2010

அமரர் இராசம்மா மார்க்கண்டு

அன்பாக அரவணைத்து அறிவுதனை எமக்கூட்டி
பண்பாக சிறந்து விளங்கிய எம் அம்மாவே!
எப்போது காண்போம் இனி உம்மை.

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.08.2010) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து யாழ். அத்தி யடிப் பிள்ளையார் கோயில் கணபதி மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களையும் அன்புடன் அழைக் கின்றோம்.

82/10, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(10258)
குடும்பத்தினர்.

### ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்



மொறட்டுவவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப் பட்ட அலுமாரிகள், கதிரைகள், அலுவலக மேசைகள், கணனி மேசைகள், மெத்தைகள், கட்டில்கள் போன்ற அனைத்துத் தள பாடங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: 20,000/- ரூபாய்க்கு மேல் பொருள்கள் பெற்றுக் கொள்பவர்களுக்கு அன்பளிப்புப்பொருள்கள் வழங்கப்படும்.

தவணை முறையில் பொருள்கள் வழங்கப்படும்.

ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்
512, கே.கே.எஸ்.வீதி, கனோகராசந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0214922941

### LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 07 . 1964

மறைவு 06 . 08 . 2008



அமரர் இரத்தினம் கனேசலிங்கம்

இரண்டாண்டுகள் சென்றாலும்
எம் கண்ணீர் ஓயவில்லை - அப்பா
வேறு - சொந்தங்கள் இருந்தாலும்
அநாதைபோல் உணருகின்றோம்
மறுபிறப்பும் உம் பிள்ளைகளாய்
பிறந்திட இறைவனிடம் வரம் கேட்கின்றோம்.

நி.முகவரி: வெற்றிலைக்கேணி, முள்ளியான்.
த.முகவரி: சாரையடி, பருத்தித்துறை.

நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

### மரண அறிவித்தல்

திருமதி சிவஞானசுந்தரம் தங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/அருணோதயாக் கல்லூரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும், தற்போது தாவடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானசுந்தரம் தங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி) அவர்கள் நேற்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவஞானசுந்தரத்தின் (வரி உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும் அகிலன் (சுவிஸ்), ஆதித்தன் (நோர்வே), காலஞ்சென்ற ஐங்கரன், ஆரூரன் (கனடா), அனுஜா (ஆசிரியர், யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி.) ஆகியோரின் அன்புத் தாயும் சத்தியவதனி, விஜய குமாரி, கிருஷாந்தி, சத்தியகுமார் (செலிங்கோ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கபிலன், சுஜிந்தா, கபிஷ், ஐங்கரன், ஆர்த்தி, தர்ஷிகன், பிரியங்கன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2010) திங்கட்கிழமை நடைபெற்று பி.ப. 1 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(101943)

தகவல்:
சத்தியகுமார் (மருமகன்)
அனுஜா (மகள்)

### காணவில்லை

வெள்ளை நிறம், கண்ணைச் சுற்றியும் உடலிலும் மண்நிறப் புள்ளிகள் கொண்ட 1 1/2 வயது பசுக்கன்று 10.08.2010 தொடக்கம் காணவில்லை. கழுத்தில் பட்டும், பண்டாரகுளம் பிள்ளையார் என குறிப்பு கட்டப்பட்டுள்ளது. இதனைக் கண்டவர்கள், இ.பஞ்சலிங்கம் அண்ணாவலை இசை மன்றம், பண்டாரக்குளம் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

ST Johns, Chundukuli Girls.
பாடசாலைகளுக்கு அருகில்.

தொடர்புகளுக்கு T.P: 077 2900033
Email: lamlahs@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பாதுகாப்பு என்ற பதாகைக்குக் கீழ் தமிழர் வாழ்வு சிதைவுறலாமா?

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, வவுனியாவில் தனது விசாரணைகளை மேற்கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில், முதலில் மூன்று நாள்கள் நடத்திய விசாரணைகளை விட, பதிவாகிய சாட்சியங்களை விட அங்கு முற்று முழுதாக வித்தியாசமான காட்சியும் காரியமும் அரங்கேறின.

ஆட்சிபீடத்தில் உள்ளவர்களின், அவர்களின் கீழ் பணியாற்றுபவர்களின் செயற்பாடுகளால் வாழ்க்கையில் அபலைகள் ஆகிவிட்ட, அநாதரவாகிவிட்ட தமிழ்ப்பெண்கள் ஏழுபேர், தமது குடும்ப உறவுகளுக்கு உண்டான நிர்க்கதியான நிலைமைகளைத் தேம்பித் தேம்பி அழுதவாறு விவரித்த சாட்சியம், புதிய வகையினதாக விசாரணைக் குழுவினருக்கு அமைந்திருக்கும் என்பது நிச்சயம்.

வன்னியில் போர் நடைபெற்றபோதும், அது முடிவுற்ற பின்னரும் தமிழ்மக்கள் அனுபவித்து வரும் மறைமுக இன்னல்களையும் இம்சைகளையும், அரசின் மனிதநேயமற்ற போக்கையும் பகிரங்கமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த அரங்கு அங்கு நிகழ்ந்தேறியது.

போர் முடிவுற்றுவிட்டது, சமாதானம் மலர்ந்து விட்டது, அபிவிருத்தி ஆறுகால் பாய்ச்சலில் நடைபெறுகிறது, ஓரவஞ்சனை இல்லாத நல்லாட்சி நடைபெறுகிறது என்ற வெளித்தோற்றம் முற்றிலும் சோடனை செய்யப்பட்டது என்ற யதார்த்தம் வவுனியா விசாரணையின் போது வெளியரங்கமானது.

போர் முடிவுற்ற பின்னரும், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற அம்புகள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்தும் எய்யப்படுவதும், அதனால் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் - தமிழ்க்குடும்பங்கள் - மனிதநேயத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் ஏங்கித் தவிப்பதும், அதன்கண் அவர்களின் உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருப்பதும், வாழ்வு சிதைக்கப்படுவதும் வவுனியா விசாரணைகளின்போதான தமிழ்ப் பெண்களின் விளம்பல்களால் வெளியாகியுள்ளன.

வவுனியாவில் சாட்சியமளித்தவர்களைப் போன்று ஆயிரம் ஆயிரம் தமிழ்ப்பெண்கள் வாழ்க்கையைத் தொலைத்து உள்ளதோடு அந்தகாரத்துக்குள்ளும் தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டில், நியாயம், நீதி, மனிதாபிமானம், மனித நேயம் என்ற மனித வாழ்க்கையின் உயர்ந்த நியமங்கள் எல்லாம், நாட்டின் பாதுகாப்பு என்ற பதாகைக்குக் கீழ் போர்த்தி மூடப்பட்டு விட்டதால், கடத்தல்கள், கைதுகள், தடுத்துவைப்புகள் ஆகியன அலங்காரத் தன்மை பெறுகின்றன.

போரும், மோதல்களும் நடைபெற்ற வேளையில் கைக்கொள்ளப்பட்ட மக்கள் விரோதமான ஜனநாயகத்துக்கும் நல்லாட்சிக்கும் குந்தகமான செயற்பாடுகள் தொடர்கின்றன என்பதற்கு ஆயிரக்கணக்கான தமிழ்ப்பெண்களின் வாழ்க்கை வெறுமையாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, வவுனியா வாழ் பெண்கள் எழுவரினதும் விசாரணைக்குழு முன்னதான சோகம் ததும்பிய சாட்சியங்கள் உதாரணக் குறியீடுகளே.

ஆலாபரணம் செய்யப்பட்ட அறிக்கைகளாலும் பிரசாரங்களாலும், பாதிப்பிலும் பரிதவிப்பிலும் சம்பந்தப்பட்டவர்களை, ஒவ்வாத நியாயப்படுத்தல்களை முன்வைத்து, வெளிப்பூச்சுக் காட்டி அறத்தைத் தோற்கடிக்க முயல்வது பொருத்தமற்றது.

சொல்லொன்று செயல்வேறான தமிழ்மக்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவர்களது வாழ்வியலை மறைமுகமாக நசுக்கிவிட நினைப்பதும் ஜனநாயக பெறுமானங்களுக்குக் கிட்டவும் நெருங்கும் போக்கல்ல. இதனை அரசாங்கம் மனித மாண்புடன் உணர்வு பூர்வமாகச் சிந்திக்கும் காலம் எப்போது வரும்...?

# ரணில் - ராஜபக்ஷ சந்திப்பின் விளைவு; ஐ.தே.கவுக்குள் மேலும் கருத்து மோதல்

நேற்று 15.08.2010 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

கடந்த திங்கட்கிழமை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிரிலபொனையில் இளம் சட்டத்தரணி ஒருவர் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டது தொடர்பான விருந்தில் கலந்து கொண்டுவிட்டு காரில் திரும்புவதற்கு ஏறிய சமயத்தில் அவருடைய கைத்தொலைபேசி ஒலிக்கத் தொடங்கியது. ரணிலின் செயலகத்திலிருந்து அலுவலர் ஒருவர் பேசினார். அடுத்த நாள் காலையில் ஜனாதிபதி மாளிகையில் அவரை ஜனாதிபதி சந்திக்க விரும்புவதாக அலுவலர் கூறினார்.

செவ்வாய்க்கிழமை சந்திப்பை மேற்கொள்வதற்கு முன்பதாகத் தனது பிரதித்தலைவர் கருஜயசூரியாவுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு தமக்கு வந்திருந்த அழைப்பைப்பற்றி அவரிடம் கூறினார். ஜயசூரியவுக்கு நெருக்கமான வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் இதுபற்றி குறிப்பிட்டபோது விக்கிரமசிங்க இம்மாதிரி ஜயசூரியாவுக்கு அறிவித்திருப்பது இதுவே முதல்தடவை என்று கூறினார். ஆனால் முன்னொரு சமயம் ராஜபக்ஷ இவ்வாறு தம்மை அழைத்தபோது ஜயசூரியாவுக்கு அதைப் பற்றித் தாம் அறிவித்திருந்ததாக ரணில் கூறிவந்துள்ளார். அவ்வாறான சந்திப்பை நிகழ்த்த வேண்டாம் என ஜயசூரிய யோசனை கூறிவந்துள்ளார். இதற்குக் காரணம், பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் சமயத்தில் ஐ.தே.கட்சி உறுப்பினர்களை தம்பக்கம் எடுத்துக் கொள்வதில்லையென்ற வாக்குறுதியை ராஜபக்ஷ பல தடவைகள் மீறியிருப்பதே. ஆனால் இந்தயோசனையை விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ளவில்லை, காரணம் ஜனாதிபதி இவ்வாறான அழைப்பொன்றை விடுக்கும் போது அதனை அலட்சியப்படுத்துவது சரியில்லை என்பதாகும்.

விக்கிரமசிங்க கடந்த ஜூலை 10 ஆம் திகதி ராஜபக்ஷவை சந்தித்து அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தியிருந்தார். அந்தப் பேச்சுக்களுக்கு எவருடனும் ஆலோசனைகள் நடத்திய பின்போ, அனுமதி பெற்றோ அவர் போயிருக்கவில்லை. தமது சொந்த விருப்பிலேயே போயிருந்தார். ஆனால் இப்பொழுது இரண்டாவது அழைப்பின் போது ஜயசூரியவுக்கு அறிவித்திருக்கிறார். ஆனால் போக வேண்டாம் என்ற ஆலோசனையை புறந்தள்ளியுள்ளார். இவை பற்றி ஜயசூரியவிடம் கேட்டபோது இவை கட்சி விவகாரங்கள், பகிரங்கமாக கருத்துக் கூற நான் விரும்பவில்லையென்று அவர் கூறிவிட்டார்.

ஜயசூரிய தாம் ஒரு கட்டுப்பாடான ஒழுக்கவியலாளர் என்று காட்டிக் கொள்பவர் மாத்திரமன்றி தனது தலைவருக்கு விசுவாசமானவருமாவார் என்ற போதிலும் ராஜபக்ஷவுடன் ரணில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்து கட்சி உயர்மட்ட தலைவர்கள் சீற்றம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

பேச்சுக்களில் கலந்து கொண்டதின் மூலம் தனது பிரதித் தலைவரின் ஆலோசனையைப் புறக்கணித்துவிட்டதுடன் தமது சொந்தக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேராவை தாழ்வு படுத்தியிருக்கிறார். ஒருவாரத்துக்கு முன்னர் ஜயவிக்கிரம பெரேரா நாடாளுமன்றத்தில் பேசிய போது இனி மேற்கொண்டு ஜனாதிபதியுடன் தமது கட்சி பேச்சுவார்த்தை எதனையும் நடத்தமாட்டாது என்ற வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். இப்போது எமது கட்சியிலிருந்து இரண்டு உறுப்பினர்களை அவர் எடுத்துக் கொண்டுவிட்டார். அவர் வழங்கிய வாக்கை மீறிவிட்டார் என்று ஜய விக்கிரம பெரேரா குற்றஞ்சாட்டியி ருந்தார்.

ஓகஸ்ட் 6 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் விக்கிரமசிங்க வெளியிட்ட ஒரு கருத்தில், ராஜபக்ஷவின் அரசு சர்வாதிகாரத்தை நோக்கிப் போகப் போகிறதா அல்லது சுதந்திரமான மக்கள் நலன் நாடும் அரசாக விளங்கப் போகிறதா என்று அவரிடம் நாங்கள் கேட்க வேண்டும் என்றார். மேலும் இதற்கு அவர் வழங்கும் பதிலைப் பொறுத்தே எமது செயற்பாடுகள் இனி அமைந்திருக்கும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன் என்றார் ரணில்.

மங்கள சமரவீர தமது கட்சியை கலைத்துவிட்டு கடந்த வாரம் ஐ.தே.கவில் சேர்ந்து கொண்ட நிகழ்வில் பேசிய போதே இக்கருத்தை அவர் வெளியிட்டிருந்தார்.

விக்கிரமசிங்க துணிச்சலாக இவ்வாறு கேட்டிருந்தபோதிலும் ராஜபக்ஷவிடமிருந்து அவ்வாறான பதில் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

தனது பிரதித்தலைவரின் ஆலோசனையை புறக்கணித்து, தமது கட்சி சிரேஷ்ட தலைவர்களுடன் ஆலோசனை நடத்தாமல் போனது மட்டுமன்றி சில தினங்களுக்கு முன் தாம் வெளியிட்ட கருத்துக்கு மாறாகவும் அவர் செயல்பட்டுள்ளார். தமது கட்சியினருக்கு தாம் கூறியவற்றையே அவர் மறந்துவிட்டுள்ளார்.

## தனது நிலைப்பாடு சரியென எதிர்க்கட்சித் தலைவர் வாதம்

ரணில் நடத்திய பேச்சு வார்த்தை ராஜபக்ஷவுடனான ஒருவருக்கொருவர் என்ற வகையில் அமையவில்லை. பேச்சுக்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். இதனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியுடன் பேசுவதற்குச் செல்லும் போதெல்லாம் ஏன் தனியாக போகின்றார், தனது பிரதித் தலைவரையாவது கூட்டிச் செல்லலாம் தானே என்று ஐ.தே.க. தலைவர்கள் கேட்கிறார்கள். அவர் தனிப்பட்ட முறையில் போகவில்லை கட்சியின் தலைவர் என்ற முறையிலேயே சென்றவர் என்கிறார்கள் அவர்கள்.

எதுவானாலும் ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை பலமாக நியாயப்படுத்தியுள்ளார்.

எமது கட்சி ஜனாதிபதி யுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அவருடன் தொடர்பு கொள்ளாமை ஐ.தே.கவுக்குப் பின்னடைவாகவிருக்கும். அரசமைப்பில் அவர்கள் கொண்டுவரவிருக்கும் திருத்தங்கள் தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன என்பதை எங்களுக்கு அறியத் தரவேண்டும் என்று அவரிடம் கூறினேன். இந்த விடயத்தை விவாதிக்க எனக்கு அதிகாரமில்லை. எமது கட்சிதான் விவாதித்து முடிவுகள் எடுக்கவேண்டும் என்று ரணில் கூறியிருக்கிறார்.

அம்மாதிரியான நடைமுறை விரைவில் செயற்படத் தொடங்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

முன்னைய பேச்சுக்களைப் போலவே விக்கிரம சிங்கவின் 55 நிமிட பேச்சு வார்த்தை உத்தேச அரசமைப்பு திருத்தங்கள் பற்றியதாகவே அமைந்திருந்தது. சில பிரச்சினைகள் ஆலோசிக்கப்பட்டதின் பின் ராஜபக்ஷ சகோதரர்களை தொடர்ந்து ஆலோசிக்கும்படி விட்டுவிட்டு ரணில் வாபஸ் ஆனார்.

ஐ.தே.க. முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப் போகிறதாவென்று ஜனாதிபதி ரணிலிடம் கேட்டதாகத் தெரிகின்றது. பிரதித் தலைவர் ஜயசூரிய, மங்கள சமரவீர கட்சியில் சேர்ந்த நிகழ்வில் பேசியிருந்த விடயம் காரணமாக இந்தக் கருத்து பரவியிருந்தது. ஜெனரல் பொன்சேகாவைப் போன்றவர்களும் இக் கட்சியில் சேர்ந்து கொள்ள முன்வர வேண்டும் என்பதாக அவர் பேசியிருந்தார். விக்கிரமசிங்க விளக்கம் தந்த போது இனிவரப்போகும் நிகழ்வு எதனையும் அது குறிக்கவில்லையென்றும் பேச்சுவாக்கில் தெரிவிக்கப்பட்ட கருத்து என்று தெரிவித்தார்.

இது ஒரு சமகால நிலவரமா[illegible] ஜனநாயக தேசிய கூட்டமைப்பில் விரிசல்கள் தோன்றத் தொடங்கியிருப்பது கடந்த வாரம் தெரியவந்தது.

அதன் கூட்டுக் கட்சிகள் ஜனதா விமுக்தி பெரமுனையைத் தவிர கூட்ட மொன்றை நடத்தினார்கள். நவசிகல உறுமய, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் தமிழ் காங்கிரஸ் மற்றும் எக்ஸத் ஜனதா பக்ஷய போன்ற கட்சிகள் இதில் கலந்து கொண்டன. மேற்படி கூட்டமைப்பு இந்த நான்கு கட்சிகளும் ஜே.வி.பி யும் இணைந்து அமைக்கப்பட்ட ஒன்றாகும்.

ஜே.வி.பி இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. ஏனென்றால் போராட்ட நோக்கத்தில் அது மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பத்தில் அது ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்திருந்தது. பின்னர் அதனை உத்தேச அரசமைப்பு மாற்றங்களுக்கு மாறானதாக மாற்றிக் கொண்டது.

நவசிகல உறுமய கட்சியின் தலைவர்சனாத் மனமேந்திரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.ஓகஸ்ட் 6 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத்தில் ஓய்வு பெற்ற ஜெனரல் பொன்சேகாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தாம் பேசிய போது ஜே.வி.பியில் அவருக்கு எதிர்காலம் இல்லை என்பதால் ஐ.தே. கட்சியில் சேர்ந்து விட வேண்டும் என்று கூறியதாகத் தெரிவித்தார்.

பிரசன்னமாயிருந்த நிரான் அல்லஸ் கூட்டத்தில் கருத்து வெளியிடுகையில் ஐ.தே. கவில் ஜெனரல் பொன்சேகாவுக்குப் பிரதித் தலைவர் பதவி தரப்படுமானால் அது கவனிக்கப்படலாம் என்றார். பொன்சேகா இவை ஒன்றுக்கும் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை. பொன்சேகா விடுதலை பெற வேண்டுமானால் ஐ.தே. கட்சியில் சேருவதே ஒரேவழியென்று தாம் கூறியதாக மனமேந்திரா மேலும் கூறினார்.

இக்கூட்டத்திற்குப் பிறகு அனுர குமார திஸாநாயக்க பத்திரிகையாளர் கூட்டமொன்றை அழைத்திருந்தார். அக்கூட்டத்தில் அனோமா பொன்சேகாவும் கலந்து கொண்டிருந்தார்.

ஐ.தே. கவில் சேர்ந்து கொள்ளும் நோக்கம் எதுவும் சரத் பொன்சேகாவுக்குக் கிடையாது என்று அவர்கள் அறிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை ஜே.வி.பி பொன்சேகாவின் விடுதலையைக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் ஜெனரல் பொன்சேகா கலந்து கொள்ளாதது ஆத்திரமூட்டுவதாய் இருந்தது.

### முன்னாள் தளபதியின் பட்டம் பதக்கங்கள் பறிபோயின

கடந்த வெள்ளியன்று மூன்றுபேர் அடங்கிய ராணுவ நீதிமன்றம் முன்னாள் ராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை அவர் மீதான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்கியது. பதவியில் இருந்த போதே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டி ருந்தார் என்று அவர் மீதான குற்றச் சாட்டின் மீது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த பட்டங்கள், பதக்கங்கள் ஆகியவற்றை ரத்துச் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதேநாள் மாலையில் ஜனாதிபதி ராஜபக்ஷ ஆயுத படைகளின் பிரதம தளபதி என்ற முறையில் பொது ராணுவ மன்றத்தின் தீர்ப்பை அங்கீகரித்து பொன்சேகாவின் பட்டம், பதக்கங்களை இரத்துச் செய்யும் பிரகடனத்தை வெளிப்படுத்தினார். ஒரு காலத்தில் உலகின் திறமைமிக்க ராணுவத்தளபதி என்று போற்றப்பட்டவரான பொன்சேகாவின் தரத் தகுதி மற்றும் எல்லாவிதமான அலங்கார பதக்கங்களும் பறிக்கப்பட்டு விட்டன. இனி நாட்டிலுள்ள எந்தவொரு ராணுவ நிலையத்துக்கும் அவர் அனுமதிக்கப்படமாட்டார். ★

தமிழில்: கோகுலன்

## நாளை

| | |
|---|---|
| ஆவணி01 | 17.08.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : அட்டமி பி.ப.05.18 வரை |
| நட்சத்திரம் | : விசாகம் பி.ப. 12.24 வரை |
| சுபநேரம் | : 10.35-12.05 வரை |
| ராகுகாலம் | : 03.05-04.35 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICDL International Computer Driving Licence

Get an International Recognized Qualification in Information Technology

INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE

Special offer for A/L 2010 Students

Total Fee Rs.16800/= Special Offer Fee Rs.10000/=

ICDL 7Modules

- Concept of Information Technology
- Using the Computer & Managing Files
- World Processing MS Word
- Spreadsheet MS Excel
- Database MS Access
- Presentation MS Power Point
- Information and Communication



Approved Test Centre

GATEWAY GICT

Duration: 4 Months

GATEWAY LANGUAGE & ICT CENTRE JAFFNA
347, Kasthuriyar Road, Jaffna

021 222 7967
021 567 5555

gatewayjfn@sltnet.lk

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சுப்பிரமணியம் நடராசா

(Senior Research Assistant (S.R.A),
Road Development Authority)



சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 201, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட R.S.நடராசா நேற்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (முன்னாள் உரிமையாளர் - Silk Paradise) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற M.T. திருநாவுக்கரசு (முன்னாள் உரிமையாளர் - இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்) மற்றும் தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்திரஜோதியின் அன்புக் கணவரும் ஷாமிலா (Management Accountancy, Colombo), மனோஜ் (Faculty of Engineering, Moratuwa) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருச்செல்வம், தெய்வநாயகி, சிவஞானமூர்த்தி, நாகரத்தினம், காலஞ்சென்ற புனிதவதி மற்றும் சந்திரா, குகராசா (S.K., Norway) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேந்திரன் (உரிமையாளர் - இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்), பாலேந்திரன், ரவீந்திரன், சந்திரவதனி, தவேந்திரன், சுகந்தமலர், வசந்தமலர், ஞானேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், லீலாவதி, மகேந்திரராசா, ஜெகதீஸ்வரி, துரைராசா, கதிர்காமநாதன், மகேந்திரராசா, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. இராஜேந்திரன்
(மைத்துனர்)

*201, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(102057)

# மரண அறிவித்தல்



## முருகேசு சண்முகம்

***(ஓய்வுபெற்ற சிறாப்பர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்)***

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகம் நேற்று (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் கணவரும், கிட்லர் (கனடா), கிச்னர் (கனடா), டென்சிங் (ஜேர்மனி), காலஞ்சென்ற கரன்சிங் (பிரான்ஸ்), தயாளன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி, யாழ்.வலயம்), கலா (யாழ்ப்பாணம்), குணாளன் (கனடா), லிங்கன் (கனடா), ஜோன்சன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், நகுலாம்பிகை, புவனேஸ்வரி, நற்குணம், நாகராஜேஸ்வரி, றோகினி, விஜயரெட்ணம் (கிராம அலுவலர், J/77 மருதடி, J/71 குருநகர் மேற்கு), ஆனந்தி, செல்வராணி, கோசலா ஆகியோரின் மாமனாரும், அடோல்ப், அனோத்தா, கஸ்ரோ, பெனிஸ்ரோ, சுஜிகா, சுரேகா, சுவேகா, ஜெஸ்மின், ஜெறோம், நந்தனன், சந்துரு, கஜன், தயானா (இந்தியா), விவியன், வினுஜன் (மாணவர்கள், A/L 2011 கணிதம் - யா/இந்துக் கல்லூரி), காருண்யா (யாழ்.மருத்துவபீடம், 32ஆம் அணி), ஆரூரன் (மாணவன், A/L 2011 உயிரியல் - யாழ்/இந்துக் கல்லூரி), வாகீசன் (மாணவன், தரம் 10 - யாழ்/இந்துக் கல்லூரி), சுஜான், சர்வி, ஸ்டெபி, லிவிங்ஸ்ரன், விபீஸ், ஹரீஸ் ஆகியோரின் பேரனும் ஆரன், செலீனா, யசன்பிரா ஆகியோரின் பூட்டனும், சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா, துரைராசா, கனகரெட்ணம், கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.08.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**தயாளன்** (மகன் - சண்)
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
**க.விஜயரெட்ணம்** (மருமகன் - கிராம அலுவலர்)

57, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(102660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மவரிடத்தே கணனியறிவை மேம்படுத்தும் தமிழ் மென்பொருள்களுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்

## - சரவணபவன் எம்.பி உரை -



யாழ்ப்பாணம், ஓக.16

எமது மக்களுக்குப் பயனுடையதாக இருக்கும் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு துறை சார்ந்தவர்களுக்கு உள்ளது.

அந்த வகையில் கணனி மென்பொருள்களைத் தமிழில் வடிவமைத்து தமிழ் இளைஞர்களின் கணனியறிவை விருத்தி செய்யும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

நிலவு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழ் மென்பொருள்கள் வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே சரவணபவன் எம்.பி இவ்வாறு கூறினார். அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

எமது மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக கடந்த காலச் சூழலின் தாக்கம் அமைந்திருந்தது. கணனிப்பாவனைக்கான வசதிகள் எமக்கு உரிய முறையில் இருக்கவில்லை. சில வசதிகள் இருந்தும் சில சந்தர்ப்பங்களில் அவற்றினைப் பயன்படுத்துவதில் எமது இளையோரிடத்தே ஆர்வம் இன்மையும் முன்னேற்றத்துக்கு தடையாக இருந்துள்ளது.

கணனி இல்லாத உலகம் இனி இல்லை. எனவே கடந்த போர்ச் சூழலினால் பல வருடங்கள் பின்நோக்கிச் சென்ற நாம் இனியும் அவ்வாறு இருக்க முடியாது. சவால்களுக்கு மத்தியில் நாம் முன்னேற வேண்டும்.

கணனிப் பிரயோகமும் அது சார்ந்த அறிவும் அனைத்து வயதினருக்கும் தேவை. மொழி இதற்கு சில வேளைகளில் தடையாக இருக்கலாம் என நினைக்கிறேன். அதற்கான தீர்வாக நிலவு நிறுவனத்தினர் எடுத்துள்ள முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தமிழ் மென்பொருள்களைப் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை கல்வி வலயங்கள் மேற்கொள்ளவேண்டும். தமிழ் மொழிப் பிரயோகத்தின் மூலம் எமது பகுதியில் மேலும் முன்னேற்றம் காணப்படவேண்டும்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் மென்பொருள்களை அறிமுகப்படுத்திவரும் நிலவு நிறுவனத்தினர் தொடர்ந்தும் தமது பணியை முன்னெடுக்க வேண்டும்- என்றார்.

இதேவேளை யாழ்ப்பாணம், தென்மராட்சி கல்வி வலயங்களின் தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் , தமது வலயப் பாடசாலைகளின் தேவைகளுக்கு என மென்பொருள்களை பெற்றுக்கொள்வதற்கான வேண்டுதல் விண்ணப்பங்களை சரவணபவன் எம்.பியிடம் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (எ-14)

# இரவிலும் கண்விழிக்கும் யாழ்.நகர மரக்கறிச்சந்தை

யாழ்ப்பாணம் ,ஓக.16

யாழ்.நகரின் மரக்கறி விற்பனைச் சந்தை இரவு நேரத்திலும் தற்போது களை கட்டியுள்ளது.

இதனால் மரக்கறிச் சந்தைப் பகுதிக்கு தற்போது கூடுதலாக மின்குமிழ்களும் பொருத்தப்பட்டுள்ளன.

தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இரவு நேரங்களில் மேற்படி சந்தையில் மரக்கறிகளை அதிகளவில் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால் இரவில் சந்தைப் பகுதியில் சனநெரிசல் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அதனைவிடச் சந்தை வளாகத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விற்பனையும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. (எ-26)

# செவ்விளநீர் விலையேறியது

யாழ்ப்பாணம் ,ஓக.16

யாழ்.நகரில் செவ்விளநீருக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

முன்னர் 30 ரூபாவாக விற்கப்பட்ட செவ்விளநீரின் விலை தற்போது 70 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாள்களாகக் குடாநாட்டில் வெப்பமான காலநிலை நிலவி வருகின்றது.

இந்த வெப்பத்தைப் போக்குவதற்கும் தமது தாகத்தைத் தணிப்பதற்கும் மக்கள் செவ்விளநீரை அதிகளவில் வாங்கி அருந்தி வருகின்றனர்.

இதனாலேயே அவற்றின் விலை திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

# புலமைப்பரிசில் பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

சுன்னாகம் ,ஓக.16

எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கலந்துகொள்ளும் வலி காமம் வலய உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த சகல மேற்பார்வையாளர்களுக்கும், இணைப்பு நிலைய உத்தியோகத்தர் களுக்குமான இந்த அறிவுறுத்தற் கூட்டம் வலிகாமம் கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ-க)

# கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம் ,ஓக.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்து பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் உபதபாலகங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன. புற்றுநோய், காசநோய் போன்றவற்றுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் அவற்றை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளும் படி அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-314)

# பொலிஸாரின் நடவடிக்கையால் கண்சிமிட்டும் வாகனங்கள்

யாழ்ப்பாணம் ,ஓக.16

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் இரவு வேளையில் ''பார்க் லைற்'' இன்றி வாகனத்தை நிறுத்திவிட்டுச் செல்வோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வாகனங்களை நிறுத்தி 'பார்க் லைற்' போடாத வாகன உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலிஸாரின் இந்தத் திடீர் நடவடிக்கையால் நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இரவில் வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்கள் கடந்த சில நாள்களாகப் ''பார்க் லைற்றுடன்'' கண்சிமிட்டுவதைக் காண முடிகின்றது. (எ-26)




# சீர் செய்து தாருங்கள்!

கொழும்புத்துறை ,ஓக.16

சுண்டுக்குளி விதானையார் வீதியில் உள்ள மின்விளக்குகள் சீராக ஒளிராமையால் அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களைச் சந்திப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளைகளில் இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாகவும் வீதியில் உள்ள குழிகளில் விழுந்து காயங்கள் ஏற்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி விளக்குகளையும் வீதியின் சேதத்தையும் சீர்செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-135)

# வளலாயில் மீள்குடியேறியோருக்கான அபிவிருத்தித் திட்டங்கள் முடக்கம்

## கண்ணிவெடியற்ற பிரதேசமாக அறிவிக்காததால் இந்த நிலை

யாழ்ப்பாணம் ,ஓக.16

உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வளலாய் பிரதேசத்தில், இராணுவ முன்னணி நிலைகளிலிருந்து 300 மீற்றர் வரையிலான பிரதேசம் கண்ணிவெடியற்ற பிரதேசம் என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் இதுவரை வழங்கப்படாமையால் அப்பகுதி மக்களுக்கான பல அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வளலாயில் இதுவரை காலமும் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அதில் 300 மீற்றர் தூரம் வரையான பிரதேசம் கண்ணிவெடியற்ற பிரதேசமாக உறுதிப்படுத்தப்பட்டு இராணுவத்தினரால் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். எனினும் எஞ்சிய 300 மீற்றர் தூரம் வரையிலான பகுதி கண்ணிவெடியற்ற பிரதேசமாக இதுவரை உறுதிப்படுத்தப்படாத காரணத்தினால் அங்கு மக்களை மீளக் குடியமர வேண்டாம் என பிரதேச செயலகத்தாலும், மாவட்ட செயலகத்தாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதையும் மீறி மக்கள் சிலர் அப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

ஆயினும் குறித்த பகுதி கண்ணிவெடியற்ற பகுதியென இதுவரை சான்றிதழ் வழங்கப்படாமையால் குடியேறிய மக்களுக்கான உதவிகளை வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கான வீட்டுத்திட்டம் மற்றும் நிவாரண பொருள் விநியோகம் என்பவற்றையும் மேற்கொள்ள முடியாமலிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனால் உடனடியாக இப்பிரதேசத்தினை ஆராய்ந்து கண்ணிவெடியற்ற பிரதேசமாக உறுதிப்படுத்தினால் மக்களுக்கான உதவித்திட்டங்களை மேற்கொள்ள முடியுமென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-319)



வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 88 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா முன்பள்ளி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும், சமாசத்தலைவர் த.சிவலிங்கம், பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இருபடங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்: டிலீப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

மழலைகளின் முதற்தெரிவு புலமைச்சுடரே

தொடர் 07

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010



**வளவாளர்கள்:**
மாணவர் சமூகத்தின் பாராட்டுக்குரிய எமது தேசிய ஆசிரியர்கள்
திரு.சண்.சுதர்ஷன், ரிஷானா ஹில்மி கண்டி.



| வினாத்தாள் I | 45 நிமிடங்கள் |
|---|---|
| சுட்டெண் | புள்ளிகள் |

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. பாடலில் விவரிக்கப்படும் பிராணியைத் தெரிவுசெய்க.
நெட்டையான காலுடனே
நீளமான கழுத்துடனே
சுட்டுப் பொசுக்கும் மண்லில் கூடச்
சுமைகள் தூக்கிச் செல்லும்.



1) 2) 3)

02. தரப்பட்ட கூற்றுகளுக்கு பொருத்தமான விஞ்ஞானியைத் தெரிவுசெய்க.
* பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.
* நொதித்தல் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்.
* விசர்நாய்த் தடுப்பு மருந்தை கண்டுபிடித்தவர்.




1) 2) 3)

* கீழேயுள்ள வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

03. திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் அதன்படி,
1) திருமணத்தில் ஆண்கள் கலந்துகொள்ளவில்லை.
2) திருமணத்தில் பெண்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.
3) திருமணத்தில் ஆண்களும் கலந்துகொண்டனர்.

04. பாடசாலைக்கு வடக்கே சந்தை உள்ளது. சந்தைக்கு கிழக்கே வங்கி உள்ளது. அதன்படி,
1) பாடசாலைக்கு வடகிழக்கே வங்கி உள்ளது.
2) சந்தைக்கு வடக்கே வங்கி உள்ளது.
3) பாடசாலைக்கு கிழக்கே சந்தை உள்ளது.

05. இந்த உருக்களின் நிரலிலே அடுத்து வரவேண்டிய பொருத்தமான உருவின் கீழ்க் கோடிடுக.




1) 2) 3)

06. ஒரு பிள்ளை பட்டம் ஒன்றைச்செய்து வானத்தில் பறக்கவிடும்போது நூல் அறுந்து பட்டம் காற்றில் இழுத்துச் செல்லப்படும் முறையினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங் களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.



1) 2, 5, 1, 3, 4 2) 5, 2, 1, 4, 3 3) 1, 3, 5, 4, 2

07. 



அடுத்தடுத்து அமைந்துள்ள பகுதிகள் இரண்டில் ஒரே வர்ணம் அமையா வண்ணம் A,B பகுதிகளுக்கு பயன்படுத்த வேண்டிய வர்ணவகைகள் முறையே,
1) மஞ்சள், சிவப்பு 2) நீலம், பச்சை
3) பச்சை, மஞ்சள்

08. மீனா, தேவி, ராகவி, ஆரணி என்னும் நான்கு மாணவிகள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றினர். ராகவி, மீனாவை விட வேகமாக ஓடிய போதிலும் ஆரணிக்கு பின்னாலே ஓடினாள். எனினும், தேவி, மீனாவை விட வேகமாக ஓடவில்லை. மாணவர்கள் போட்டியை முடித்த ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிக.
1) ராகவி, தேவி, ஆரணி, மீனா 2) ஆரணி, தேவி, மீனா, ராகவி
3) ஆரணி, ராகவி, மீனா, தேவி

09.

| | | | |
|---|---|---|---|
| 3 | 6 | 9 | 12 |
| 5 | 10 | | 20 |
| 6 | | | 24 |
| 8 | 16 | 24 | 32 |


எண் ஒழுங்குக்கு ஏற்ப அமைந்த விடையைத் தெரிவுசெய்க.




1) 2) 3)

10. தனுசன் பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பவற்றைப் பின்வருமாறு கூறினான். நான் பிறந்த வருடத்தை நூறால் பிரித்தால் பிறந்த திகதியும், பிறந்த திகதியை நான்கால் பிரித்தால் பிறந்த மாதமும் வரும் எனக் கூறினான். தனுசன் பிறந்த வருடம், மாதம், திகதி என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடை யாது?
1) 2000 ஆம் வருடம் 05 ஆம் மாதம் 20 ஆம் திகதி.
2) 2002 ஆம் ஆண்டு 04 ஆம் மாதம் 05 ஆம் திகதி.
3) 2008 ஆம் வருடம் 07 ஆம் மாதம் 23 ஆம் திகதி.

11. தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் சதுரமுகி ஒன்றைச் செய்ய முடியும். இந்த சதுரமுகியின் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை ஏழு ஆகும். அவ்வாறு அமைந்த வெட்டுருவைத் தெரிவுசெய்க.




1) 2) 3)

* பாடசாலை விடுமுறை முடிவடைவதற்கு இன்னும் சில நாட்களே உள்ளன. விடுமுறைக் காலத்தை விளையாட்டுக்களில் கழிப்பதற்கு கிடைத்தமை என்னை மகிழ்ச்சி அடையச்செய்தது. விடுமுறை ஆரம்பித்த தினத்திலேயே நான் அப்பா வுடன் எனது கிராமத்துக்கு வந்தேன். அடுத்த நாள் தொடக்கம் கிராமத்தில் உள்ள பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் ஒன்றாக கல்விகற்ற நண்பர்களோடு இணைந்து அயலில் உள்ள தோட்டங்களில் உலாவித் திரிந்தும்,பழங்களைப் பறித்தும், விளை யாடியும் கழித்த நாட்கள் இன்னும் ஓரிரு நாட்களில் முடிவு பெறுவதை நினைக்கும் போது எனக்கு வேதனையாக உள்ளது. மீண்டும் நகரத்திற்குச் செல்லவேண்டும். இன்னும் மூன்று மாதங்கள் கழியும் வரை இத்தகைய மகிழ்ச்சியான காலம் ஏற்பட மாட்டாது.


12. இவ் விவரணத்தில் குறிக்கப்படும் பிள்ளை பற்றிய கூற்று எது?
1) அவர் முதலாம் தரத்தில் இருந்து நகர்ப்புறப் பாடசாலை ஒன்றில் கல்வி பெறுகிறார்.
2) கிராமப் பாடசாலை ஒன்றில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கும் ஒருவர் ஆவார்.
3) அவர் நகர்ப்புறப்பாடசாலை ஒன்றில் படித்த பின்னர் கிராமப் புறப்பாடசாலை ஒன்றில் படிக்கிறார்.

13. முதலில் தரப்பட்ட உருவுடன் நெருங்கிய தொடர்புடைய உருவைத் தெரிந்து கோடிடுக.



1) 2) 3)

* நிமால் வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்ற வழி கீழே காட்டப்பட்டுள்ளது




14. வீட்டிலிருந்து பாடசாலைக்கு அவன் சென்ற திசைகளைக் குறிக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க
1) கிழக்கு, வடக்கு, வடகிழக்கு
2) மேற்கு, தெற்கு, தென்கிழக்கு
3) கிழக்கு, வடக்கு, தென்கிழக்கு

* உருக்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவுசெய்க.





15. பின்வரும் உரு எதனைக் குறிக்கிறது.



1) கபிலன் மாலையில் பாடசாலையை நோக்கிச் சென்றான்.
2) கமலா இரவில் வீடு நோக்கி வருதல்.
3) கமலா மாலையில் மைதானம் நோக்கி சென்றாள்.

* 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. 



மூன்று கனவுருக்குற்றிகள் ஒன்றின் மீது ஒன்று அடுக்கப்பட்டுள்ளன. மூன்று கனவுருக்குற்றிகளின் மொத்த உயரம் 136 cm எனின், நடுவில் உள்ள கனவு ருக்குற்றியின் உயரம் யாது? ..........................

17. நான் ஹட்டன் மேட்டு நிலத்திலே உற்பத்தியாகி திருகோணமலைக் கடலை சென்றடைகிறேன். இலங்கையில் உள்ள மிகப்பெரிய நதி என்ற பெருமை உடையவன், நான் விவசாயச் செய்கைக்கு மட்டுமன்றி மக்களின் குடி தண்ணீர்த் தேவையையும் பூர்த்தி செய்கிறேன். நான் யார்?


..........................

18. 


சந்தி ஒன்றில் காணப்பட்ட நகரங்களுக்கிடையிலான தூரங்களைக் காட்டும் அமைப்பு தரப்பட்டுள்ளது. இதன்படி சாவகச்சேரியில் இருந்து ஒருவர் இச்சந்தியின் ஊடாக மானிப்பாய் சென்று மீண்டும் அவ்வழியாகவே சாவகச்சேரியை அடைந்தார் எனின், அவர் பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?

19. 


மூன்றாவது தராசு காட்டும் நிறை யாது? ..........................

20) 


சந்தியா தனது நண்பியுடன் உரையாடுவதற்காக நண்பியின் 10 இலக்க தொலைபேசி இலக்கத்தைத் தனது தொலை பேசியில் பதிவுசெய்த முறைகீழே தரப்பட்டுள்ளது. பூச்சியத்தை அழுத்தி இலக்கம் 5 இற்கு கிழக்கே உள்ள இலக்கத்தை இரண்டு முறை அழுத்தினாள். பின் 5 இற்கு வடக்கேயுள்ள இலக்கத்தை மூன்று முறை அழுத்தினாள். பின் 2 இற்கு மேற்கேயுள்ள இலக்கத்தை இரண்டு முறை அழுத்தி இறுதியாக 9 ஐ இரண்டு முறை அழுத்தி உரையாடினாள் எனின், நண்பியின் தொலை பேசி இலக்கம் யாது?

..........................

21. நாவலர் வித்தியாலயம் 2009 ஆம் ஆண்டு தனது பவளவிழாவைக் கொண்டாடியது. எனின், நாவலர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1) 1959 ஆம் ஆண்டு. 2) 1965 ஆம் ஆண்டு 3) 1934 ஆம் ஆண்டு

22. இப்படத்தில்
1) பெண் ஒருத்தி நீர் அள்ளச் செல்கிறாள்.
2) பெண் ஒருத்தி நீரை அள்ளிக் கொண்டு செல்கிறாள்.
3) பெண் ஒருத்தி குடம் ஒன்றைக் கொண்டு செல்கிறாள்.



23. இந்த உலகில் நீங்கள் இயற்றும் தொண்டில் எல்லாம் தந்தை, தாயைப் பேணும் தருமம் ஒன்றே பெரியது.
இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை, தாயை பேணும்
தருமம் ஒன்றே பெரியது
இப்பாடல் பகுதியுடன் தொடர்புடைய முதுமொழியைத் தெரிவுசெய்க.
1) அறம் செய்ய விரும்பு. 2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3) அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலவு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழ் மென்பொருள் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் நிலவு நிறுவன நிர்வாக இயக்குனர் சி.அனுராஜ் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம், தென்மராட்சி கல்வி வலயங்களின் தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எஸ்.ஜெயக்குமார், ரி.தர்மதாஸ் உள்ளிட்டோர் நிகழ்வில் ஆரம்பத்தில் மௌன வணக்கம் செலுத்துவதை இரண்டாம் படத்திலும் தமிழ் மென்பொருள்களை பெற்றுக் கொள்வதற்கான வேண்டுதலை யாழ். கல்வி வலய தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ்.ஜெயக்குமார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கையளிப்பதனையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர் மென் பொருள்களை கொள்வனவு செய்வதனையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: ரட்ணம்)

# அகில இலங்கைத் தெங்குச் செய்கையாளர் சங்கத்துடன் வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் இணைய முடிவு!

கொழும்புத்துறை,ஓக. 16

வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் அகில இலங்கை தெங்குச் செய்கையாளர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்று இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளது.

அண்மையில் பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாண தெங்குச் செய்கையாளர் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பளை உதவி அரசாங்க அதிபர், பளைப் பகுதி கட்டளைத் தளபதி, தெங்குப் பயிர்ச் செய்கை சபை முகாமையாளர், பிரதேச சபை செயலாளர் ஆகியோர் பங்கு பற்றினர்.

தெங்குச் செய்கையாளர் சங்கத்தை பளைப் பிரதேச சபை அலுவலகத்தில் தற்காலிகமாக இயக்குவதற்கும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய அலுவலகத்தில் அங்கத்தவர் படிவத்தையும் இலவச மானியப் படிவத்தையும் பெற்று தங்கள் விண்ணப்பத்தை ஒப்படைக்குமாறு தெங்கு செய்கையாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை பளைப் பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தென்னந்தோட்டங்களை உரியவர்களிடம் கையளிக்க பாதுகாப்பு தரப்பினர் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டங்களின் வேலிகளை சீர் செய்வதற்கு குறைந்த விலையில் கம்பிக் கட்டைகளை பெற்று வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

(த-135)




# கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

இலங்கை வங்கியில் தொடர்ச்சியாக 25 வருடங்கள் சேவையாற்றிய வங்கி ஊழியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 25 வருடங்களா நிறைவு செய்த இலங்கை வங்கிப் பணியாளர்களும் கௌரவிப்பு பெறவுள்ளனர்.

(எ-26)

# உபதபால் நிலையங்களின் அசட்டையால் பாதிப்புறும் மின் பாவனையாளர்கள்

யாழ்ப்பாணம்,ஓக. 16


யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான உபதபால் நிலையங்களில் செலுத்தப்படும் மின்சாரக் கட்டணம் உரிய காலத்துக்குள் மின்சாரசபைக்கு கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உப தபால் நிலையங்களில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தியும் அவை மின்சார சபைக்குக் கிடைக்காததனால் தமது மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

ஆகையால் மின் விநியோகக் கட்டணத்தை உபதபால் நிலையங்கள் உரிய காலப்பகுதிக்கு முன்னர் மின்சார சபைக்கு அனுப்பி வைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-26)

# குப்பைகளைக் கட்டுப்படுத்த முற்றவெளியில் புதிய ஏற்பாடு



யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்.முற்றவெளியில் கழிவுப் பொருள்களை போடுவதற்கென அமைவிடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநகரசபைத் தொழிலாளர்களால் இப்பகுதிகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகள் குறித்த குப்பைகள் இடும் அமைவிடத்தில் போடப்பட்டு வருகின்றன.

கால்நடைகள் கழிவுப் பொருள்களை உண்ணாதவகையில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிவுகள் இடப்படும் அமைவிடத்தில் போடப்படும் குப்பைகள் பின்னர் உழவு இயந்திரங்கள் மூலம் வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டும் வருகின் றன.

(எ-26)

# பெருகத் தொடங்கும் பிளாஸ்ரிக் விற்பனை

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்.மாவட்டத்தில் தற்போது பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருள்களின் விற்பனை சூடு பிடித்துள்ளது.

குடாநாட்டிலுள்ள பிரசித்தமான ஆலயங்களின் பெருந்திருவிழாக்கள் தொடங்கியிருப்பதால் தென்பகுதி வியாபாரிகள் வாகனங்களில் பல விதமான பிளாஸ்ரிக் பொருள்களை விற்பனைக்காகக் கொண்டு வந்துள்ளனர்.

டெங்கு ஒழிப்பினை முன்னிட்டு பல தரப்பட்ட மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சூழலில் இவ்வகையான பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையதிகரிப்பால் சூழல் மாசடையும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பாக கோயில்கள், சந்தைகள் பொதுச் சந்திகள் போன்ற இடங்களில் பிளாஸ்ரிக் பொருள்களுக்குரிய வியாபார நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

மலிவு விலைகளில் இவை கிடைப்பதால் பிளாஸ்ரிக் பொருள்களை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதாகவும் கூறப்படுகிறது.

(எ-313)

# ரம்ழான் சிந்தனை

'ரம்ழான்' மாதத்தில் நோன்பு நோற்பது அனைத்து முஸ்லிம்களது கட்டாய கடமையாகும். இதனால் அல்லாஹ்த்தாலா பின்வருமாறு 'குர்ஆனில்' கூறுகிறான். "இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இதனைப் பின்பற்றி இறையனுபவமுள்ளவர்காக வாழுங்கள்.

# இராச வீதி புனரமைப்பு

நாவற்குழி,ஓக.16

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் கோப்பாய் இராசவீதி புனரமைக்கப்பட உள்ளது.

இவ் வீதியைப் புனரமைக்குமாறு பொது மக்கள் விடுத்து வரும் கோரிக்கை இதன் மூலம் நிறைவேற உள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கும் அச்சுவேலி, வடமராட்சி பிரதேசங்களுக்குமான போக்குவரத்தில் இலகுத் தன்மை ஏற்பட உள்ளது எனக் கூறப்படுகின்றது.

(எ-121)

# கூட்டுறவு தினப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

கொழும்புத்துறை,ஓக. 16

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் 88 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**பேச்சு**

முதலாமிடம் - ம.கார்த்தீபன் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம், 2 ஆம் இடம் - எஸ்.யேசுராஜா (யாழ்.பல.நோ.கூ.சங்கம்), 3 ஆம் இடம் - மா.தங்கவேல் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

**கவிதை**

முதலாமிடம் - கி.வரதராசன் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 2 ஆம் இடம் -பி.பிரேமதாஸ் (வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி), 3 ஆம் இடம் - ஆ.தர்மபாலன் (சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

**வினாடி வினா**

முதலாமிடம் - கி.வரதராசன் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 2 ஆம் இடம் - ஜெ.கனகாம்பிகை (யா.மா.சி.க.வழங்கு கூ.சங்கம்), 3 ஆம் இடம் - எஸ்.யேசுராஜா (யாழ்.பல.நோ.கூ.சங்கம்).

**கட்டுரை**

முதலாமிடம் - கே.கௌரிதாசன் (யா.மா.சி.க.வ.கூ.சங்க சமாசம்), 2 ஆம் இடம் - ஜே.தயாபரன் (யா.மா.சி.க.வ.கூ.சங்க சமாசம்), 3 ஆம் இடம் - ப.சுதாகரன் (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), க.பார்த்தீபன் (மானிப்பாய் பல நோ.கூ.சங்கம்),

**பாலர் பாடசாலை குழு நடனம்**

முதலாமிடம் - ஸ்ரீ.அம்பாள் முன்பள்ளி (மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 2 ஆம் இடம் - முற்போக்கு முன்பள்ளி (சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்), 3 ஆம் இடம் -ஸ்ரீ முருகன் முன்பள்ளி (காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்).

**கேக் ஐசிங்**

முதலாமிடம் - வ.கிரேமிலா (யாழ்.மா.கூ.சபை), 2 ஆம் இடம் - க.கஜந்தினி (யாழ்.மா.கூ.சபை), 3 ஆம் இடம் - தி.தவரஞ்சினி (உடுப்பிட்டி பல.நோ.கூ.சங்கம்), க.ரதிகா (யாழ்.மா.கூ.சபை).

**கட்டுரை - கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி**

முதலாமிடம் - ந.புவனா, 2 ஆம் இடம் - எஸ்.குணச்சித்திரா, 3 ஆம் இடம் - ஏ.சுனேஸ்கா.

**நாடகம்**

முதலாமிடம் - சாவகச்சேரி பல நோ.கூ.சங்கம், 2 ஆம் இடம் - [illegible] பல.நோ.கூ.சங்கம்.

(எ-135)

# மணிக்கூட்டு கோபுரத்துக்கு மீண்டும் 'சனி' பிடித்தது!



யாழ்ப்பாணம்,ஓக. 16

யாழ்.மணிக்கூட்டு கோபுரத்துக்கு கடந்த சனிக்கிழமை முதல் வழமைபோல மீண்டும் நோய் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதமளவில் மணிக் கூட்டு கோபுரத்திலுள்ள டிஜிற்றல் கடிகாரம் பழுதடைந்து சில நாள்களின் பின்னர் திருத்தப்பட்டு இயங்க ஆரம்பித்தது.

தற்போது மீண்டும் இக் கடிகாரம் பழுதடைந்துள்ளது.

இவ்வாறு மாதத்துக்கு ஒரு தடவை 'சனி' பிடித்து இக்கடிகாரம் [illegible]. எனவே கடிகாரத்தின் நோயை நிரந்தரமாகக் [illegible] - தொடர்ச்சியாக இயங்க வைக்க - உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

## வருடாந்த மஹோற்சவம் - 2010

### தற்காலிக கடை இட ஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 08.09.2010 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கோயிற் தலத்தில் மஹோற்சவ காலத்தில் தற்காலிகமாக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கம் செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாக பின்வரும் வகையில் அமையும்.

1. குளிர்களி (ஐஸ்கிறீம்)
2. இனிப்புவகை
3. தேநீர்க் கடை
4. மணிக்கடை
5. கச்சான் கடலை

முக்கிய குறிப்பு:- முதல் மூன்று தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறு விலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.

அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தைப்பெற்று தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாகச் செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

விவரங்கள் வழங்கவேண்டிய படிவங்களை கோயில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 28.08.2010 வரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏலம் போடும் நாள் 28.08.2010 சனிக்கிழமை முற்பகல் 10 மணி.

தொலைபேசி: 021 226 3074,
021 321 0983

துன்னாலை வடக்கு,
புலோலி. (சி/569770) அறங்காவலர் சபை.


# திருமலை நகர சபையின் தலைவர் பதவிநீக்கம்

திருகோணமலை, ஓக.16

திருகோணமலை நகர சபைத் தலைவர் எஸ்.கௌரிமுகுந்தன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நேற்று முன்தினம் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அறிவித்துள்ளார்.

அவர் மீது இடம்பெறும் மோசடி தொடர்பான விசாரணைகளுக்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

பதவிநீக்கம் தொடர்பாக முதலமைச்சர் அறிவித்துள்ளார் எனத் தெரிவித்த கௌரிமுகுந்தன், தன்மீது சுமத்தப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று தெரிவித்தார்.

பதவி நீக்கிய விடயத்தை நீதிமன்றுக்குக் கொண்டு செல்ல இருப்பதாகவும் அவர் கூறினார். (ஒ-ஐ)

# புதுமாத்தளன் ஷெல்களின் சிதறல்கள் அகற்றப்பட்டன

தென்மராட்சி, ஓக. 16

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களின்போது காயமடைந்த பெண் உட்பட மூவரின் உடலில் புதைந்து மறைந்திருந்த ஷெல் சிதறல்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறு சத்திர சிகிச்சைப் பிரிவில் அகற்றப்பட்டன.

எம்.மயூரன் (வயது 31) என்பவருக்கு மண்டையோட்டிலும், சசிகரன் (வயது 30) என்பவருக்குத் தொடையிலும், ரஜனி (வயது 30) என்பவருக்குக் கையிலும் இருந்த ஷெல் சிதறல்களே கடந்த புதன் கிழமை வெளியில் எடுக்கப்பட்டன.

வைத்தியசாலை சிறு சத்திர சிகிச்சைப் பிரிவில் துப்பாக்கி ரவைகள், ஷெல் சிதறல்கள் போன்றவை முன்னரும் அகற்றப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

# வலி.கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில்

வலி.கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வீதிகள் மற்றும் பொது நிறுவனக் கட்டடங்கள் என்பன இதன் மூலம் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த புனர்நிர்மாணப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஊரெழு பிள்ளையார் வீதி, நீர்வேலி கேராளிவத்தை வீதி, கோப்பாய் பெரிய புலம் வீதி, பத்தமேனி, பாரதி வீதி, உரும்பிராய், சேமப்புலம் வீதி, உரும்பிராய் சிவன் வீதி, நீர்வேலி கேராளிவத்தை முதலாம் இணைப்பு வீதி ஆகிய வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

அதனைவிட நீர்வேலி ஆயுள்வேத வைத்திய நிலையம், உரும்பிராய் உப அலுவலகம் மற்றும் நூலகம், புத்தூர் ஆயுள்வேத வைத்திய நிலையம், புத்தூர் விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், அச்செழு வளர்மதி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி கலைமகள் சனசமூக நிலையம், கோப்பாய் காந்தி சனசமூக நிலையம் போன்ற கட்டடங்களும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இந்தப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (எ-26)


## அமோக விற்பனையில்

தரம் 5 மாணவர்களுக்கு




வெற்றித்தேர்வு ஆசிரியர்
திருகோணமலை
எஸ்.கணேசலிங்கத்தின்
32 பக்கங்களைக் கொண்ட
எதிர்பார்க்கை வினாக்கள்
அடங்கிய புலமைப்பரிசில்
இறுதிக் கருத்தரங்கின்
விஷேட கையேடு...
(விடைத்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம், சாவகச்சேரி
நல்லூர்த் திருவிழாவின் விஷேட விற்பனைச்சாலையிலும்...
கிளிநொச்சியில் - அறிவுநதி புத்தகசாலை
வெளியீடு - யுனிலங்காஸ் 32, சென். அன்ரனீஸ் மாவத்தை, கொழும்பு 13. 0776258778



## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 562
திகதி 2010/08/14

சுப்பர் இலக்கம்: 12
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 25 28 62 64

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின | ரூ. 28,924,905.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 08 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 238 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 445 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 11,370 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 6,563 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 163,473 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 26,203 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,514,040.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 29,161,725.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


## மரண அறிவித்தல்

### திருமதி இராயப்பு அன்னம்மா



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் புதுவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராயப்பு நேற்று (15.08.2010) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்புவின் அன்பு மனைவியும் பிரான்சிஸ் (உரிமையாளர், சாறிசென்ரர், லூட்ஸ் பான்சி), காலஞ்சென்ற தமேந்திரன் பௌலின் மேரி மற்றும் பொலின் வைலற், மரியநாயகம் (பிரான்ஸ்), றீற்ரா ரஞ்சினி தேவி (பிரான்ஸ்), ஜெனற் ரோகினி (ஜேர்மனி), ராஜினி, பிறேமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தமேந்திரன் மற்றும் ஸ்ரெலா, மலர், நவரெட்ணராஜா (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், மாநகரசபை), அன்ரன், யேசுதாசன், வின்சன், விஜயன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.47, முதலாம் ஒழுங்கை, புது வீதி, கொய்யாத்தோட்டத்தில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து இன்று (16.08.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சம்பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, புது வீதி, (101936)
கொய்யாத்தோட்டம், யாழ்.

தகவல்: R.பிரான்சிஸ் (மகன்)
021 321 9933

## தவறிவிட்டது

26/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பரமேஸ்வரி பஸ்ரியன் செல்வநாயகம் என்பவரது தேசிய அ.அட்டை (626182780V) கண்டி வீதிக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.7, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P.: 0776536623

## மரண அறிவித்தல்

### திருமதி கேசவநாதன் பாக்கியலட்சுமி



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கேசவநாதன் பாக்கியலட்சுமி கடந்த (14.08.2010) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா கேசவநாதனின் அருமை மனைவியும் முருகதாஸ், கேமதாஸ் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாம்பிகை, யோகலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் பராசக்தி (சுவிஸ்), தேவராசா (ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, சின்னராசா மற்றும் நாகம்மா (ஓய்வுபெற்ற அதிபர்), குலசிங்கம் (J.P), பரமநாதர், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மயூரி, மதுசானா, தேனுஜா, தனுசன் (நோர்வே), டில்லியா (நோர்வே), காஞ்சீலன் (சுவிஸ்), கபிலன் (லண்டன்), கார்த்திகா (லண்டன்), நிருத்திகா (லண்டன்), கௌசிகா (லண்டன்), சிந்தூரி (சுவிஸ்), சிந்துஜன் (சுவிஸ்), சிந்துஜா (சுவிஸ்), சுஸ்மிதா (சுவிஸ்), ஜஸ்மிதா (சுவிஸ்), டிதூசன், றதுஷன், அரண்யா (ஜேர்மனி), அக்சயா (ஜேர்மனி), அபிநயா (ஜேர்மனி), சிவரூபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவம் (காலி), மோகனேஸ்வரி, காலஞ்சென்ற சிவரூபன் (சுவிஸ்), ரூபா (லண்டன்), Dr.ராதா, சாந்தலிங்கம் (சுவிஸ்), வரதலட்சுமி (லண்டன்), தேவராணி (சுவிஸ்), ரதி (சுவிஸ்), கேதீஸ்வரன் (கனடா), அகிலராணி (ஆசிரியை), இராஜேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (லண்டன்), கவிதா (ஆசிரியை), றேணுகா (ஜேர்மனி), நிலானி (லண்டன்), ஸ்ரீரங்கன் (ஜேர்மனி), மோகன், கிரிஷா (லண்டன்), ஜெயக்குமார் (காலி), அருள்மதி, அருள்மதன், அருள்நிதி ஆகியோரின் அன்பு மாமியும் விஜயலட்சுமி (சுவிஸ்), திருவிளங்கம் (லண்டன்), திருச்செல்வம் (சுவிஸ்), திருக்குமார் (சுவிஸ்), திலீபன் (அதிபர்), சுஜீவன் (ஜேர்மனி), ஹர்சன் (லண்டன்), ரகுமார், சுமதி (ஜேர்மனி), இந்திரா, மணிவண்ணன் (லண்டன்), அனுசியா (காலி) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் விஜயலட்சுமி, குலசிங்கம் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 021 222 1817, 0779024365 (102048)

தகவல்:
கே.முருகதாஸ், கே.கேமதாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கத்தைப் புறக்கணித்த போதும் சம்பளத்திலிருந்து சந்தாப் பணம் அறவீடு

## மஸ்கெலியாவில் தொழிலாளர்கள் ஆட்சேபம்

நுவரெலியா,ஓக.16

மஸ்கெலியா பிளான்டேஷனுக்குச் சொந்தமான ஹப்புகஸ்தன்னைத் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஜூன் மாதம் தோட்ட நிர்வாகிக்கு எதிராக 22 நாட்கள் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர்.

எனினும், போராட்டத்திற்கு தொழிற் சங்கங்கள் சரியான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும், பக்கசார்பாக நடந்து கொண்டன என்றும் தெரிவித்த தொழிலாளர்கள் தாம் குறிப்பிட்ட தொழிற் சங்கங்களின் அங்கத்துவத்திலிருந்து விலகுகிறார்கள் என அறிவித்திருந்தனர்.

தமது அங்கத்துவத்தை விலக்கிக் கொள்வதற்கான கடிதங்களையும் அவர்கள் அனுப்பியிருந்தனர்

இவ்வாறு அறிவித்திருக்கும் நிலையில் குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் தமது சம்பளங்களிலிருந்து சந்தாப்பணத்தை அறவிட்டுள்ளது எனத் தொழிலாளர் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதனிடமும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தெரிவித்த அவர் இவ்விடயம் தொடர்பில் தோட்ட முகாமைத்துவத்திற்கும், தொழில் அமைச்சுக்கும் மற்றும் தொழில் ஆணையாளருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன - எனத் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளி ஒருவரின் சம்பளத்திலிருந்து சந்தாப்பணமாக மாதமொன்றுக்கு 85 ரூபா அறவிடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ளி)

# பெரஹராவில் பங்குபற்றும் யானைகளுக்கு பரிசோதனை

கண்டி, ஓக.16

வரலாற்றுப் புகழ்மிக்க கண்டி எசல பெரஹராவில் கலந்துகொள்ளும் யானைகள் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

அவற்றின் திருப்திகரமான நிலை கண்ட பின்னரே அவை ஊர்வலத்தில் ஈடுபடுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் கலைஞர்களும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ளி)

# நெல் கொள்வனவுக்கு அரசிடம் உருப்படியான திட்டம் இல்லை

## மாத்தளை மாவட்ட விவசாயிகள் விசனம்

மாத்தளை,ஓக. 16

மாத்தளை மாவட்டத்தில் தற்சமயம் அறுவடை செய்யப்பட்டுவரும் நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என மாத்தளை மாவட்ட ஒன்றிணைந்த விவசாயிகள் அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விவசாயிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் பேச்சாளர் விபுல ரத்நாயக்க தெரிவித்தவை வருமாறு:-

இம்மாவட்டத்தில் கந்தலம், மினிப்பே, 3 - 4 திட்டம், தேவஹூவ, ஹூருளு திட்டம், பெல்லன்ஓய, வேமடில்ல, நாலந்த நீர்த்தேக்கம் ஆகிய பகுதிகளில் இம்முறை சிறுபோகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல் அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

எனினும், விவசாயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செய்ய எவ்வித ஒழுங்குகளையும் அரசு மேற்கொள்ளாததால் இடைத்தரகர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தனியார் வியாபாரிகள் நாட்டரிசி நெல் கிலோவொன்றுக்கு ரூபா 16 தொடக்கம் 17 வரையும், சம்பா கிலோவொன்றுக்கு 25-26 ரூபா வரையுமே விலை நிர்ணயிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் தம்புள்ளையில் நெல் விளைச்சல் மேற்கொள்ளப்படவில்லை என்றும், மாத்தளை மாவட்டத்தில் அறுவடை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் நெல் சந்தைப்படுத்தும் சபைத் தலைவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு வழங்கிய தகவலை விவசாயிகள் அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த பெரும்போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் அரிசியாக்கப்படாமல் இன்னும் களஞ்சியசாலைகளில் தேங்கிக் கிடக்கிறது. கொழும்பில் குளிர் அறையில் இருந்து கொண்டு ஊடகங்களுக்கு தவறான செய்திகளை கொடுத்துக் கொண்டிருப்பதை விடுத்து சம்பந்தப்பட்ட பிரதேசத்துக்கு நேரடியாக விஜயம் செய்து உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டும்.

இதுவே பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரியின் கடமை. நெல் கொள்வனவு சபைக்கு சொந்தமான தம்புள்ள, கந்தலம, பெல்வேஹர களஞ்சியசாலைகள் மூன்று வருடக்கணக்காக காடுமண்டி கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பதே விவசாயிகள் இப்போது முகம்கொடுக்கும் பாரிய இக்கட்டுகளுக்கு பிரதானக் காரணம் - இப்படி விபுல ரத்நாயக்க தெரிவித்தார். (ளி)

# கொழுந்து பறித்தவர்கள்மீது கல்வீச்சு நாக்குவத்தை தோட்டத்தில் 10 பேர் காயம்

நுவரெலியா,ஓக.16

மஸ்கெலியா மறே தோட்டத்திலிருந்து தூக்குவத்தை தோட்டத்திற்கு கொழுந்து பறிக்கச் சென்ற தொழிலாளர் கள் மீது அதே தோட்டத்தைச் சேர்ந்தவர் களால் கல்வீச்சு மேற்கொள்ளப்பட் டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வீச்சில் காயமடைந்த பத்து தொழிலாளர்கள் உடனடியாக மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வேறு டிவிஷன் தொழிலாளர்கள் இங்கு வந்து கொழுந்து பறிக்கும் பட்சத்தில் தமக்கு வேலை இல்லாமல் போகும் என்ற அச்சத்திலேயே தொழிலாளர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நல்லதண்ணீர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ளி)




# கண்ணகிபுரம் கரடிமலை வெடிவைத்து தகர்ப்பு தடுத்துநிறுத்தத் தவறியது ஆலையடிவேம்பு பிரதேசசபை

## குற்றம் சாட்டுகிறார் பியசேன எம்.பி.

அம்பாறை,ஓக.16

''அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்புப் பகுதியிலுள்ள கண்ணகிபுர கரடிமலை சட்டவிரோதமாக வெடிவைத்துத் தகர்க்கப்படுவதுடன், கண்டல்குழிப் பகுதிகள் மண்போட்டு நிரப்பும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் இடம்பெற்று வருகிறது. எனினும், ஆலையடிவேம்பு பிரதேசசபை இவ்வாறான விடயங்களில் அக்கறை செலுத்தாமல் உள்ளது.''

- இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆலையடிவேம்பு பிரதேசத்திற்குட்பட்ட கண்ணகிபுரத்திலுள்ள கரடிமலையை கடந்த சில மாதங்களாக சட்டவிரோதமான முறையில் வெடிவைத்துத் தகர்த்து கருங்கற்களை விற்பனை செய்து வருகிறது ஒரு கோஷ்டி. இந்தக் கோஷ்டி பிரதேசசபையின் அனுமதியின்றி சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக மக்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டுள்ளனர். இதற்குப் பிரதேசசபைதான் பொறுப்பு எனப் பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால், பிரதேச சபையினரோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இதேபோன்று கண்டல்குழி மற்றும் பட்டியடிப்பிட்டி நிலம் ஆகிய இடங்களை மண்போட்டு நிரப்பி வருகிறது மற்றொரு கும்பல்.

இந்நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதே அவர்களின் நோக்கமாகவுள்ளது. இதனை அருகிலுள்ள மக்கள் எழுத்து மூலம் பிரதேசசபை அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் நிர்வாகம் சீரழிந்து போயுள்ளது. இதனை உடனடியாகக் கலைத்து புதிய நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பிரதேச சபையின் அசமந்தப் போக்கால் காணி, நிலம் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. - இப்படி பியசேன எம்.பி. தெரிவித்தார். (ளி)

# நாமல்வத்தப் பகுதியில் குடியேறியவர்களுக்கு எவ்வித வசதிகளும் செய்யப்படவில்லை

திருகோணமலை,ஓக.16

திருகோணமலை மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாமல்வத்தப் பகுதியில் புதிதாகக் குடியேறிய தமக்கு எவ்வித வசதிகளும் செய்துகொடுக்கப்பட வில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு சிலருக்கு வீடுகள் வழங்கப்பட்டும், ஒரு சிலருக்கு வீடுகள் வழங்கப்படாமலும் உள்ளன. அத்துடன், பிரதேச செயலகத்தால் வழங்கப்படுகின்ற இருபத்தையாயிரம் ரூபா கூட வழங்கப்படவில்லை எனவும் அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(ளி)




# பிரேசில் நாட்டு இலங்கைக்கான தூதுவரை கிழக்கு முதலமைச்சர் சந்தித்துப் பேச்சு

திருகோணமலை,ஓக.16

இலங்கைக்கான பிரேசில் நாட்டுத் தூதுவர் வென்ரோ வெயாரிட்டோ கிழக்கு மாகாணத் துக்கு முதற்றடவையாக உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு திருகோணமலைக்கு கடந்த வியாழக் கிழமை வருகை தந்திருந்தார்.

இவ்விஜயத்தின்போது பிரேசில் தூதுவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தின் தற்போதைய அரசியல் நிலைவரம், யுத்தத்திற்குப் பின்னரான மக்களின் இயல்பு நிலைமை குறித்து முதலமைச்சரிடம் கேட்டு அறிந்து கொண்டார். அத்துடன், பிரேசில் நாட்டு முதலீட்டாளர்கள் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையிலும் சீனி உற்பத்தியிலும் முதலீடு மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளனர் எனவும் தூதுவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக மேம்பாட்டிற்கும் வெளிநாட்டு முதலீடு அவசியம் என்பதுடன் இது தொடர்பில் பிரேசில் நாட்டு முதலீட்டாளர்கள் வரவேற்கப்படுவார்கள் எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டார். இச்சந்திப்பின் போது முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம்.எம்.எம்.ஹன்ஸீர் கலந்துகொண்டார்.

(ளி)

# பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கு வீரமா நகரில் 40 வீடுகள் கையளிப்பு

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீரமா நகரில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்ட 40 வீடுகள் கடந்த வியாழக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை இடம்பெற்ற வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஜெனரல் ரஞ்சித் சில்வா கலந்துகொண்டார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கான வீடுகளை திருகோணமலை கரித்தாஸ் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.08.1993**

* இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்தவும் பொருளாதாரத் தடையை நீக்கவும் உதவுமாறு உலகத் தமிழர் இயக் கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டு கோள் விடுப்பு.

* யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக் கைதிகளின் உயிருக்கு ஊறு நேர்ந்தால் அதன் விளைவுகளை விடுதலைப் புலிகள் இயக்கமே ஏற்கவேண்டி வரும் என கூட்டுப் படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவிப்பு.

**17.08.1993**

* விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள சிங்கள யுத்தக் கைதிகளில் மற்றொருவர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பணிப்பின் பேரில் நேற்று விடுவிப்பு.

* விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவின் பெயர் முதலாவதாக இடம்பெற்றிருப்பதாக தேசிய உளவுப் பணியகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

**18.08.1993**

* அதிகரித்து வரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இராணுவத்துக்கு மேலும் 10 காலாட் படை அணிகளைத் திரட்ட அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

* கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் வரை விடுதலைப் புலிகளுடன் அரசு எவ்விதப் பேச்சுவார்த்தையையோ தொடர்பையோ மேற்கொள்ளப் போவதில்லை என அரசு தீர்மானித்துள்ளதாக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவிப்பு.

**19.08.1993**

* கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதிலை அரசு எதிர்பார்த்திருப்பதாக நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்கும் முயற்சியில் அரசுத் தரப்பு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

**20.08.1993**

* தமிழீழத்தில் நீதி நிர்வாகத்தை அமுல் செய்வதற்காக நிறுவப்படவுள்ள நீதிமன்றங்களில் பணி புரியவுள்ள நீதியாளர்கள் மற்றும் சட்டவாளர்கள் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாகத் தெரிவிப்பு.

* இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு சமாதானம் உருவாக்கப்பட வேண்டுமானால் இரு தரப்புகளுக்குமிடையே நேரடிப் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டுமெனவும் அதற்கான சூழ்நிலையை அரசாங்கமே தோற்றுவிக்க வேண்டுமெனவும் யாழ். அரச அதிபர் பி.பி.ஸி வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

**21.08.1993**

* சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் இனவாத நடவடிக்கைகளைக் கண்டித்து, சிறுபான்மை இனப் பாதுகாப்புக்கான ஐ.நா துணைக்குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீதான விவாதம் நேற்று நடைபெற்றதாகத் தெரிவிப்பு.

* தமது கொள்கையை உயிரிலும் மேலாக மதிப்பதில் விடுதலைப் புலிகள் போல வேறெந்த அமைப்பும் இல்லை என ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று விமர்சிப்பு.

**22.08.1993**

* சுன்னாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்றத்தை விட மேலும் மூன்று நீதிமன்றங்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

* ஜெனீவாவில் இடம்பெறும் சிறுபான்மையின பாதுகாப்புக்கான ஐ.நா. துணைக் குழுக் கூட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினையில் ஐ.நாவைத் தலையிடக் கோரும் பிரேரணை கடைசி நேரத்தில் வாபஸ் பெறப்பட்டதாகத் தெரிவிப்பு.

**23.08.1993**

* யாழ்.குடாநாடு மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையால் யாழ்.குடாநாட்டுப் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக, யாழ்ப்பாணம் வந்து திரும்பிய யுத்தக் கைதிகளின் பெற்றோர் கொழும்பில் தெரிவிப்பு.

* கேரதீவு - பூநகரிப் பாதை திறப்புத் தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் எடுத்துவரும் முயற்சிகள் பலனளிக்கக் கூடிய நிலை உருவாகி வருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிப்பு.

**24.08.1993**

* மண்கிண்டி மலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தமை தொடர்பான விசாரணை முடிவில் குற்றவாளிகளாகக் காணப்படும் படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி தெரிவிப்பு.

* கிழக்கிலும் வவுனியா நகரிலும் நடத்தப் போவதாக அரசு அறிவித்துள்ள உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் வேண்டுகோள் விடுப்பு.

**25.08.1993**

* ராஜீவ் காந்தி கொலைவழக்கில் தீர்ப்ப வழங்கப்பட்டவுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கையிலிருந்து நாடுகடத்துமாறு இந்திய அரசு கோரும் என இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை அங்கு சிவில் நிர்வாகத்தை நடத்துவதற்காக இடைக்கால நிர்வாக சபை அமைப்பது பொருத்தமான ஒன்றே என நாடாளுமன்ற சபா நாயகர் எம்.எச். முஹம்மது தெரிவிப்பு.

**26.08.1993**

* கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்தி வைத்திருப்பதாக அரசு அறிவிப்பு.

* லலித் அத்துலத்முதலி, ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாக தேடப்பட்டுவரும் 10 விடுதலைப் புலிகளின் படங்கள் அடங்கிய சுவரொட்டிகளை பொதுஇடங்களில் பொலிஸார் ஒட்டியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

**27.08.1993**

* கிளாலிக் கடற்பரப்பில் பயணம் செய்த பிரயாணிகள் படகுகளை தாக்குவதற்காக வந்த கடற்படைப் படகுகளில் இரண்டை கடற்கரும்புலி வீரர்கள் தாக்கியழித்துள்ளதாகத் தெரிவிப்பு.

* கிளாலிக் கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்படைப் படகுகள் மீதான கரும்புலித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 கடற்படையினரின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் கிளாலிக் கரைக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிப்பு.

**28.08.1993**

* வான்,தரை,கடல் வழித் தாக்குதல்களுடன் மாதகலில் இருந்து இருமுனைகளில் முன்னேற முயன்ற அரசபடையினரை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கிப் பின்வாங்கச் செய்ததாகத் தெரிவிப்பு.

* கண்டி பல்லேகல இளைஞர் புனர்வாழ்வு முகாமிலிருந்து மேலும் 23 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

**29.08.1993**

* மஹோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சுற்றாடலில் அரச படையினர் மேற்கொண்ட விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் சிக்கி ஐந்து பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

* தமிழகக் கரையோர முகாம்களில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராளிகளுக்கு இன்னமும் பயிற்சி அளித்து வருவதாக தகவல் தமக்குக் கிடைத்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு.

**30.08.1993**

* இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 'டோறா' ரக அதிவேக பீரங்கிப் படகொன்றை கடற்கரும்புலிகள் நேற்று பருத்தித்துறைமுனைக் கடலில் வைத்து தாக்கியழித்ததில் 4 அதிகாரிகளும் 14 படையினரும் பலியானதாகத் தெரிவிப்பு.

* பீரங்கிப் படகு தகர்த்து அழிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியில் நேற்று விமானப்படையினர் கண்மூடித் தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியதால் கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.

**31.08.1993**

* பருத்தித்துறை துறைமுகத்துக்கு கப்பல்களைக் கொண்டுவந்து பொருள்களை இறக்கும் பணி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இப்பணிக்குப் பாதுகாப்பு வழங்கிவரும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாணப் பிரதிநிதி தெரிவிப்பு.

# கனடா வந்த 'சன் சீ' கப்பல் அகதிகள் அதிகாரிகளால் பத்திரமாக இறக்கப்பட்டனர்

வன்கூர், ஓக.16

ஈழத் தமிழ் அகதிகளுடன் கனடா சென்றடைந்த 'சன் சீ கப்பலில் இருந்தவர்கள் கனேடிய அதிகாரிகளால் பத்திரமாக நேற்றுமுன்தினம் இறக்கப்பட்டு தற்காலிக கூடாரங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

இந்த அகதிகளின் அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்று அந்நாட்டின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக்டொயிஸ் தெரிவித்துள்ளார்.

புகலிடம் கோருபவர்களை தமது அரசாங்கம் வரவேற்பதாகவும் சட்டவிரோத ஆள் கடத்தல்காரர்கள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு கனடா ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் கூறினார்.

கனேடிய குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்த அவர் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

கப்பலில் இருந்து நேற்றுமுன்தினம் காலை முதல் இறக்கப்பட்ட ஈழ அகதிகள் குடும் பம் குடும்பமாக கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டு, உணவு மற்றும் குளிர் பானங்கள் பரிமாறப்பட்டன.

சுகயீனமுற்றிருந்த சிலர் உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அகதிகள் தங்க வைத்துள்ள இடங்களுக்கு வெளியார் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

(ஒ-ஐ)

# 63 கோடி ரூபா பெறுமதியான விவசாயிகளுக்கான உரத்தில் மோசடி

யாழ்ப்பாணம்,ஓக.16

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் அனுராதபுர மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவியாக வழங்கப்படவிருந்த 63 கோடி ரூபா பெறுமதியான 5591 மெற்றிக் தொன் உரம் மோசடி செய்யப்பட்டுள்ளமை சம்பந்தமாக குற்ற விசாரணைத் திணைக்களத்தினால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளையிலுள்ள 'கொமர்ஸல்' உர நிறுவனத்தின் அனுராதபுர உரக் களஞ்சியத்தின் தலைமை விநியோக முகவர் மற்றும் அக்களஞ்சியத்தின் பொறுப்பாளருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 11 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுர மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிபதி சந்திம எதிரிமன்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி உர நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு அமைய சுமார் மூன்று மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்த சந்தேக நபர்களால் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவிருந்த 5591 மெ.தொன் உரத்தினை மோசடி செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

அதற்கமைய கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் அனுராதபுர மாவட்டத்திலுள்ள 29 கமத்தொழில் அபிவிருத்தி மையங்களுக்கு உரவகைகளை விநியோகிக்கவில்லை என்ற உண்மையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த உர மோசடியால் அரசுக்கு 63 கோடி ரூபா இழப்பேற்பட்டுள்ளதாக குற்றவிசாரணைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுர நீதிமன்ற வரலாற்றில் இத்தகைய பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ள வழக்கொன்று விசாரிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

BMS make learning happen | northumbria UNIVERSITY




BA (Hons)
Business and Management

- பாடநெறிக்கான அனைத்து பொருட்கள் மற்றும் பாடநூல்களும் வழங்கப்படும்.
- தொடர்ந்து உங்கள் செயற்பாட்டினை மதிப்பீடு செய்து தனிப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.
- UK பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக்கொள்வதற்கான மாற்றுத் தெரிவு.
- உயர்தர முடிவுகளுக்காகக் காத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம்.

நுழைவு தகமைகள்
க.பொ.த. உயர் தரத்தில் 2 சிறப்பு சித்தி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கிலக் கல்வி

591, காலி வீதி, கொழும்பு 6. தொலைபேசி: 250 4757, 236 0978.
மின்னஞ்சல்: bms@bms.lk இணைத்தளம்: www.bms.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் வழி: உயரும் நெறி

பள்ளிக்கூடத்தில் இருந்து வீடு திரும்பும் போது பிள்ளைகள் வரும் வேகத்தைக் கவனித்தது உண்டா? உள்ளே நுழைந்ததும் கழற்றி எறியும் அலட்சிய ஆவேசத்தைக் கணித்தது உண்டோ? தொபீரென்று பையைத் தூக்கிப் போடுவது அல்லது 'ரிங்பால்' மாதிரி விட்டு எறிவதையும் பார்த்தது உண்டா?

ஏன்?ஏன்?ஏன்? ஏனிந்த எரிச்சல். எல்லாவற்றையும் எடுத்தெறியும் மெகா கோபத்தின் மூலம் எது? யோசித்தது உண்டா? உடலுக்குள் சிறைப்பட்ட கழிவுகள் காரணமா? உடலே பள்ளிஅறைக்குள் சிறைப்பட்ட கொடுமைகள் காரணமா? சின்ன மனத்தின் சிறகுகளை முறித்தெறியும் ஆசிரிய அசுரர்களின் அராஜகமும் அடக்குமுறையும் ஏற்படுத்திய எதிர்மறை விளைவா? எதுவானாலும் என்ன? அஃறிணைப் பொருள் மேல் ஆத்திரத்தைக் காட்டும் அசட்டுத்தனம் பற்றி நாம் எப்போதாவது யோசித்தது உண்டா? கொஞ்சம் யோசியுங்கள்.

ஒரு சிறிய சம்பவம். அவர் ஒரு ஞானி. அவரைப் பல இடங்களில் தேடி அலுத்த ஒருவர் முடிவாக அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டார். அவசர அவசரமாக அவர் தங்கியிருக்கும் வீட்டின் கதவை அடித்தார். நெடுநாள் தேடிய எரிச்சல் மற்றும் பரபரப்பு காரணமாக வேக வேகமாக அவர் இருந்த வீட்டு கதவை 'டமால்' என்று நெட்டித் தள்ளினார்.பரபரப்புடன் வீட்டுக்குள் நுழைந்தவர் செருப்பைக் கழற்றும் பொறுமை கூட இன்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கழற்றி விட்டு எறிந்தார். செருப்புக்கள் சுவரில் மோதி சரிந்து விழுந்தன. தடதடவென்று ஞானி இருந்த அறைக்குள் நுழைந்தவர் தடாலென அவரது காலில் விழுந்து கண்ணீர் விட்டு அழுதார். தமக்கு வாழ்க்கை பற்றிய ஞானம் தரவல்ல குரு அவரே என்று கண்டறிந்ததாகப் பெரிதாக அலறினார்.

ஞானியோ அவரைக் கவனியாது முகத்தைத் திருப்பிக் கொண்டார். மிகுந்த மதிப்போடு குருவைத் தேடிவந்த தம்மை அவமதிப்பது சரியா என்று ஞானியைக் கேட்டார் வந்தவர்.

ஞானி தீர்க்கமாக வந்த வரை உற்று நோக்கினார். "நீ எங்கு என்னை மதித்தாய்?உன்னை நான் எப்படி மனமார வரவேற்க முடியும். உன் செயல்களை நான் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறேன். வந்த வாசல் கதவுகளை நீ ஏன் அவமதித்தாய்? அவை உனக்கு என்ன தீங்கு இழைத்தன? எவ்வளவு காலமாக இந்த வீட்டை அவை காவல் காத்து வருகின்றன. கடமையைச் சரியாக ஆற்றும் கதவுகளை நோகும்படி நெட்டித் தள்ளினாயே.. அது சரியா? உன்னை வெப்பத்திலிருந்தும் முள்ளிலிருந்தும் பாதுகாத்த செருப்புக்களை எவ்வளவு அலட்சியமாக விட்டெறிந்தாய்? பண்பாடற்றவன் நீ! நன்றி, இல்லாதவன் நீ! அந்தச் செருப்புக்கள் சுவரில் முட்டியபோது அவை எவ்வளவு வமானப்பட்டிருக்கும் என்பது உனக்குத் தெரியுமா? போ ... போய் செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டு வா... அதன் பிறகு வேண்டுமானால் உன்னோடு பேசுகிறேன்" என்றார் ஞானி.

" உங்களுக்கென்ன பைத்தியமா? செருப்புக்கும் கதவிற்கும் உயிருண்டோ என்ன? அவற்றிடம் மன்னிப்புக் கேட்க.." என்றார் வந்தவர்.

" உன் கோபத்தை அவற்றின் மீது காட்டும் போது அவற்றை உயிருள்ளவை போல நினைத்துத் தானே காட்டினாய். அப்போது உயிருள்ளவை போல நடத்தலாம் என்றால் மன்னிப்புக் கேட்கும் போதும் உயிருள்ளவரிடம் கேட்பது போல் கேட்கலாம். தப்பில்லை. போ... போய் உன் தவறுக்காக செருப்புகளிடமும் கதவுகளிடமும் மன்னிப்புக் கேள்" என்றார் ஞானி.

வந்தவருக்கோ ஞானியிடம் காரியம் ஆகவேண்டும் ஞானியைத் திருப்தி செய்வதற்காகவே மன்னிப்புக் கேட்டுத்தான் ஆக வேண்டும். வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாகச்செருப்புகளிடமும் கதவுகளிடமும் மன்னிப்பு வேண்டினான். ஆனால் அப்படிக் கேட்கும் போதே தன் மனத்தில் இதுவரை இருந்த குரோதம், கொஞ்சம் கொஞ்மாகக் குறைவதை உணர்ந்தான். தான் இதுவரை பாரமான மண்ணாக இருந்ததில் இருந்து லேசான ஆகாயமாக மாறியதை அனுபவித்தான். அவனுக்கு ஆனந்தக் கண்ணீர் வரத் தொடங்கியது.

முற்றிலும் வித்தியாசமானவனாக வந்து ஞானியை வணங்கினான். ஞானி அன்புடன் மகனே என்று அழைத்து இறுக்கத் தழுவினார். அவனுக்கு வானம் வசப்பட்டது.

இது வெறும் சம்பவமல்ல. வாழ்வைப் பற்றி ஞான பாடம். புத்தகங்களை எடுக்கும் போது பரிவுடன் எடுப்பவர்கள் பாடம் படிக்கிறார்களோ இல்லையோ பாடம் நடத்துகிறார்கள்.அஃணைப் பொருள்களைக் கூட உயர்திணை மனிதர்களைப் போல மரியாதையுடன் நடத்துபவர்கள் மிக உயர்ந்த நிலை அடைகிறார்கள்.

இதைவிடக் கொடுமை! உயர்திணை மனிதரை அஃறிணைபோல் நடத்தும் கொடியவர்கள் அவர்கள் மனிதரே அல்ல.உயர்திணை விலங்குகள் அஃறிணைப் பொருள்களையும் உயர்திணை உணர்வுடன் கௌரவத்திலே பண்பாடான வாழ்க்கை முறை. வளரும் வழி.உயரும் நெறி.அப்படி வாழ்ந்தால் நம்மை அரைப் பைத்தியங்கள் என்றுசில முழுப் பைத்தியங்கள் என்று சில முழுப் பைத்தியங்கள் சித்தரிக்கும். அதனால் என்ன? நாம் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திப்போமே!

நன்றி: சுகி.சிவம்

# கவிதையில் தெரியும் காட்சி

ஒரு பூனை இருந்தது. அது தன்னை ஒரு புலி என்று நினைத்துக் கொண்டது. தன் தகுதிக்கு மீறிய நினைப்புடன் நடந்து போய்க்கிட்டிருந்தது. வழியிலே ஒரு யானை அமைதியாக நின்றது. இந்தப் பூனை நல்ல பிள்ளை மாதிரி அந்த யானையின் பக்கமாகப் போய் சுற்றிச் சுற்றி அதை உற்றுப் பார்த்தது. வம்பு வளர்க்க ஆரம்பித்தது.

"எல்லோருக்கும் ஒரு பக்கம்தான் வால் இருக்கும் ஆனா உனக்கு என்ன இப்படி இரண்டு பக்கமும் வாலா?"

யானை பொறுமையாக பதில் சொன்னது.

அப்படி இல்லை பின்னாடி இருக்கிறது வால் முன்னாடி இருக்கிறது தும்பிக்கை!

அது சரி தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையா இருக்கிறது. அதற்கும் பொறுமையாகவே பதில் சொன்னது.

ஓ! அதைக் கேட்கிறாயா? ஊற்றிலே நீர் குடிப்பதற்காகவே அப்படி இருக்கிறது.

சரி! எல்லோர்க்கும் பல் வாய்க்குள்ளேதான் இருக்கும் உனக்கு என்ன வெளியே அதுவும் இவ்வளவு நீளமாக அப்படி என்று கேட்டது பூனை.

புலி என்னிடம் வந்து வாலாட்டுது என்றால் அதை தாக்குவதற்காகவே என்றது.

இதைக் கேட்டதும் பூனை சிரித்தது.

மலை எங்கேயாவது பாய்ந்து வருவதுண்டா? நீயோ கறுப்பா பெரிதா இருக்கிற மலை அது முடியாத காரியம்! என்று சிரித்தது.

என் உடம்பைப் பார்த்துத்தானே மலை என்று சொல்கிறாய். நான் பாய வேண்டிய அவசியம் இல்லை! உன்னனப்பாய வைக்கிறேன் பார்! அப்படி சொல்லி தும்பிக்கையால் தூக்கி எறித்தது யானை!

எங்கேயோ விழுந்த அந்தப் பூனை அப்பாடா என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்து பார்த்தது. இப்போது தான் அந்தப் பூனைக்கு ஞானோதயம் பிறக்குது! "வலியாரிடம் வாலாட்டக் கூடாது" என்று புரிந்து கொண்டது.

கோ.சுவாமிநாதன்.

# மறையக் கூடாத மனித நேயம்

நாம் அனைவரும் மனித நேயத்துடன் இருக்க வேண்டும் என்று நம்மில் பலர் " மனித நேயம்" என்ற வார்த்தையை அடிக்கடிப் பயன்படுத்துகிறோம். மனிதநேயம் என்றால் என்ன? 'மனிதர் அனைவரும் ஒரே இனம் என்பதாலேயே மனிதரை மனிதர் நேசித்தல்..." இதுதான் மனித நேயம்.

ஒரு வயதான ஆந்தை ஒருமுறை உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கிறது. ஆந்தையால் சைய முடியவில்லை. அதைச் சுற்றி முப்பது, நாற்பது எலிகள் கிடந்தன. அதை ஒருவர் ஆச்சர்யமாகப் பார்த்தார். ஏன் இந்த ஆந்தையைச் சுற்றி எலிகளெல்லாம் கிடக்கிறது என்று ஆராய்ச்சி செய்து ஓர் உண்மையைக் கண்டுபிடித்தார். வயதானதால் இந்த ஆந்தையால் இரை தேடச் செல்ல முடியவில்லை.இரை தேடும் சக்தியையுடைய ஆந்தைகள், வயதான ஆந்தை சாப்பிடட்டுமே என்று எலிகளைக் கொண்டு வந்துபோட்டிருக்கின்றன.

யோசித்துப் பாருங்கள்.ஒரு பறவைக்குக்கூட தன்னுடைய இனத்தைச் சேர்ந்த இன்னொரு பறவைக்கு உதவ வேண்டும் என்று தோன்றுகிறது. ஒரு காகம் கஷ்டப்பட்டு 'கா' என்றுகத்தினால் உடனே எல்லாக்காகமும் 'கா கா' என்று கத்தியபடி வந்து உர்கார்ந்து கொள்ளும். ஒன்றும் பெரிய உதவி செய்யமுடியாது. இருந்தாலும் கூடவே வந்து உட்கார்ந்து கொள்ளும். அதற்குக் காரணம் என்ன? அது தன் இனம் . தன்னுடையஇனத்தின் மேல் அதற்கு ஒரு பற்று இருக்கிறது.

நாய்க்கு எவ்வளோ நல்லகுணம் உண்டு.நன்றியோடுஇருக்கும். தன்னுடைய எஜமானிடம் விசுவாசமாக இருக்கும் ஆனால் ஒரு கெட்ட குணமும்உண்டு. என்னவென்றால் தன் இனத்தின் மேல் பற்றுகிடையாது. ஒரு நாய் ஒரு இலையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது இன்னொரு நாய் தன் அருகில் சென்றால் விரட்டி விடும். அதனால் தான் அது மனிதனோடு சேர்ந்திருக்கிறது! நாய் தன் இனத்தின் மீது அன்பு இல்லாமல் இருக்கும்.

மனிதன் ஒவ்வொரு விலங்கிடமிருந்தும் ஒரு நல்ல குணத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.ஓர் ஆந்தைக்கு இன்னோர் ஆந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று தெரிகிறது. மனிதனுக்குத் தெரிய வேண்டாமா?

இன்னொருவரை நாம் பழிக்கக்கூடாது. பழித்தால் அவர்கள் நம்மைப் பழிப்பார்கள்.இப்படியே இந்தச் சங்கிலி நீண்டு கொண்டே போகும். எனவே மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க , ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க, ஒருவர் பெருமையை ஒருவர் உணர மனித இனத்தின் மீது ஒரு மரியாதை கலந்த அன்போடு இருக்க வேண்டும்.

ஞானசம்பந்தர் கோயிலுக்குப் போனார். அந்த வாசலில் ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். கணவன் இறந்து கீழேகிடந்தான். கோயிலுக்குள் போய்ச் சாமி கும்பிடவில்லை. முதலில் இந்தப் பெண்ணின் துயரம் என்ன என்று கேட்டு அதைத் தீர்த்துவிட்டுப் பிறகு கோயிலுக்குள்ளே போகிறார்.ஏன்? கடவுள் வழிபாட்டை விட மனிதன் துயர் துடைத்தலே முக்கியம் என்றுஞான சம்பந்தர் உண்மையைச் சொல்கிறார். உலகம் முழுவதும் அன்பைப் போதித்தவர் இயேசுநாதர்.அன்புதான் உலகத்திலுள்ள சகல செல்வங்களுக்கும் மேலானது என்பதை அறிவித்தவர். இயேசுநாதர். அந்த அன்பை அவர் எப்படி வெளிப்படுத்தினார். ஒரு பெண்ணை, அவள் பாவிஎன்று எல்லோரும்கல்லால் அடிக்கிறார்கள்.

யார் குற்றம் செய்யாதவர்களோ அவர்கள் மட்டுமே அவளைஅடியுங்கள் என்று இயேசுநாதர் அறிவிக்கிறார். யாருமே அடிக்கடி முடியாதே! தவறு செய்த ஒரு பெண் மீது கூட அவருடைய கருணை எவ்வளவு தூரத்திற்குப் பாய்ந்திருக்கிறது. யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் இன்னொருவரை வேகமாகக் குறை சொல்கிறோம். ஆனால் அவர் ஒரு மனிதர். எனவே அவரைக் காயப்படுத்த நமக்கு உரிமையில்லை என்ற எண்ணம் மனதிற்குள் வரவேண்டும்.

ஓர் அழகான கவிதை படித்தேன் மரங்கள் சொல்லின எங்களிடத்திலே இன்னொரு சிலுவையைச் செய்வதற்குப் போதுமான மரங்கள் இருக்கின்றன. ஆனால் உங்களிடத்தில் இன்னோர் இயேசுவைச் செய்வதற்குப் போதுமான மனிதம் இருக்கிறதா? இந்த மனித சமூகத்திற்குள்ளே இன்னோர் இயேசுவைச் செய்வதற்குரிய மனிதநேயம் இருக்கிறதா? என்று அந்தக் கவிஞர் கேட்டார். யோசிக்க வேண்டும்.

மனிதர்கள் அன்பாக இருக்கவே பிறந்தவர்கள் மதங்களை விட அன்பு பெரியது. எனவே அன்பு என்கிற சங்கிலி மனித உலகத்தைக் கட்டுப்படுத்தக் கடமையுடையது. மனித நேயத்தைப் புரிந்து கொண்டு ஒரு மனிதன் இன்னொரு மனிதனை நேசிக்க ஆரம்பிக்கவேண்டும். பிறமதங்களை, பிறவழிபாட்டு முறைகளைப் பழித்து பிறரைக் காயப்படுத்த ஒரு போதும் நமக்கு உரிமை இல்லை. இதைப் புரிந்து கொண்டால் இந்த நாள் ஓர் இனிய நாள்.

நன்றி: சுகி.சிவம்

# பொன் மொழிகள்

★ பதவியென்பது பஞ்சணையில் படுத்துறங்கக் கிடைக்கும் சுகபோக வாழ்க்கையல்ல. முட் புதர்கள் நிறைந்தவை, அதன் மேல் நடந்து, பதவிக்குப் பெருமை சேர்ப்பவனே உயர்ந்தவனா கின் றான்.

★ பதவி கண்டு, பண்பை இழந்து விடாதே! பதவியைப் பவ் வியமாகப் பேணி, பதவிக்குப் பெருமை சேர்த்து, உனது பெயருக் கும் பெருமை சேர்ந்திட மறந்து விடாதே!

★ பதவி வரும் போது, பணிவும் வர வேண்டும். அத்துடன் பயபக்தியும் வர வேண்டும். பலரும் போற்றும், நல்ல நடத்தையும் வரவேண்டும்.

★ பதவியைத்தேட, பண்புகெட்ட வழிகளைத் தேடாதே! பதவி கிடைக்க, பண்பாட்டை வளர்த்துக் கொள், பதவிக்கு உரிய தகுதியினை,உன் செய்கையில் காட்டி நட, பதவிக்குப் பின் நீ தேடி ஓடத்தேவையில்லை, அது உன்னைத் தேடிவரும்.

★ பதவி மோகம் கொண்டு, பகைவர்களைக் கூட்டிக் கொள் ளாதே, பதவியாசையென்பது உன்னை, படுகுழியில் விழுத்தி விடலாம். பவ்வியமாக, பதவிக்கு இலக்கணமாகத் திகழ்ந்து, பதவியைத் தேடலாம்.

★ பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பார்கள், ஆனால் பதவி வந்தால் கூட சிலர் தன்னிலை மறந்து, பத்தாம் பசலித்தன்மை மிக்க, பத்தும் பலதும் தேடி, பதவிக்கு இழுக்கைத் தேடி, பலராலும், பரி காசம் செய்யும் நிலைக்கும் வந்திடலாம்.

★ பதவியென்பது உனக்கு அதிகாரத்தைச் செலுத்த வழங் கப்பட்ட அங்கீகாரமல்லவென்பதையுணர்ந்து, பிறருக்குச் சேவை செய்ய வழங்கப்பட்ட அருங்கொடையாக எண்ணி உன் சேவையை வழங்க எந்நிலையிலும் பின்நிற்காதே!

★ பதவி வரும், போகும். ஆனால் உனக்கு கிடைக்கும் பதவியை மற்றவர்கள் மனம் கோணாமல், நேர்மையாகவும், உண்மை யாகவும், கடமையுணர்வுடனும், பக்கச்சார்பின்றியும், துணி வோடும், விசுவாசத்துடனும் ஆற்றுவாயாயின் நீ பதவியை விட்டு நீங்கினாலும் உன் நினைவு மக்களிடம்என்றும் நிலைத்திருக்கும்.

வ.க.ஜெயபாலன். ஜே.பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



நண்பர்களின் உதவியுடன் உங்களின் வேலை ஒன்றை முடித்து கொள்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளை பெறலாம். முக்கியமான வேலையாக சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

### இடபம்



கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. வீட்டை சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் நீங்களே செய்ய முற்படுவீர்கள். விருப்பமான உணவு வகைகளை சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். புதிய அனுபவம் பெறலாம்.

### மிதுனம்



மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் நாசுக்காக ஒதுக்கி இருக்க வேண்டும். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டு தேட நேரிடலாம். தெரிந்தவர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள்.

### கடகம்



பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். உங்களிடம் நல்லவர் போல நடிக்கும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். உறவினர்களுக்காக சில சுபச் செலவுகளைச் செய்யலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலையலாம். தேகப் பராமரிப்பில் கூடுதல் அக்கறை காட்டுவீர்கள். கோபம், வேகம் தவிர்க்கவும்

### சிங்கம்



திட்டமிட்ட ஒரு வேலை நடக்காமல் போனாலும், திட்டமிடாத ஒரு வேலை முடியும். பெண்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தவறு என தெரிந்தும் சில காரியங்களை செய்வீர்கள். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

### கன்னி



குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். வாகன பயணங்களுக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். சிலர் உங்களிடம் கொடுத்த வாக்கை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். நீண்ட நாள்களாக தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். மனக் குழப்பம் உண்டாகும்.

### துலாம்



தடுமாற்றங்கள் இல்லாமல் எதிலும் திட சிந்தனையுடன் செயல்படுவீர்கள். அயலார் கேட்ட உதவிகளைச் செய்து அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் தள்ளிப் போகும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வரலாம். மாமன், மைத்துனர் சந்திப்பு நிகழும்.

### விருச்சிகம்



மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். என்னதான் பொறுப்பாக வேலை செய்தாலும், சிலர் உங்களை குறை சொல்லுவர். சிறு தடை, தாமதங்களை எதிர் கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். செலவு கூடும் நாள்.

### தனுசு



நிதி நிலைமையில் மேம்பாடு காணப்படும். பெண்கள் குடும்பத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். உங்களின் சொந்த விஷயம் ஒன்றைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். உங்களுக்கு பிடித்தமான பொருள் ஒன்றை மற்றவர்கள் கொடுக்கலாம். அலைச்சல்கள் குறைந்து ஓய்வெடுக்கும் நாள்

### மகரம்



மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். உங்களின் அருமை, பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். தூரத்து உறவினர் ஒருவர் உங்களிடம் ஏதாவது உதவி கேட்கலாம். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள்.

### கும்பம்



குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மதிப்பு, மரியாதைக்கு பாதகம் வரும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். பெண்கள் உடன்பிறப்புக்களின் உதவிகளைப் பெறலாம். பல நாள்களாக சந்திக்காத நண்பர் ஒருவரை திடீரென சந்திக்கலாம். சில விடயங்களை நினைத்து பெரிய அளவில் கற்பனை செய்து பயம் கொள்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்

### மீனம்



வீண் விவாதங்களை, பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று, கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம். கணிசமான பணத்தை செலவிட்டும் சிலவற்றில் திருப்தி இல்லாமல் போகலாம். சிலருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பேராசையைத் தவிர்க்கவும்..


## விரைவான பயண ஒழுங்கு

* ஐரோப்பா, கனடாவில் வேலையுடன்/ வேலை இல்லாத பயண ஒழுங்கு
* தாதியருக்கு Uk யில் வேலையுடன் கூடிய விசா ஒழுங்கு.

முற்பணம் இல்லை.
குறைந்த செலவு.
தொடர்புகளுக்கு:
0724-670551

## வீடு காணி விற்பனைக்கு

3 பரப்புடன் 4 அறை வீடு வளவும் 3 பரப்பு வீதம் வெறுங்காணி 3உம் விற்பனைக்கு உண்டு.

சோடாக் கம்பனி லேன்,
மல்லாகம்.
தொடர்பு : 0777877843

## வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணைப் பராமரிப்பிற்கு பொறுப்புகளற்ற தங்கி வேலை செய்யக் கூடியவர்கள் ஆண்/பெண் உடன் தேவை.
தொடர்பு: 0777700716

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் 43 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. அரைவாசியாகவும் வழங்கப்படும். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 0777582996

## கோழிக்குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 Kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய NO- 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 18.08.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ **ராஜீவ்,** நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
தொ.பே. 021 222 2867, 0776090926


## காரைநகரில் நாளை நடமாடும் சேவை

காரைநகர்,ஓக.16

சட்ட ரீதியான ஆவணங்களைப் பெறுவதற்கான நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

வட வலய உதவிப் பதிவாளர் நாயகத்தினால் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சுடன் இணைந்து யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்த நட மாடும் சேவையில் பிறப்புக்கள், பதிவு செய்யப்படாத திருமணங்கள், உறவினர்களது இறப்புக்கள் ஆகியவற்றை உரிய முறையில் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு அவற்றுக்குரிய ஆவணங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(69250)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1216 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம்

29 31 37 55

13-08-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,058,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 227,762 | 20/- | 4,555,240/- |
| 2 இலக்கங்கள் | 20,967 | 40/- | 838,680/- |
| 1 இல. + லக்கினம் | 20,739 | 60/- | 1,244,340/- |
| 2 இல. + லக்கினம் | 1,892 | 200/- | 378,400/- |
| 3 இலக்கங்கள் | 563 | 1000/- | 563,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 6,058,000/- | 6,058,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 14,547,660/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 616 | | 606,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 272,593 | | 15,154,160/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம்

02 26 32 45

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 613 | 500/- | 306,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 616 | | 606,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,100,000/-

## 7ஆவது பிறந்தநாள் வாழ்த்து

# செல்வி P.தேனுயா

திரு. திருமதி பிறேமகாந்தன்-வனிதா தம்பதியரின் அன்புப் புதல்வி செல்வி தேனுயா தனது 7ஆவது பிறந்த தினத்தை அன்பு அண்ணன் அபிஷனுடன் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். தேனுயா சகல செளபாக்கியங்களுடன் ஒஸ்லோ சிவசுப்பிரமணியர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



16 . 08 . 2010

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணா.

தகவல்:
பிறேமகாந்தன்- வனிதா

முகவரி : இ.முருகையா,
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
T.P. 021 2241006

(101596)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தரம் 5 பரீட்சைக்கு 27 பரீட்சை நிலையங்கள் அறிவிப்பு

கிளிநொச்சி, ஓக.16

எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் 27 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பரீட்சை நிலையங்கள் தொடர்பான விவரங்களை வலயக் கல்விப்பணிப்பாளர் த. குருகுலராஜா அறிவித்துள்ளார்.

பரீட்சை நிலையங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் விவரமும் வருமாறு:

**கனகபுரம் ம.வி**

கனகபுரம் ம.வி.

**கனகாம்பிகைக்குளம் ம.வி**

கனகாம்பிகைக்குளம் ம.வி, சிவபாத கலையகம் அ.த.க.பா, சாந்தபுரம் கலைமகள் வித்தி.

**கிளிநொச்சி மத்திய கல்லூரி**

கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**பாரதி வித்தி.**

பாரதி வித்தி,தமிழ்ச்சோலை வித்தி.

**கிளிநொச்சி ம.வி.**

கிளிநொச்சி ம.வி.

**திருவையாறும.வி.**

திருவையாறும.வி.

**புனித திரேசா பெண்கள் பாடசாலை**

புனித திரேசா பெண்கள் பாட சாலை, பன்னங்கண்டி இ.த.க.பா.

**உருத்திரபுரம் ம.வி**

உருத்திரபுரம் ம.வி,சிவநகர் அ.த.க.பா, புனித பற்றிமா அ.த.க.பா.

**கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை**

கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை.

புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி.

**பரீட்சை நிலையம் செல்வாநகர் அ.த.க.பா இல் செயற்படும்**

புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி, ஊற்றுப்புலம் அ.த.க.பா, செல்வாநகர் அ.த.க.பா.

**அக்கராயன் அ.த.க.பா**

அக்கராயன் அ.த.க.பா, யுனியன் குளம் அ.த.க.பா.

**வன்னேரிக்குளம் ம.வி**

வன்னேரிக்குளம் ம.வி,ஆனைவிழுந்தான் அ.த.க.பா, குஞ்சுக்குளம் கணேசா வித்தி, ஐயனார்புரம் அ.த.க.பா.

**அக்கராயன் ம.வி**

அக்கராயன் ம.வி, கண்ணகைபுரம் அ.த.க.பா, ஸ்கந்தபுரம் இல. 1 அ.த.க.பா, ஸ்கந்தபுரம் இல. 2 அ.த.க.பா.

**பூநகரி நல்லூர் ம.வி**

பூநகரி நல்லூர் ம.வி, கறுக்காய்த் தீவு அ.த.க.பா, சாமிப்புலம் அ.த.க.பா, செல்வலியாதீவு அ.த.க.பா, ஞானிமடம் அ.த.க.பா, முக்கொம்பன் அ.த.க.பா.

**வட்டக்கச்சி ம.வி**

வட்டக்கச்சி ம.வி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பா.

**இராமநாதபுரம் ம.வி**

இராமநாதபுரம் ம.வி, அழகாபுரி வித்தி, மாயவனூர் வித்தி.

**இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா**

இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா , கல்மடுநகர் அ.த.க.பா.

**முருகானந்த ம.வி**

முருகானந்தா ம.வி, கண்டாவளை ம.வி,முரசுமோட்டை அ.த.க.பா, புனித அந்தோனியார் அ.த.க.பா.

**பரந்தன் இந்து ம.வி**

பரந்தன் இந்து ம.வி, பரந்தன் அ.த.க.பா.

**தருமபுரம் ம.வி**

தருமபுரம் ம.வி, கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தி, நாகேந்திரா வித்தி, பெரிய குளம் ஐயனார் வித்தி, தருமபுரம் இல 1 அ.த.க.பா, கட்டைக்காடு அ.த.க.பா, தம்பிராசபுரம் அ.த.க.பா.

**பிரமந்தனாறு ம.வி**

பிரமந்தனாறு ம.வி, கண்ணகை அம்மன் வித்தி, புன்னைநீராவி அ.த.க.பா, மயில்வாகனபுரம் அ.த.க.பா, உமையாள்புரம் அ.த.க.பா, குமாரசாமிபுரம் அ.த.க.பா, கல்லாறு தமிழ் வித்தி.

**ஜெயபுரம் ம.வி**

ஜெயபுரம் ம.வி,கரியாலை நாகபடுவான் இல.3 அ.த.க.பா, பல்லவராயன்கட்டு இ.த.க.பா.

**வேரவில் இந்து ம.வி**

வேரவில் இந்து ம.வி, கிராஞ்சி அ.த.க.பா, வலைப்பாடு றோ.க.த.க.பா.

**பூநகரி ம.வி**

பூநகரி ம.வி, பரமன்கிராய் அ.த.க.பா,பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி, வினாசியோடை அ.த.க.பா, செம்பன்குன்று அ.த.க.பா,தம்பிராசபுரம் அ.த.க.பா.

**முழங்காவில் ம.வி**

முழங்காவில் ம.வி, இரணைதீவு றோ.க. த.க.பா, கரியாலை நாகபடுவான் இல. 2 அ.த.க.பா.

**நாச்சிக்குடா அ.த.க.பா**

நாச்சிக்குடா அ.த.க.பா, குமுழ முனை அ.த.க.பா.

**பளை மத்திய கல்லூரி**

பளை மத்திய கல்லூரி, இயக்கச்சி அ.த.க.பா, கோவில்வயல் சி.சி.த.க.பா, மாசார் அ.த.க.பா, முகாவில் அ.த.க.பா, பளை றோ.க.த.க.பா, பளை றோ.க.த.க.பா, சோரன்பற்று கணேசா வித்தி, தர்மக்கேணி அ.த.க.பா, கிளாலி றோ.க.த.க.பா, சோரன்பற்று சி.சி.த.க.பா, அல்லிப்பளை சி.சி.த.க.பா. (ஐ)

# கிளிநொச்சியில் 4 இடங்களில் புதிய உரக்களஞ்சியங்கள்

கிளிநொச்சி,ஓக.16

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக நான்கு உரக்களஞ்சியங்கள் அமைக்கப் படவுள்ளன.

இம்மாவட்டத்தில் ஏற்கனவே இருந்து வந்த புளியம்பொக்கணை, இராமநாதபுரம் உரக்களஞ்சியங்கள் கடந்த யுத்த காலத்தின் போது சேதமடைந்துள்ளன.

சேதமடைந்துள்ள இந்த உரக் களஞ்சியங்களைப் புனரமைப்பதுடன், கிளிநொச்சி, பூநகரி, முழங்காவில், அக்கராயன் ஆகிய இடங்களில் புதிதாக நான்கு உரக்களஞ்சியங்கள் அமைக்கப் படவுள்ளதாக கிளிநொச்சி கமநல சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-236)

# திருநகர் வீதி ஊடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை

கிளிநொச்சி,ஓக.16

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் இருக்கும் திருநகர் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியினைத் திருத்தி தமது போக்குவரத்துக்கு உதவுமாறு பிரதேச மக்கள் கோருகின்றனர்.

ஏ-9 வீதியில் இருந்து மேற்குப் புறமாக கரைச்சி பிரதேச சபைக்கு முன்னால் செல்லும் இவ்வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவிற்கு சேதமாகிக் குண் டும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியின் ஒரு கரையினாலேயே மக்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக ஒற்றையடிப்பாதை உள்ளது.

இப்பாதையால் தான் இருபகுதியில் இருந்து வருபவர்களும் பயணிப்பதால் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து செயற்பட்டு இவ்வீதியினை புனரமைத்துத் தர வேண்டும் என இப்பகுதி மக்கள் கோருகின்றனர். (ஐ-405)

# 45 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட தலைமன்னார் வீதி மீண்டும் மோசமான நிலையில்

மன்னார் ,ஓக.16

சுமார் 45 கோடி ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தலைமன்னார்-மன்னார் ஏ-14 நெடுஞ்சாலை தற்போது பல இடங்களில் குண்டும் குழியுமாகக் காணப்படுவதோடு, பாதசாரிகள்பிரயாணம் செய்ய முடியாத நிலைமையையும் தோற்றுவித்துள்ளது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பே இப்பாதை புனரமைக்கப்பட்டது. இந்த வேலை மூன்று ஒப்பந்தக்காரர்கள் கைமாறியது. அதன் பின்னர் ஓரளவு வேலைகள் முடிவுற்றன. ஆயினும் 'கார்பட்' பாதைகள் போடாமல் வெறும் தார் பாதையாகவே போடப்பட்டது. அதுவும் சுமார் 30 அடி ஒடுங்கிய பாதையாகும். நடைபாதைகள் அமைக்கப்படவில்லை.

அத்துடன் மன்னார் நகரை ஊடறுத்துச் செல்லும் பாதை மிகவும் ஒடுக்கமானதாகும். ஒரு வாகனத்தை மற்றொரு வாக னம் முந்த முடியாது. மிதிவண்டிகள், பாத சாரிகள் செல்ல முடியாது.

குடிவெறியுடன் தறிகெட்டு ஓடும் வாகனச் சாரதிகளால் பொதுமக்கள் பாரிய விபத்துக்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் அரசு சாராத நிறுவனங்களின் பெரிய கொடிகள் வாகனங்களில் பறப்பதால் பொது மக்கள் பலரும் காயமடைகின்றனர். (ஐ-405)

# மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை

கிளிநொச்சி,ஓக.16

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக் குடியேறியதையடுத்து முதன்முதலாக 6 ஆயிரத்து 219 ஏக்கரில் இடைக்கால சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளர் இ.தயாரூபன் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் ஆரம்பத்தில் மீள் குடியேறிய பூநகரி, அக்கராயன், ஸ்கந்தபுரம், முழங்காவில் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே இந்த நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த கால யுத்தத்தினால் குளங்கள் பலவும் சேதமடைந்தும், வயல்கள் நிலங்கள் சின்னாபின்னபட்டும் இருந்த நிலையில் மிகக் குறுகிய காலத்தில் சுமார் 6 ஆயிரத்துக்கு அதிகமான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டமை பாராட்டத்தக்கது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் பெரும்போக காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் 48 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத்திணைக்களம் அதிகாரிகள் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-236)

# கிளிநொச்சியில் தோற்றவுள்ள தரம் 5 மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஓக.16

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவால் விடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:-

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கல்விகற்று 2008,2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், வேறு இடங்களிலும் தங்கியிருக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்தி கள் 18 ஆம், 19 ஆம் திகதிகளில், தாங்கள் இடம்பெயர்வுக்கு முன் கற்ற நிரந்தரப் பாடசாலை ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பின் நிரந்தரப் பாடசாலையில் தங்களது பரீட்சைச் சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறின்றி வேறு பாடசாலைகளினூடாக விண்ணப்பித்தவர்கள் தாம் விண்ணப்பித்த பாடசாலைகளில் தமது சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இதுவரை மீளத் திறக்கப்படாத கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தி, கிளி/ தமிழ்ச்சோலை வித்தி, கிளி/யூனியன் குளம் அ.த.க.பா, கிளி/குஞ்சுக்குளம் கணேசா வித்தி, கிளி/ கண்ணையம்மன் வித்தி, கிளி/பல்லவராயன்கட்டு இ.த.க.பா, கிளி/இயக்கச்சி அ.த.க.பா, கோவில்வயல் சி.சி.த.க.பா,கிளி/முகாவில் அ.த.க.பா, கிளி/ கிளாலி றோ.க.த.க.பா, கிளி/அல்லிப் பளை சி.சி.த.க.பா பாட சாலைகளைச் சேர்ந்த மாணவர்கள்.மேற் குறித்த திகதிகளில் வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சியில் அவர்களது அதிபரூடாக சுட்டெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம்.

சுட்டெண் கிடைக்காத மாணவர்கள் வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சியுடன் தொடர்பு கொள்ளவும் என்றுள்ளது. (ஐ-405)




# வட்டக்கச்சி 'லக்கிஸ்ரார்' வி.க. மீண்டும் செயற்பட ஆரம்பித்தது

கிளிநொச்சி,ஓக.16

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சியில் அமைந்துள்ள 'லக்கிஸ்ரார்' விளையாட்டுக்கழகத்தின் மீள் அங்குரார்ப்பணக் கூட்டம் வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் ப. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னதாக கழகத்திற்காக உழைத்து இறுதி யுத்த தத்தின் போது கொல்லப்பட்ட கழகத்தின் முகாமையாளராகவும், பயிற்றுவிப்பாளராகவும் நீண்டகாலம் பணியாற்றிய சு.செல்வகரன் மற்றும் செயற்பாடு உறுப்பினர்களான கோ. விஜயராசா, எஸ் கேதீஸ்வரன்,எஸ் ரமேஸ்குமார் ஆகியோர் உட்பட கழக உறுப்பினர்கள், பிரதேச மக்களின் ஆத்ம சாந்திக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து கழகத்தின் கடந்த கால வளர்ச்சி நிலை போன்ற நிலையினை அடைவதற்கான செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் விளையாட்டுப் பயிற்சிகள் தொடர்பாகவும் மாகாண விளையாட்டுக் குழுவினை புனரமைப்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப் பட்டது.

இக்கூட்டத்திற்கு கழகத்தின் செயலாளர் வி.சுவிஸ்கரன், பொருளாளர் ப. ஜெயந்தன் உட்பட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் விளையாட்டு உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர்.

விளையாட்டு உத்தியோகத்தர் சி.ஜெயக்குமார் கழக செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகளையும், தனது கருத்துக்களையும் வழங்கினார்.

கடந்த ஏப்ரல் மாதம் வட்டக்கச்சி பகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் மீள்குடியேற்றப்பட்டிருந்தனர். இதன் பின்னர் முதல் தடவையாக இடப்பெயர்வுக்கு முன்பிருந்த அதே நிர்வாகக் குழுவினர் கழக வளர்ச்சிக்காக கூட்டம் நடத்தி கலந்துரையாடியிருப்பது பிரதேச விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கு பயனுள்ளதாக அமையும் எனவும் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஐ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகளின் காவலர்கள் இனிமேல் புனர்வாழ்வு உத்தியோகத்தர் என அழைக்கப்படுவர்

## கைதிகளின் உடைகளிலும் மாற்றம் வரும்

கொழும்பு,ஓக.16

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ பதவிப் பெயர்களில் மாற்றம் செய்யப்படுமெனப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத் தொடர்பாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட 12 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே அமைச்சினால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பெயர்கள் சிறைக்காவலர் என்பதற்குப் பதிலாக புனர்வாழ்வு உத்தியோகத்தர் என்று அழைக்கப்படும். அத்துடன் இவர்களின் உத்தியோகபூர்வ சீருடையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படும். இதைவிட கைதிகளின் அரைக்காற்சட்டைக்குப் பதிலாக வேறு ஆடைகள் வழங்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் சிறைச்சாலைகள் 1844 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. ஆகவே சிறைச்சாலைகளை மறு சீரமைப்புச் செய்வது அவசியமாகின்றது என்றும் அமைச்சர் குணசேகர கூறினார். (ஓ-க)

# வெங்காயத்துக்கான இறக்குமதி வரியை 25 ரூபாவாக அரசு அதிகரிப்பு

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் என்பவற்றுக்கு கிலோ ஒன்றுக்கான இதுவரை காலமும் 10 ரூபாவாக இருந்த இறக்குமதி வரியை மேலும் 15 ரூபாவால் அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வரி அதிகரிப்பு கடந்த 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. அதற்கமைய இதன்படி வெங்காயத்துக்கான இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு 25 ரூபாவாக இருக்கும் உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களது நலனைக் கருத்தில் கொண்டுமே அரசு இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சரான ஜோன்ஸ்ரன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (எ)



ஃபுபே செட்
வீட்டுக்கும் மற்றும் ஹோட்டலுக்கு
ரூபா 3950/-மிலிருந்து
டைடஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422


## கரைச்சிப் பிரதேச சபை
## முக்கிய அறிவித்தல்

முருகண்டியில் இருந்து ஆனையிறவு வரையான ஏ-9 வீதியின் (கண்டி வீதி) இரு மருங்கிலும் உள்ள பல கட்டடங்கள் காணிகள் இதுவரை திருத்தப்படாமல் இருப்பதும் பாவனைக்குட்படுத்தப்படாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனியார், அரச, அரச சார்பற்ற கட்டட காணி உரிமையாளர்கள் அவற்றை உடனடியாகத் திருத்தி பாவனைக்கு உட்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 31.08.2010 திகதிக்கு முன்னர் திருத்திப் பாவனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க முடியாவிடில் சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தற்போது உயிர்கொல்லி நோயாகப் பரவிவரும் டெங்கு நோயின் தாக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இந்த நடவடிக்கையை முக்கியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தங்கள் காணிக் கட்டடங்களைத் திருத்தி சுற்றாடலைப் பாதுகாப்பாக வைத்திருப்பது தங்களின் கட்டாயக் கடமை என்பதுடன் இதனை செயற்படுத்தாதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

பொன் நித்தியானந்தன்
விசேட ஆணையாளர்.

(சி/569962)

## ජාතික සම්පත
ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 47
திகதி - 14.08.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து M அதிர்ஷ்ட இலக்கம் 06 வெற்றி இலக்கம் 9 0 4 8 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M 06 9 0 4 8 6 | ரூ. 15,672,809.00 | - |
| 1 பரிசு | 06 9 0 4 8 6 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 9 0 4 8 6 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 0 4 8 6 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | 4 8 6 | ரூ. 1,000.00 | 243 |
| 5 பரிசு | 8 6 | ரூ. 50.00 | 2439 |
| 6 பரிசு | 6 | ரூ. 20.00 | 23526 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 9 0 4 8 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 9 0 4 | ரூ. 100.00 | 242 |
| 9 பரிசு | 9 0 | ரூ. 50.00 | 2500 |
| 10 பரிசு | M | ரூ. 20.00 | 9860 |
| 11 பரிசு | M 06 | ரூ. 100.00 | 1059 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,753,770.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470962, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.15,672,809.00

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2147 திகதி 14-08-2010

ஆங்கில எழுத்திற்கும் V

வெற்றி எண்கள் 12 28 35 40

போனஸ் இல: 33

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 183283 | 20/- | 3,665,660/- |
| 2 இல | 13088 | 100/- | 1,308,800/- |
| 3 இல | 269 | 1,000/- | 269,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7440 | 40/- | 297,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 517 | 1,000/- | 517,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 8688 | 100/- | 868,800/- |
| 2 இல + போனஸ் இல | 403 | 500/- | 201,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 360 | 200/- | 72,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,824,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 214090 | | 9,424,360/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 302216861-5-42 |
| குருநாகல் | 302208957-8-39 |
| அம்பாறை | 302214319-6-01 |
| காலி | 302220085-8-24 |
| பதுளை | 302216623-0-05 |
| அம்பாந்தோட்டை | 302210788-3-11 |
| இரத்தினபுரி | 302221291-7-32 |
| திருகோணமலை | 302221687-4-49 |
| அநுராதபுரம் | 302224587-0-25 |
| கண்டி | 302211707-2-18 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,500,400/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 ஓகஸ்ட் 18 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


TOSHIBA
Leading Innovation >>>
e-STUDIO

உத்தரவாதம்!
ஒவ்வொரு பிரதியிலும் 40% சேமிப்பு



உங்களிடம் டொஷிபா e-studio அச்சு இயந்திரங்களும் பிரதியெடுக்கும் இயந்திரங்களும் இருக்குமானால், தரமுயர்ந்த அச்சுப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் செலவு ஏற்படுமே என்று கவலைப்படத் தேவையில்லை. மிகக் குறைந்த செலவில் நிமிடம் ஒன்றிற்கு 18 மற்றும் 21 பக்கங்களை அச்சிடக்கூடிய e-studio 181/211/182/212 இயந்திரங்கள், இந்த வகையிலுள்ள அதிசிறந்த பிரிண்டர்கள், கொப்பியர்கள் மற்றும் ஸ்கேனர்களாக முன்னணி வகிக்கின்றன. எளிதான பாவனை, A3 அளவு வரையிலான ஆவணங்களை அச்சிடக்கூடிய வசதி, அதிக இடம் பிடிக்காத வடிவமைப்பு என்பவற்றின் மூலம் அவை உங்கள் அலுவலகத்தின் வினைத்திறனை அதிகரிக்கும். நீடித்த உழைப்பு, குறைந்த பராமரிப்புச் செலவு, சிக்கனமான மின்சக்தி நுகர்வு ஆகிய சிறப்பம்சங்களையும் கொண்ட டொஷிபா e-studio உங்கள் அலுவலகச் செலவுகளைக் குறைக்க அருந்துணையாகும்.

பிரதி ஒன்றிற்கான செலவு
e-studio 59 சதம் ஏனையவை 92 சதம்

e-STUDIO181
e-STUDIO211
Print Copy Scan



- ஸ்ராண்டட் 32 MB மெமரி
- Access code
- 1-999 பல்தொகுதிப் பிரதிகள்
- 300 x 300 dpi/ 600 x 600 dpi பிரின்ட் ரிசொலூஷன்
- 350 தாள் காகித உள்வாங்கு திறன்
- Win 2000/xp/vista/Server 2003/2008/7 Os support
- மனுவல் டுப்ளெக்ஸ் பிரின்டிங் / ரிக்கவர் பிரின்ட்
- 25 - 200% வரை 1% கூடிச்செல்லும் பிரதியெடுப்பு விகிதம்
- மூலப் பிரதிகளாக தாள்கள்/ நூல்கள்/ 3-d பொருள்கள் ஏற்கப்படும்

e-STUDIO182
e-STUDIO212
Print Copy Scan Fax



- ஸ்ராண்டட் 112 MB மெமரி
- LCD மற்றும் ஒளியூட்டிய கட்டுப்பாட்டு பனெல்
- 25 - 200% வரை 1% கூடிச்செல்லும் பிரதியெடுப்பு விகிதம்
- 350 தாள் காகித உள்வாங்கு திறன்
- 1-999 பல்தொகுதிப் பிரதிகள்
- 2400 x 600 dpi பிரின்ட் ரிசொலூஷன்
- Win 2000/xp/vista/Server 2003/2008/7 மற்றும்
- Mac x 10.2.4/10.3/10.4/10.5/10.6 Os support
- Access code/ Department code
- Scan-to-Email/ 1000 பக்கங்கள் ஸ்கேனிங்
- மூலப் பிரதிகளாக தாள்கள்/ நூல்கள்/ 3-d பொருள்கள் ஏற்கப்படும்

விருப்பத்தேர்வு - டுப்ளெக்ஸ் பிரின்டிங் | PCL6 & PS3 emulation

உங்கள் பழைய பிரதியெடுக்கும் இயந்திரத்தைக் கையளித்து ரூ.40,000 வரை தள்ளுபடி பெறுங்கள்.*



மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்:
அஷோக் - 0777 725241/ அலீம் - 0777 278472/ சஞ்ஜீவ - 0777 386909

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்:
ஜோண். கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 2313000, 011 2431576, 011 4702611 பெக்ஸ்: 011 2431745
இணையத்தளம்: www.jkoa.com

*நிபந்தனைகளுக்கு உட்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனின் கொடியேற்ற நிகழ்வில்....





சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கொடியேற்ற வைபவம் நிகழ்வதை முதலாவது படத்திலும் வள்ளி, தெய்வயானை சகிதம் முருகப் பெருமான் வீதியுலா வருதை இரண்டாவது படத்திலும் பக்தர்கள் சிதறு தேங்காய் அடித்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் கொடியேற்றத்துக்காகத் திரண்டு வந்த பக்தர்களையும் தென்னிலங்கைப் பயணிகளையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள் : ரட்ணம், சுகந்தன், லக்ஸ்மன், நேசன்)*

## எதிராளி தப்பித்துச் செல்லும் விபத்துகளில் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு

### வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தினால் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஒக.16

வீதி விபத்துக்களின்போது எதிராளி வீதியில் மோதிவிட்டுத் தப்பியோடிய சந்தர்ப்பங்களில் கடுமையாகப் பாதிப்புக்குள்ளான அல்லது இறந்த ஆள்களுக்கான நஷ்டஈட்டினை வழங்குவதற்கான திட்டமொன்றை போக்குவரத்து அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

அமைச்சின் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வீதி விபத்து ஒன்று நிகழ்ந்ததால் அவ்விபத்துடன் தொடர்புடைய எதிராளி அடையாளம் காணப்படாதவிடத்து அதில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அல்லது இறந்திருப்பின் அவ்விதம் பாதிக்கப்பட்ட அல்லது இறந்தவரில் தங்கியிருப்போர் நஷ்டஈட்டுக் கோரிக்கைக்குத் தகுதியுடையோராகின்றனர்.

மேற்படி நஷ்டஈடாக இறப்பு நிகழ்ந்தவிடத்து 50 ஆயிரம் ரூபாவும் பாரதூரமான காயம் ஏற்படுமிடத்து 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இதற்கான விண்ணபப்பபடிவங்களை விண்ணப்பதாரர் வதியும் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம் அல்லது கொழும்பு- 10 இல் அமைந்துள்ள போக்குவரத்து அமைச்சின் தேசிய வீதிப் பாதுகாப்புச் செயலகம் ஆகியவற்றிலோ அல்லது www.transport.gov.lk எனும் இணையத்தளத்திலோ பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விண்ணப்பங்களை விபத்து நிகழ்ந்து ஆறு மாதங்களுக்குள் செயலாளர், தேசிய வீதிப் பாதுகாப்புச் செயலகம், போக்குவரத்து அமைச்சு, இல.1, டி.ஆர். விஜயவர்த்தனா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத் தலைவர் கேட்டுள்ளார்.

(எ-16-121)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.16

நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் திருமுறைக் கச்சேரியில் கே.எஸ்.ஆர்.திரு ஞானசம்பந்தன் வழங்கும் பாட்டும் இடம் பெறும்.

கே.பத்மநாதன் வயலினும் சதாவேல் மாறன் மிருதங்கமும் கே.நந்தகுமார் முகர் சிங்கும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவை ஒட்டி இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத் தில் நடத்தும் சமய சொற்பொழிவுகள் மற்றும்கலைநிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு காரைக்கால் அம்மையாரின் பக்தி நெறி' என்னும் தலைப்பில் திருமதி ஸ்ரீஸ்கந்தராசா காமாட்சியம்மா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். குப்பிளான் விக்னேஸ்வரா அறநெறிப் பாடசாலை, களவாவோடை நாக பூசணி அம்மன் அறநெறிப்பாடசாலை, தெல்லிப் பழை துர்க்கை அம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)


முருகனே! நல்லைக்கந்தனே சரணம்!



நல்லூர் கந்தசுவாமி கோயிலில்..


இன்று இரண்டாம் திருவிழா

வேல்-வள்ளி, தேவயானை வீதிவலம் மாலை 6 மணி

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

வெஸ்ரா இன்டஸ்றீஸ்

குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை. தொ.பே: 0214591378

## நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

### வேண்டுதலை ஈடேற்றி விடு!

திருவுடை நல்லையில் தீந்தமிழ் தெய்வமாய்
சீலம் நிறை மண்ணரின் காவலனாய்
மருவு மடியார் மருள் நீக்கியாளும் மருந்தாய்
பேராலயம் கொண்ட குமரா
கருவறையில் வேலாய் கைதொழுவார்க்கிரங்கி
பிறவிப் பிணியறுக்கும் வள்ளலாய்
அருள் சொரியும் ஆறுமுகனாய் சித்துக்களாடும்
ஆனந்தக் கந்தனாய் அற்புதங்கள் புரி
கருணைக் கடலே செம்மையாமீயும் செம்மலே
நினைச் சரண் புகுந்தோமப்பா
பெருமானே போற்றினோம் நின் பாதமலர் சண்முகா
இத்தரையில் இடர்படுவார் அவலத்தை
தீருமையா திவ்வியனே மூதாதையர் வாழ்ந்துயர்ந்த
நிலமும் புலமும் உய்தி பெறவே
முருகா திருமேவும் மூவர்க்கும் முன்னவா
வேண்டுதலை ஈடேற்றி விடு!

கந்த தியாகராசா.
கோண்டாவில்.

### தீர்வு தா வேலனே

*கலியுக வரதனே கந்தவேற் பெருமானே உனைக் கைதொழ*
*சலியாது வரமீயும் வண்டமிழ் முருகனே*
*நலிவடைந்து நானிலமெங்கும் சிந்துகின்றோம் கண்ணீர் அசுரர்*
*பலிகொண்ட வேலவனே அழுகின்றோம் தமிழர் நாம்*
*வலி தீர்த்தெமக்கு வளமான தீர்வுதா வண்ணமயிலேறும் முருகனே*

- புலோலியூர் சரணா

### கருணை காட்டுமையா!

முடிந்தது போரொலி முடியவில்லைச் சோகவொலி
முள்வேலியுள் தடங்கி முடங்கும் மக்கள்
விடிவை வேண்டுகின்றார் வீடுசென்று வாழ்வதற்கு
வழியைத் தேடுகின்றார் விழியில் கண்ணீரொடு
முடிவொன்று வருவதற்கு முழுவமைதி தருவதற்கு
மால்மருகா வேல்முருகா மனமிரங்கி வழிகாட்டு
கொடியேற்ற நன்னாளில் அடியார்கள் நல்லூரில்
கந்தாவுனைப் பணிகின்றார் கருணை காட்டுமையா!

குளப்பிட்டி க. அருமைநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறினால் பாதிப்புத் தமிழ் மக்களுக்காம்

(கடந்த 08.08.2010 தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையப் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹலுகல்ல வுடனான சந்திப்பு இடம்பெற்றது. லக்ஸ்மன் ஹலுகல்ல ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது சரியான தொடர்பாடல் இன்மையே இனமுரண்பாட்டுக்குக் காரணமாகும். உங்கள் மத்தியில் உங்கள் மொழியில் உரையாட முடியவில்லை. சிறந்த தொடர்பாடல் காணப்பட்டால் இந் நிலைமை தோன்றியிருக்கமாட்டாது. ஊடகங்கள் சிறந்த, உண்மையான தகவல்களை எடுத்துக் கூறலாம். ஜனாதிபதி இலங்கையிலுள்ள அனைவருக்கும் ஒரேவிதமாகவே சேவையாற்ற வேண்டுமெனச் செயற்பட்டு வருகின்றார். இந்நிலையில் தான் வடக்கு - கிழக்கிலும் இன்று அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச் செய்தியை ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். எனவேதான் சாதாரண குடிமகனை விட ஊடகங்களுக்குப் பெரும் பொறுப்புக் காணப்படுகின்றது. தவறுகள், குற்றங்கள் நடந்தால் ஊடகங்கள் அவைகளையும் தெரிவிக்க வேண்டும். அநுராதபுரம், மொனராகலை ஆகிய இடங்கள் அபிவிருத்தியடையாத பகுதிகளாகக் காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் தற்போது அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊடகங்கள் இவற்றினை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

## போர் காரணமாக வடக்கின் உண்மை நிலையை அவ்வேளையில் அறியமுடியவில்லை என சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கவலை




போருக்குப் பின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 75 வீத மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாதிகள் அல்ல. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை இராணுவம் ஒழுக்கமுள்ளதாகக் காணப்படுகின்றது - என்றார்.

வடக்கில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு லக்ஸ்மன் ஹலுகல்ல பதிலளிக்கையில் '' தேசிய பாதுகாப்பு முக்கியம். அதனைக் குறைக்க முடியாது. யுத்தம் முடிவுற்று 11 மாதங்களே கடந்துள்ளன. கண்ணிவெடிகளை அகற்றும் பணியினை இராணுவமே மேற்கொண்டு வருகின்றது. இராணுவத்தினர் தனியார் வீடுகளைவிட்டு வெளியேறி வருகின்றனர். கொழும்பில் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாகவே அகற்றப்பட்டன. உயர் பாதுகாப்பு வலயங்களை நகர்த்தியும் குறுக்கியும் உள்ளோம். இராணுவத்தை வடக்கு - கிழக்கிலிருந்து முற்றாக வெளியேற்றுவது தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்'' என்றார்.

மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் வந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவது பற்றி மன்னார் பிரதேச ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர்கள் சட்ட விரோதமாகவே இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிகின்றார்கள். இவ்விடயத்தைப் படிப்படியாக அணுகி வருகின்றோம். 30 வருட காலம் பிரச்சினையை ஒரே நாளில் தீர்த்து விடமுடியாது'' எனவும் லக்ஸ்மன் ஹலுகல்ல பதிலளித்தார்.

மேலும் ஊடகவியலாளர்களினால் வடபகுதியில் இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்கள் பற்றி வினா எழுப்பப்பட்ட போது '' அங்கு 30 வருட காலம் ஆயுத கலாசாரம் இருந்தது. இக்கலாசாரத்தைப் பின்பற்றியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அங்கிருந்த ஆயுதக் குழுக்களின் எச்சசொச்ச நடவடிக்கைகள் தற்போதும் காணப்படுகின்றது. அதனால் தான் உயர் பாதுகாப்பு வலயத்தை முழுமையாக அகற்ற முடியாதுள்ளது. வெள்ளைவான் கடத்தல் என்பது அரசுக்கு எதிரான தொலைக்காட்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட பொய்ப்பிரசாரம். கடந்த காலத்தில் வெள்ளைவான் கடத்தல் தொடர்பாக 117 முறைப் பாடுகள் கிடைத்தன. அவற்றில் 7 முறைப்பாடுகள் மட்டுமே உண்மையானவை எனக் கண்டறியப்பட்டது. காதல் விவகாரம், தனிப்பட்ட பகைமை காரணமாக இவை நடத்தப் பட்டன என லக்ஸ்மன் ஹலு கல்ல பதிலளித் தார்.

இக்கலந்துரை யாடலில் மேஜர் ஜெனரல் உதய மெதவில தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா ஆகியோரும் சமூகமளித்திருந்தார்கள்.

பிற்பகல் 4.30 மணிக்கு யங் ஏசியா தொலைக்காட்சி நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இந்நிறுவனம் தனக்கெனத் தனியான அலைவரிசை இல்லாத போதிலும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஏனைய அலைவரிசைகளில் ஒளிபரப்பி வருகின்றது. இன நல்லுறவை வளர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு நிகழ்ச்சிகளை தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் ஒரே நேரத்தில் ஒளிபரப்பும் வசதியினை இந்நிறுவனம் கொண்டுள்ளது. எமக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் 'கண்ணகிபுரம்' நாடகம்; நல்லாட்சி சமத்துவம் உரையாடல் ஆகியவற்றினை ஒளிநாடக்களில் போட்டுக் காண்பித்தார்கள்.

அன்றைய தின் இறுதி நிகழ்ச்சியாக தினக்குரல் பத்திரிகை நிறுவனத்திற்கு மாலை 6.30 மணியளவில் சென்றிருந்தோம். தினக்குரல் பத்திரிகை நிறுவன குடும்பத்தவர்களால் வரவேற்கப்பட்டு அவர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து எம்மோடு வருகை தந்த மூத்த பத்திரிகைப் படப்பிடிப்பாளர் கதிரவேலுவைக் கௌரவிப்பதற்கான ஒழுங்கினையும் தினக்குரல் பத்திரிகை நிர்வாகம் ஏற்கனவே ஒழுங்கு செய்திருந்தது. 70 வயதைத் தாண்டிய பத்திரிகைப் படப்பிடிப் பாளர் கதிர வேலு சுமார் 42 வருடங்களாகப் பத்திரிகைப் படப்பிடிப்புத் துறையில் மிகுந்த ஈடு பாட்டுடன் கட மையாற்றி வருகின்றார். தினக்குரல் பத்திரிகை நிறு வன குடும்பத் தினர் கதிரவேலுவின் சேவையினைப் பாராட்டி அவ ருக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவித்தார்கள். தினக்குரல் பத்திரிகை நிறுவன விஜயத்தோடு எமது முதலாம் நாள் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற திரும்பவும் ஊடகவியலாளர்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பம்பலப்பிட்டியிலுள்ள ஹொட்டல் வெஸ்ரன் நோக்கித் திரும்பினோம்.



மறு நாள் 30 ஆம் திகதி வெள்ளிக்

## வடக்கு - கிழக்கு ஊடகவியலாளர் உறவுப்பால நிகழ்ச்சித் தொகுப்பு 02

கிழமை காலை தேசிய சமாதான பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தஇரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு ஊடகவியலாளர் குழு தயாரானது. அன்றைய தினம் முதல் நிகழ்ச்சியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கொழும்பிலுள்ள சமூக சமய நடுநிலை மையத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இக்கலந்துரையாடலை தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா அறிமுக உரையுடன் ஆரம்பித்து வைத்தார். 30 வருடகாலப் போரினால் வடக்கிற்கும் தெற்குக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்ததினால் வடக்கின் நிலமை பற்றி அறிந்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டதாக ஜெஹான் பெரேரா தனது உரையின் போது தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் வடக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், குறிப்பாக மீள்குடியேற்றப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பணிகள் பற்றியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறினார்கள். இவைகள் அனைத்தையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மிகவும் அக்கறையுடன் கேட்டறிந்து கொண்டார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடலை நிறைவு செய்த ஊடகவியலாளர்களை தேசிய சமாதானப் பேரவையினர் 'சண்டே லீடர்' பத்திரிகை நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றார்கள். காலஞ்சென்ற 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்காவின் சகோதரர் லால் விக்கிரமதுங்கா வடக்கு ஊடகவியலாளர்களை வரவேற்றுத் தமது பத்திரிகை நிறுவனத்தைச் சுற்றிக் காண்பித்தார். லசந்த விக்கிரமதுங்கா சுட்டுக் கொல்லப்பட்டபோது அணிந்திருந்த உடை அவரது டயறி மற்றும் அவர் பயன்படுத்திய பொருள்களை அந்நிறுவனத்தில் கண்ணாடிப் பேழை ஒன்றில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. வடக்கு ஊடகவியலாளர்களுடன் லால் விக்கிரமதுங்கா மற்றும் 'சண்டே லீடர்' ஆசிரியர் பிரிட்சிகா கலந்துரையாடினார்கள். அக் கலந்துரையாடலின் போது வடபகுதி ஊடகவியலாளர்களின் தற்போதைய நிலையை அறிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள். இக்கலந்துரையாடலின் போது லசந்த விக்கிரமதுங்காவின் சகோதரர் லால் விக்கிரமதுங்கா கருத்து வெளியிட்ட போது 'சண்டே லீடர்' நிறுவனம் 17 வருடகாலமாக இயங்கி வருகின்றது. 9 தடவைகள் இந்நிறுவனம் தாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை, நல்லாட்சி, சமத்துவம் என்பதற்காக நாம் பாடுபட்டு வருகின்றோம். சுடர்ஒளி பத்திரிகையினை அச்சிட முடியாத நிலை ஏற்பட்டபோது அப்பத்திரிகையை நாம் அச்சிட்டு உதவினோம். லசந்தாவின் மரணத்திற்குப் பின்னரும் எம்மீது பயங்கரவாத முத்திரை குத்துவதற்காக வழக்குத் தொடுக்கப்பட்டது. தேர்தல் காலத்தில் பல சோதனைகளுக்கும், அச்சுறுதல்களுக்கும், தாக்குதல்களுக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் லசந்தாவின் கொள்கையை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

கறுப்பு ஜூலை பற்றி முதன் முதலில் எழுதி தமிழ் மக்களிடம் அதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என எமது பத்திரிகைதான் எழுதியிருந்தது. வடக்கு மக் களுக்காகத் தொடர்ந்து எழுதுவோம். அம்மக்களோடு எமக்கு நிறையவே தொடர்புண்டு. அரசாங்கம் நல்வழியில் நடக்க வேண்டு மென்றே விரும்புகிறோம். 20 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் சிறந்த ஆங்கில எழுத்தாளர்கள் இருந்தார்கள். அந்நிலைமை மீண்டும் உருவாக வேண்டும். எனத் தெரிவித்தார்.

-திவ்விய குமார்-

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் - பொதுமக்கள் நல்லுறவு 'ருவென்ரி - 20'; ஜொனியன்ஸிடம் வீழ்ந்தது கடற்படை அணி

யாழ்ப்பாணம்,ஓக.16

ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 12 ஓட்டங்களால் கடற்படை அணியை வெற்றி கொண்டது.

யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகமும் யாழ்.துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் பொதுமக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்திற்கான 'ருவெண்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கடற்படை அணி மோதியது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கடற்படை அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.



இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் காண்டீபன் 34 ஓட்டங்களையும் மயூரன் 27 ஓட்டங்களையும் றஜீவன் 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கடற்படை அணியைச் சேர்ந்த எக்கநாயக்க 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய கடற்படை அணியினர் 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் சில்வா 47ஓட்டங்களையும் பிரசன்னாஜீத் 24 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியைச்சேர்ந்த காண்டீபன் 2.2 ஓவர்கள் பந்து வீசி 12ஓட்டங்ளைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (6-23)

# சதுரங்கப் போட்டி; இந்துமகளிர் முதலிடம்

வலி.வடக்கு,ஓக.16

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:

யாழ்.இந்து மகளிர் கல்லூரி 20 புள்ளிகளுடன் முதலாமிடம், வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 16 புள்ளிகளுடன் இரண்டாம் இடம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 14 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (6-86)

# வெற்றியீட்டிய வீரர்களுக்கு பாராட்டு விழா இன்று

வலி.வடக்கு,ஓக.16

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைளைப் பாராட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (6-23-86)

# சென்.மேரிஸின் உதைபந்தாட்டம்; இன்று களமிறங்கும் அணிகள்

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

* காலை இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.
* இரண்டாவது ஆட்டத்தில் நவிண்டி கலைமதி விளையாடுக்கழக அணியை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக் கழக அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.
* மூன்றாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.சேவியர் அணி களமிறங்குகின்றது.
* நான்காவது ஆட்டத்தில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணியும்
* ஐந்தாவது ஆட்டத்தில் றோயல் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணியும்
* ஆறாவது ஆட்டத்தில் கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக்கழக அணியும்,
* ஏழாவது ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியும் களமிறங்குகின்றன.

(6-23)

# ஆவரங்கால் மத்தி சம்பியன்

கைதடி,ஓக.16

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய 'செற்றப்' ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

மேற்படி ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள பல கழகங்கள் பங்கு பற்றியபோதும் இறுதிச் சுற்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் அதனை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து 'செற்கள்' என நிர்ணயிக்கப்பட்ட இப்போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்ற போதும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் 21:25, 20: 25, 23: 25 என்ற புள்ளி அடிப்படையில் மூன்று போட்டிகளில் தொடர்ந்து வென்று காங்கேசன்துறைஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது.

நடைபெற்ற இப்போட்டிக்கு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.மனோகரன், என்.சுதேஸ்குமார் ஆகியோர் நடுவர்களாக கடமை புரிந்தனர். (த-288)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# ஸ்கந்தாவை 30 ஓட்டங்களால் வென்றது தெல்லிப்பழை மகாஜனா

வலி.வடக்கு,ஓக.16

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் பிரிவு III குழுவுக்கான போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 28.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

ரசீகரன் 41 பந்துகளில் 08 பௌண்டறிகளுடன் 36 ஓட்டங்களையும் த.சாரங்கன் 24 பந்துகளில் 08 பௌண்டறிகளுடன் 36 ஓட்டங்களையும் சிந்துஜன், நிலக்ஷன் தலா 16 ஓட்டங்களையும் றிசோத் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

171ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 38.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

மதுசன் 51 பந்துகளில் 06 பௌண்டறிகளுடன் 31, ஜனக்சன் 23, மயூரதன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். (த-86)

# அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி செப்ரெம்பரில் ஆரம்பம்

வலி.வடக்கு,ஓக.16

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாதம் செப்ரெம்பரில் ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகளை மூன்று கட்டங்களாக நடத்துவதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

முதலாவது கட்டத்தில் வலைப்பந்து, சதுரங்கம், ஜூடோ, குத்துச்சண்டை, உடற்பயிற்சி, உதைபந்தாட்டம், கராத்தே, மேசைப் பந்து, பூப்பந்து, எல்லே, அரைமரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் கரப்பந்தாட்டம் ஹொக்கி, மென்பந்து கிரிக்கெட் போட்டி, மல்யுத்தம், ஜிம்னாஸ்டிக், கபடிப் போட்டி, கூடைப்பந்தாட்டம், நீச்சல், கரம், ரெனிஸ் மற்றும் பாரம் தூக்கும் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் செப்ரெம்பர்மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டமாக மெய்வன்மைப் போட்டிகள் செப்ரெம்பர் 29ஆம், 30ஆம் திகதிகளிலும் மற்றும் ஒக்ரோபர் முதலாம் 2ஆம், 3ஆம் திகதிகளிலும் நடைபெற உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (6-86)



இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தா[illegible] யாழ்ப்பாணப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரி[illegible] இடையே நடத்திய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டபோது....... (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவேரி கலாமன்றம்

நடத்தும் பொதுச்சபை நிகழ்வும்
கௌரவிப்பு விழாவும் - 2010

தலைவர் : க. புஸ்பராசா
காலம் : இன்று (16.08.2010) பிற்பகல் 3 மணி
இடம் : மன்ற வளாகம், பறாளாய் வீதி, சுழிபுரம்

**பிரதம விருந்தினர்:**
கௌரவ திருமதி இமெல்டா சுகுமார்
*(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)*

**சிறப்பு விருந்தினர்கள்:**
ஆ.பிரதீபன்
*(திட்டப் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)*
ஏ.அன்ரன் யோகநாயகம்
*(பதில் பிரதேச செயலர், வலி.மேற்கு சங்கானை)*

**ஆசியுரை:**
அதிவண கலாநிதி D.S. தியாகராஜா
*(பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)*

## சமூகக் காவலர் விருது பெறுபவர்கள்


S.முத்திசிகாமணி

திரு. S.முத்திசிகாமணி
(செயலாளர்,
பிரதேச சபை, வலி.மேற்கு
சுழிபுரம்)


திருமதி பொ.இராஜேஸ்வரன்

திருமதி
பொன்மலர் இராஜேஸ்வரன்
(இயக்குநர், INS)


Dr.பிறேமன் ஜெயரட்ணம்

Dr.பிறேமன் ஜெயரட்ணம்
(முன்னாள் வைத்திய அதிகாரி,
கிறீன் வைத்தியசாலை)


திரு.S.சிவசுப்பிரமணியம்

திரு.S.சிவசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,
தொலைத் தொடர்பு நிறுவனம்)

யாவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி
அன்புடன் அழைக்கின்றோம்

திரு.க.புஸ்பராசா
தலைவர்

செல்வி து.தயாராணி
செயலாளர்

காவேரிக் கலாமன்றம்
Reg.No வடமா/கஅ/பணி/சங்/01/2010

(102051)


# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை தொடர்ந்து வைத்திருக்க அரசு திட்டம்

## சட்டமா அதிபரின் ஆலோசனையே காரணமாம்

கொழும்பு,ஒக.16

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரிப் பதவியை உருவாக்கும் யோசனையைக் கைவிட்டு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையே தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்கு அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது. சட்டமா அதிபர் மொகான்பீரிஸ் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள ஆலோசனையொன்றின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பது வருமாறு:- நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவியாக மாற்றுவதாயின் அதற்கு பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டியிருக்கும் என்று சட்டமா அதிபர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியை சந்தித்த வேளை இத்தகவலை ரணில் விக்கிரமசிங்காவிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்துவிட்டு, நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவியொன்றை தோற்றுவிப்பது தொடர்பாக இரு தலைவர்களும் விரிவான உடன்பாடு ஒன்றை ஏற்கனவே கொள்கை ரீதியில் உருவாக்கியிருந்தனர். இப்போதுள்ள நிலையில் சட்டமா அதிபர் இவ்வாறான ஒரு கருத்தை முன் வைத்துள்ள அதேநேரம் இந்த விடயம் தொடர்பாக ஐ.தே.கட்சியும் தனது சொந்த அரசியல் சட்ட நிபுணர்களின் கருத்துக்களைக் கேட்டறிய வேண்டியிருக்கிறது - இவ்வாறு அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ப)

## வீதி திருத்தப்படவுள்ளது

நாவற்குழி,ஒக.16

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் நாயன்மார்கட்டு பாரதி வீதி திருத்தப் பணி உள்ளடக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு - புத்தூர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மிகநீண்ட காலமாகத் திருத்தப்படாது மோசமான நிலையிலுள்ள இவ்வீதியைத் திருத்துவதன் அவசியம் குறித்து இப்பிரதேச மக்கள் மிக நீண்ட காலமாகவே கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (121)

## நேர்முகத் தேர்வு

'டிஜிற்றல் ஆர்ட் வேக்' பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வு இன்றும் நாளையும் மாவட்ட கிராம அபிவிருத்திச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தபால் மூலம் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே உரியவர்கள் குறித்த நேரத்தில் தவறாது நேர்முகத்தேர் வில் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.
(எ-313-310)

## சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஒக.16

வலி.கிழக்குசைவ சமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை நிகழ்வுகள் இன்று கோப்பாய் பழைய வீதியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருமுறைப் பாராயணம், சுந்தரமூர்த்தி நாயனாரும் சுந்தரத் தமிழும் என்னும் தலைப்பில் சிவநெறிக் கலா நிதி இராசையா சிறிதரன் வழங்கும் கருத்துரையும் இடம் பெறும். (201)

* * *

வவுனியா சைவ சமய பாதுகாப்பு பேரவையின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை தின நிகழ்வுகள் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வவுனியா குருமண்காடு ஆறு முகநாவலர் திருமுறை மண்டபத்தில் இடம்பெறும்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 02.02.1928
மறைவு 18.07.2010

## திருமதி சுந்தரம் பொன்னம்மா

கடந்த 18.07.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (17.08.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவி தெற்கு,
பாலாவி,
கொடிகாமம்.

மச்சாள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(102052)





நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயம்
பஞ்சகர்த்தா சபை உறுப்பினர் விபரம்

## பொது அறிவித்தல்

நவாலி வடக்கு பெத்தநாச்சிமார் ஆலய பதிவு இல. (HA/5/JA/763) பஞ்சகர்த்தா சபைக்கான புதிய நிர்வாக சபை கூடி 05.07.2010 அன்று மக்கள் முன்னிலையில் ஆலய முன்றலில் தெரிவு இடம் பெற்றுள்ளது. இச்சபையே ஆலயத்தின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதுடன் எதிர்காலத்தில் மக்களால் வழங்கப்படும் நன்கொடைகள், நிதிகள், நெல்மானியங்கள் மற்றும் நேர்த்திகள், பூசைகள் தொடர்பாக ஆலய பிரதம குருவும், சபைத் தலைவருமான சிவஸ்ரீ இ.சபாரத்தினசிவத்துடன் தொடர்புகொள்ளவும். இந் நடைமுறை 23.08.2010 முதல் செயற்படும் என்பதனை இத்தால் ஆலய அடியார்களுக்கு மனப்பூர்வமாக அறியத்தருகிறேன்.

பஞ்சகர்த்தா சபை உறுப்பினர்
விபரம் வருமாறு:

தலைவர்: சிவஸ்ரீ இ.சபாரத்தினசிவம்
தேசிய அடையாள அட்டை இல. 442262390 V
உபதலைவர்: திரு.வைரவிரசிங்கம் சந்திரபாலன்
தேசிய அடையாள அட்டை இல. 753574212 V
செயலாளர்: திரு.சுப்பிரமணியம் பாலசிங்கம்
தேசிய அடையாள அட்டை இல. 501624390 V
உப செயலாளர்: திரு.சிவநேசன் ஜனார்த்தனன்
தேசிய அடையாள அட்டை இல. 881383152 V
பொருளாளர்: திரு.திருஞானம் சுந்தரலிங்கம்
தேசிய அடையாள அட்டை இல. 801931910 V

சிவஸ்ரீ இ.சபாரத்தினசிவம்,
தலைவரும் ஆலய பிரதம குருவும்,
நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயம்.

(102046)



# IELTS

[ Preparation Course ]

## Group and Individual & ENGLISH PROFICIENCY COURSES

- ✓ SPOKEN ENGLISH WITH GRAMMAR
- ✓ BUSINESS ENGLISH
- ✓ GENERAL PROFICIENCY IN ENGLISH

Specialized Lecturer From Colombo

IDM Nation's ICT Academy Pre-University College

IDM Pre-University College
No1, 1st Lane, Brown Road, Neeraviady, Jaffna.
Tel: 021 7 200 266 | 0776022546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. துடுப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று மூன்று கட்டங்களாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

| கட்டங்கள் | நடத்தப்படும் நாட்கள் |
|---|---|
| தெரிவுப்போட்டி | முதல் 4 நாட்கள் |
| அரை இறுதிப்போட்டி | அடுத்த 3 நாட்கள் |
| இறுதிப்போட்டி | இறுதிநாள் |

இதன்படி துடுப்பந்தாட்டப் போட்டி 14 ஆம் திகதி ஆரம்பமானது எனின், போட்டி முடிவடைந்த திகதி,
1) 20 ஆம் திகதி 2) 21 ஆம் திகதி
3) 19 ஆம் திகதி


✱ பின்வரும் தகவல்களைக் கொண்டு வினாவிற்கு விடைதருக.
1kg அரிசி + 250g பயறு = ரூ. 82.00
750ml எண்ணெய் + 1kg அரிசி = ரூ. 145.00
250g பயறு + 250ml எண்ணெய் = ரூ. 47.00

25. 2kg அரிசி 1ml எண்ணெய் 500g பயறு என்பவற்றில் மொத்த விலை யாது?
1) ரூ 236.00 2) ரூ 148.00 3) ரூ 274.00


26. நான் அப்பாவுடன் நகரத்தில் சென்று கொண்டிருக்கும்போது கண்ட நிறுவனங்களின் இலச்சினைகள் வருமாறு.

அதன்படி நான் கடந்து சென்ற நிறுவனங்களைக் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
1) தபாலகம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை வங்கி.
2) ஸ்ரீலங்கா ரெலிகொம், தபாலகம், இலங்கை மின்சார சபை.
3) சர்வோதயம், மக்கள் வங்கி, இலங்கைப் போக்குவரத்துச் சபை.

27. ஓரங்களை மடித்து ஒட்டுவதன் மூலம் கனவுரு ஒன்றை அமைக்கக் கூடிய வெட்டு உருவைத் தெரிக




28. X,Y என்னும் இரு தவளைகள் A என்ற எழுத்தில் உள்ளன. X தவளையானது வலப்பக்கமாக ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களில் பாய்ந்து செல்லும். Y தவளையானது இடப்பக்கமாக ஓர் எழுத்தைத் தாண்டி (ஒன்று விட்ட எழுத்துக்களுக்கு) பாய்ந்து செல்கிறது. இரண்டு தவளைகளும் மீண்டும் எந்த எழுத்தில் சந்திக்கும்.




1) G 2) F 3) A

29.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | எ | 1 | க் | 6 | ட |
| 2 | கு | 4 | தி | வ | 5 |
| 8 | 1 | உ | 6 | யு | சு |
| ம | பு | 8 | மு | 7 | 9 |
| 5 | த | 4 | ந | சி | வி |
| 3 | ச | 9 | அ | 3 | 6 |

ஒருவாறு முன்வரிசையில் இடம்பிடித்துக் கொண்டேன் என்பதால் கருதப்படுவது,
1) கஷ்டப்பட்டு முன்வரிசையில் இடம்பிடித்துக் கொண்டேன்.
2) ஒரு முறை மட்டுமே முன்வரிசையில் இடம் பிடித்துக் கொண்டேன்.
3) நேரத்துடன் முன்வரிசையில் இடம்பிடித்துக் கொண்டேன்.

✱ 30 ஆம், 31 ஆம் வினாக்களுக்கு அறிவுத்தலின்படி செயற்படுக.

30. எழுதுக்களின் எண்ணிக்கையை விட இலக்கங்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பின் "கு" எழுத்தைச் சுற்றி வட்டமிடுக. அப்படி இல்லை எனின், "அ" என்ற எழுத்தைச்சுற்றி வட்டமிடுக.

31. ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையை விட இரட்டை எண்களின் கூட்டுத் தொகை கூடியது எனின்,
"ம" என்னும் எழுத்தின் மீது (×) புள்ளடி இடுக. அப்படி இல்லை எனின், "மு" என்னும் எழுத்தின் மீது (×) புள்ளடியிடுக.

32. 
இவ்வுரு ஒரேயளவான கனவுருக் குற்றிகளினாலும் ஒரே அளவான சதுரமுகிக் குற்றிகளினாலும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கனவுருக் குற்றிகளின் எண்ணிக்கை ஐந்து எனின், சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

33. தரப்பட்ட இரண்டு டிஜிட்டல் கடிகாரங்களும் காட்டும் நேரம் தொடர்பாக கூறக்கூடியது,

A 14:45 B 10:15

1) A,B இரண்டு கடிகாரங்களும் பிற்பகல் நேரத்தைக் காட்டுகின்றன.
2) A,B இரண்டு கடிகாரங்களும் முற்பகல் நேரத்தைக் காட்டுகின்றன.
3) A கடிகாரம் பிற்பகலையும், B கடிகாரம் முற்பகல் நேரத்தையும் காட்டுகின்றன.


34. பிழையான கருத்து இடம்பெறும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1) பசவக்குளம் பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்டது.
2) தைக்கும்போது பாதுகாப்பிற்காக தீதாள் பயன்படுத்தப்படும்.
3) எம்பக்க தேவாலயம் அநுராதபுரத்தில் அமைந்துள்ளது.

35. பின்வரும் அடைப்புகளுள் உள்ள வாக்கியங்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு உரு இடப்பட்டுள்ளது. (சொற்களிற்கான உருக்கள் மாறி காணப்படுகின்றன)

| | | | |
|---|---|---|---|
| உயரமான மரங்கள் காணப்பட்டன | △ | ▭ | ★ |
| மரங்கள் மழைவீழ்ச்சிக்கு உதவுகின்றன | ○ | ◇ | △ |
| பூக்கள் நிறைந்து காணப்பட்டன | ★ | [symbol] | [symbol] |
| இன்று மரங்கள் அழிக்கப்படுகின்றன | △ | ▲ | [symbol] |

மரங்கள் என்பதைக் குறிக்கும் உருவைத் தெரிவுசெய்க.
1) △ 2) ▭ 3) ★


36. மு.ப 4.30 மணிக்கு கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஆகாய விமானம் ஒன்று அன்றைய தினமே லண்டன் நேரம் மு.ப 7.30 மணிக்கு லண்டன் விமான நிலையத்தில் வந்திறங்கியது. கொழும்பு நேரம் மு.ப 8.00 மணியாகும் போது லண்டன் நேரம் மு.ப 3.00 மணியாகும். விமானப் பயணத்திற்கு எடுத்த நேரம் யாது?
1) 6 மணித்தியாலங்கள் 2) 3 மணித்தியாலங்கள்
3) 8 மணித்தியாலங்கள்

37. 

தரப்பட்ட எண் இயந்திரத்தில் எண் ஒன்றைச் செலுத்தினால் அது அவ்வெண்ணை மூன்றினால் பெருக்கிக் கிடைக்கப்பெறும் விடையிலிருந்து 7ஐ கழித்து வரும் விடையைத் தரும். இவ் இயந்திரத்தின் மூலம் 20ஐ விடையாகப் பெறுவதற்கு உட்செலுத்த வேண்டிய எண் யாது?
1) 7 2) 9 3) 8


38. இந்த நான்கு கட்டங்களில் உள்ள பயிர்களிலிருந்து பெறக்கூடிய பொருட்களுள் பயிருக்கு பொருத்தமற்ற பொருள் காணப்படும் விடை எது?
1) கித்துள் கருப்பட்டி 2) கரும்பு சீனி 3) நெல் தேன்

✱ 39 ஆம், 40ஆம் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

39. 

சதுரம், வட்டம், முக்கோணம், ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் எது ..........................

40. விளையாட்டு மின்சமிக்ஞை மாதிரி ஒன்றின் வரைபடம் தரப்பட்டுள்ளது.




X இனால் X,Y,Z ஆளிகளைத் தனித்தனியாகத் தொடும்போது எவ்வர்ண மின்குமிழ் ஒளிரத்தக்கது
..............................................................

-முற்றும்-

## வினாத்தாள் II | 1 மணி 15 நிமிடங்கள்

**சுட்டெண்** ............ **புள்ளிகள்** ............

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

✱ பின்வரும் பாடலைத் தெளிவாக வாசித்து கீழ்க் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

மீன்கள் கோடி சூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே - மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ வெண்ணிலாவே
ஆந்தைப் போல நீயும் வெண்ணிலாவே - பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே
ஆழியும் நீ வரக்கண்டு வெண்ணிலாவே - குதித்து
ஆடுவதெக் காரணமோ? வெண்ணிலாவே.

1. "மீன்கள்" என்று உவமித்து பாடலில் கூறப்பட்டுள்ளவை எவை?
..............................................................
2. வெண்ணிலாவுக்கு உவமித்துக் கூறப்பட்டது எது?
..............................................................
3. நிலாவை ஏன் ஆந்தைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?
..............................................................
4. பாடலில் இடம்பெற்ற அடுக்குத் தொடரைக் குறிப்பிடுக.
..............................................................
5. வாடி வாடிப் போவது என்றால் என்ன?
..............................................................
6. நிலவைக் கண்டு குதித்தாடுவது எது?
..............................................................
7. ஆழி என்ற சொல்லின் ஒத்தபொருள் தரும் சொல்லைத்தருக.
..............................................................
8. பாடலில் இடம்பெற்றுள்ள அடைமொழியைக் குறிப்பிடுக.
..............................................................
9. பாடலில் வந்துள்ள எண் பெயர் ஒன்றைக் குறிப்பிடுக.
..............................................................

✱ நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி மீண்டும் வாக்கியத்தை எழுதுக.
10. அண்ணா அண்ணா மின் குமிழைக் கண்டு பிடித்தவர் யார் என்று சொல்வீர்களா
என்று கேட்டான். ..............................................

✱ தொடர்மொழிக்குப் பொருத்தமான ஒத்தசொல்லைத் தருக.
11. அனைத்து உடைமைகளையும் இழந்தவன்
..............................................................
12. ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
..............................................................

✱ மரபுப் பெயர்களைக் கவனத்திற்கொண்டு இடைவெளி நிரப்புக.
13. ஆடு மந்தை என்பது போல மயில் ..............................
14. குதிரை கனைக்கும் என்பது போல குரங்கு ..............................

✱ பின்வரும் உவமைத்தொடரின் பொருளைக் குறிப்பிடுக.
15. மழை முகம் கண்ட பயிர் போல
..............................................................
16. பூனையைக் கண்ட எலிபோல
..............................................................

✱ பின்வரும் ஆங்கிலத்தொடரின் கருத்தைத் தமிழில் தருக.
17. Time Please ..............................................
18. Lets go Out ..............................................

✱ இடைவெளி நிரப்புக.

19.  .............................. is My Mother Land.

20. He is a .............................. 

✱ சிங்களச் சொற்றொடரின் கருத்தைத் தமிழில் தருக.
21. ஹெ(ட்)ட பாசலே நிவாடுய்.
..............................................................
22. செல்லம் மிதுல
..............................................................

✱ வீட்டினுள்ளே விளையாடப்படும் (உள்ளக) விளையாட்டுக்கள் 2 ஐக் குறிப்பிடுக.
23. ..............................................................
24. ..............................................................

✱ மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
25. விதையொன்று முளைப்பதற்குத் தேவையான காரணிகள்.
1) நீர், நிலம், வெப்பம் 2) நீர், வெப்பம், வளி
3) நீர், மண், வாயு 4) நீர், ஒளி, பசளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மாலைக்கண் எனும் குறைபாட்டு நோய்க்குக் காரணம்
1) விற்றமின் D 2) விற்றமின் B
3) விற்றமின் A 4) விற்றமின் C

27. பிரதான பாதைகளை இரண்டாகப்பிரிக்கும்போது பயன்படுத்தப்படும் நிறம்
1) மஞ்சள் 2) நீலம் 3) கறுப்பு 4) வெள்ளை

28. பூசணியின் அறுவடையை அறிவதற்கான அறிகுறி யாது?
1) மஞ்சள் நிறமடையும் 2) சாம்பல் தூசு பூக்கும்
3) காய் பெருத்து வளரும் 4) காயில் வெடிப்பு ஏற்படும்



29. படத்தில் காட்டப்பட்டுள்ள நடை,
1) கரடி நடை 2) தாம்பு நடை
3) நண்டு நடை 4) தவளை நடை

30. மழையுடன் மின்னலும் ஏற்படும் வேளையில் பாதுகாப்புக்கு நாம் பின்பற்ற வேண்டிய சரியான நடவடிக்கை,
1) வீட்டினுள்ளே இருத்தல்
2) நிலத்துடனான தொடர்பைத் தவிர்த்தல்.
3) உலோக வகைகளைத் தொடுவதைத் தவிர்த்தல்.
4) வீட்டினுள்ளேயும் பாதணிகளை அணிந்திருத்தல்.

31. பின்வரும் பூக்களில் தனிப்பூ எது?




2) 3) 4)

32. இத்தையல் பயன்படுவது பூக்களில் தண்டுகளைத் தைப்பதற்காகும்.
1) விஷபம் தையல் 2) லூப்புத் தையல்
3) கம்பளித் தையல் 4) காம்புத் தையல்



33. பின்வருவனவற்றில் சமூக விரோதச் செயலாகக் கொள்ளப்படுவது எது?
1) சிறுவர்களுக்கு கட்டாயக்கல்வியை வழங்குதல்.
2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.
3) சிறுவர்களுக்குத் தேவையான போஷாக்கை வழங்குதல்.
4) சிறுவர்களைச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்த்தல்.

34. நான் என்னைக் கண்டிப்பதை விரும்புவதில்லை. நான் நினைவில் வருவதை சொல்ல விரும்புகின்றேன். இந்த இரு நடவடிக்கையின் போதும் எனது முகம் காட்சி தரும் விதம்



35. எதிரியை வாலால் தாக்கக்கூடிய பிராணி எது?
1) கபறகொயா 2) உடும்பு
3) ஆமடிலா 4) புடையன் பாம்பு

36. பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா
நெட்டைக்காது இரண்டும் மேலே
நிமிர்ந்து நிற்குதம்மா
இப்பாடல் வரிகளில் விவரித்துக் கூறப்படும் பிராணி,
1) புனை 2) சிவிங்கி 3) முயல் 4) நாய்

37. உலகப்படத்தினைக் கிடைப்படமாக வரைந்தவரும் அதில் இலங்கையை தப்ரபேன் என்று குறிப்பிட்டவரும் யார்?
1) தொலமி 2) கொப்பனிக்கஸ்
3) இந்தியர் 4) போர்த்துக்கேயர்


38. நாற்றுமேடையில் பதியம் போட்டு நடப்படும் தாவரங்கள் யாவை?
1) நெல், மிளகாய், தக்காளி 2) பாகல், கொய்யா, பலா
3) தேக்கு, பப்பாசி, மா 4) சோளம், வாழை, கத்தரி

39. இலங்கையைக் கைப்பற்றிய ஐரோப்பிய இனத்தவர்களில் போர்த்துகேயர் இலங்கையை வந்தடைந்த ஆண்டு
1) 1796 2) 1505 3) 1815 4) 1948

40. உலகப் பிரசித்தி பெற்ற இவ்வோவியத்தை வரைந்த ஓவியன்.
1) மைக்கல் ஏஞ்சலோ
2) லியனாடோ டாவின்சி
3) ரவி வர்மா
4) ரவீந்திரநாத் தாகூர்



41. அமாவாசை கழித்து ஏழு தினங்களின் பின் வானில் சந்திரன் தென்படும் முறை,



1) 2) 3) 4)

42. வளவே கங்கை ஊற்றெடுத்துப் பாய்ந்து எக்கடலில் போய்க் கலக்கிறது
1) கிந்தொட்டை 2) காலி
3) மாத்தறை 4) அம்பலாந்தொட்டை

43. A எனும் புள்ளி குறிக்கும் முனை,
1) பருத்தித்துறை முனை
2) சங்கமன்கந்த முனை
3) தெய்வேந்திர முனை
4) நன்நம்பக்கை முனை




44. குளங்களும் விகாரைகளும் நிறைந்து தொல்பொருள் பெறுமதிமிக்கதாக விளங்குவது
1) C 2) F 3) E 4) B

45. இச்செயற்பாட்டின் மூலம் நூலில் தொங்கவிடப்பட்ட பந்தானது வட்டவடிவில் சுழலுவதை அவதானிக்கலாம். இதற்குக் காரணம்.




1) காந்த முனைகள் ஒன்றையொன்று கவருவதால்.
2) காந்த முனைகள் ஒன்றையொன்று தள்ளுவதால்.
3) காந்தமானது காந்தத்துடன் ஒட்டிக்கொள்வதால்.
4) நூலினால் காந்தம் அசைக்கப்படுவதால்.

46. பின்வரும் உபகரணத்தின் பெயரைக் குறிப்பிடுக.
..........................................................................................

47. இவ்வுபரகணத்தில் பற்சில்லுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது ஏற்படும் மாற்றம் என்ன?
..........................................................

48. இவ்வுபகரணம் இயங்குவதற்கு சக்திப்பொருளாக அமைவது எது?
..........................................................

* பின்வரும் உபகரணங்கள் எக்கைத் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன.

49. மரமிதவை ..........................................................

50. துருத்தி ..........................................................

* பின்வரும் உருக்களுக்கான பெயர்களைக் குறிப்பிடுக.




51. ..........................



52. ...................

53.




இம்மின்சுற்றுக்களில் எவ்வமைப்பில் அமைந்துள்ள மின்குமிழானது மிகவும் பிரகாசமாய் எரியும்?
..........................................................

* பின்வரும் கணித வினாக்களுக்கு விடைதருக.


54. அருகிலுள்ள மணிக்கூடு காட்டும் பிற்பகல் நேரத்தை நியம நேரத்தில் குறிப்பிடுக. ....................................




55. 1 லீற்றர் 500 ml கனவளவுள்ள குளிர்பானம் 6 மாணவர்களிடையே பங்கிடப்பட்டது. ஒரு மாணவன் பெற்றுக்கொண்ட பானத்தின் கனவளவு யாது?
..........................................................................

56. சுற்றுலா ஒன்றில் பங்குபற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை 133 ஆகும். ஒரு பஸ்ஸில் 40 பிள்ளைகளை மட்டுமே ஏற்றிச் செல்லலாம். சுற்றுலாவுக்காக ஒழுங்குபடுத்திய பஸ்களின் எண்ணிக்கை யாது?
..........................................................................

57.




B உருவின் பரப்பளவைச் சதுர சென்றிமீற்றரில் தருக.
..........................................................


58. A உருவின் சுற்றளவைச் சென்ரிமீற்றரில் தருக
..........................................................................

59. இவ்வுருவில் சமச்சீர் அச்சுக்களைக் குறித்துக்காட்டுக.



60. ரூபா 500 தாள்காசில் இரு மனிதரது உருவங்கள் உள்ளன. அவர்கள் வாசிக்கும் சங்கீத வாத்தியங்கள் யாவை?
..........................................................................

61.




காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை முக்கோணங்களைப் பெறமுடியும்?
..........................................

62. சூரியனுக்கு எத்திசையில் மரத்தின் நிழல் விழுந்துள்ளது



..........................................

63.




A இலிருந்து B யை அடைவதற்கான குறுகிய தூரத்தையுடைய பாதைகளின் மொத்த நீளத்தைக் குறிப்பிடுக.
..........................................

64. இவ்வெண்ணின் பெறுமதியிலிருந்து 10 இற்கு முற்பட்ட எண்ணைக் குறிப்பிடுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 0 | 0 | 3 | 0 | 0 |

..........................................

65. 2 kg 500g தேயிலைத்தூளின் விலை ரூ. 225 எனின், 500g தேயிலையின் விலை யாது? ..........................................

66. இடைவெளி நிரப்புக.
1200ஆம் ஆண்டு நெட்டாண்டாகும் எனின், அதேபோல் 1840 ஆம் ஆண்டு நெட்டாண்டாகும். அதேபோல்
.............................. ( 1070, 1835, 1600) ஆம் ...................... (1050, 1060, 1550) ஆம் நெட்டாண்டுகளாகும்.

67. அசோக் திறமையான மாணவன். புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தில் உள்ளான். அவனைப் பாராட்டும் வைபவமொன்றில் அதிபர் உரையாற்றுகின்றார்.
(இது ஒரு நிகழ்வின் தொடக்கமாகும். இதன் பின்னர் நடைபெறுவதை படச்சட்டங்களில் உள்ள உருக்களைப் பயன்படுத்திக் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் 4 சொற்களேனும் இடம் பெறவேண்டும். இலக்கண ரீதியான தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)
(விடை எழுதுவதற்கு வேறு தாளினைப் பயன்படுத்தவும்)



இன்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை நாளையதினம் வெளிவரும் விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 0718016757, 0775006586 என்ற தொலைபேசியூடாக திரு.சண்.சுதர்ஷன், ஏ.கே.எஸ். ரிஷானா ஹில்மி ஆசிரியர்களிடம் நாளை மறுதினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும்.



நாளைய கருத்தரங்குத் தொடரில்
கல்விச்சுடர் பகுதிக்கு கடந்த 6 வருடமாக
அதிகளவு வினாக்களைத் தொகுத்து வழங்கிவரும்
எஸ்.சந்திரகுமார், அண்மைக்காலமாக கல்விச்சுடருடன்
இணைந்து கொண்ட பி.பரமதயாளன் ஆகியோர்
வளவாளராகப் பங்குபற்றுகின்றனர்.



**விடைவிளக்கக் குறிப்புகள் பற்றிய அறிவித்தல்**

இன்றைய தினம் வெளிவரவிருந்த கருத்தரங்குத் தொடர் 6 இற்கான விடைவிளக்கக் குறிப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் வெளிவரவில்லை. அதற்கான விடைவிளக்கக் குறிப்புக்கள் நாளை மறுதினம் வெளிவரும் என்பதனை பெற்றோர் மாணவர்கள் மற்றும் கல்வித்துறைசார்ந்த அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையைக் கைவிட்டுப் பேச்சுக்கு வருக; நக்ஸல்களுக்கு பிரதமர் மன்மோகன் அழைப்பு!

## சுதந்திர தின விழாவில் விடுத்தார்

புதுடில்லி, ஓக. 16
வன்முறையை முற்றிலும் கைவிட்டு விட்டு பேச்சுக்கு மாவோ. நக்ஸலைட்கள் முன்வர வேண்டும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

64ஆவது சுதந்திரதினம் நேற்று இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி புதுடில்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன் சிங் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தியபோதே இந்த அழைப்பை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு -

இந்தியாவின் மிக முக்கிய சவாலாக நக்ஸலிசம் உருவெடுத்துள்ளது. உள்நாட்டுப் பாதுகாப்புக்கும், அரசுக்கும் இது பெரும் சவாலாக மாறியுள்ளது. இதை உறுதியுடன் சந்தித்து அழிப்போம். வன்முறையை யார் கையில் எடுத்தாலும் அவர்களைச் சட்டம் சும்மா விடாது.

நக்ஸலைட்டுகள் வன்முறையைக் கைவிட வேண்டும். அதனால் ஒரு பலனும் கிடையாது. பேச்சுக்கு அவர்கள் முன் வரவேண்டும். அரசுடன் இணைந்து சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.

உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு உறுதியுடன் செயற்படுகிறது. நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் சட்டம், ஒழுங்கை பராமரிக்கத் தேவையான அனைத்து உதவிகளையும், அந்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு செய்யும்.

பாகிஸ்தானுடன் வலுவான, உறுதியான உறவையே இந்தியா விரும்புகிறது. பாகிஸ்தான் துண்டாடப்படக் கூடாது என்றும் இந்தியா விரும்புகிறது. ஆனால் இது நடைபெற தீவிரவாதத்தை விட்டு பாகிஸ்தான் விலகிப் போக வேண்டியது அவசியம். இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்திலிருந்து பாகிஸ்தான் விடுபடாவிட்டால், பேச்சு போன்றவற்றில் எந்தவித முன்னேற்றமும் இருக்காது.

அண்டை நாடுகளுடன் நமக்கு உள்ள பிரச்சினைகளை பேச்சு மூலமாகவே தீர்க்க முடியும். பேச்சு போன்ற அமைதியான வழிகள் மூலமே எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும்.

காஷ்மீரில் தற்போது நடந்து வரும் வன்முறையால் யாருக்கும் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. காஷ்மீரில் வன்முறையில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் அதைக் கைவிட வேண்டும். ஒருங்கிணைந்த இந்தியா என்ற கோட்பாட்டின் கீழ்தான் எதையும் செய்ய முடியும். வன்முறையைக் கைவிட்டு விட்டு இந்தக் கோட்பாட்டின் கீழ் பேச்சு நடத்த முன்வர வேண்டும் - என்றார்.

# காஷ்மீர் முதல்வர் மீது சப்பாத்து வீச்சு

சென்னை, ஓக. 16
சுதந்திர தின விழாவில் உரையாற்றிக் கொண்டிருந்த காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா மீது பொலிஸ் அதிகாரி ஒருவர் சப்பாத்து வீசியமை காஷ்மீரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

காஷ்மீர் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அந்த மாநில முதல்வர் உமர் அப்துல்லா உரையாற்றும் போது, ஒரு பொலிஸ் அதிகாரி தனது சப்பாத்துகளைக் கழற்றி எறிந்தார். அந்தச் சப்பாத்து உமர் மீதுபடாமல் மேடைக்கு முன்னால் விழுந்தது.

இதையடுத்து பேசிய முதல்வர் உமர், கற்களை வீசுவதைவிட காலணிகளை வீசுவதில் ஒன்றும் தவறில்லை என்று தெரிவித்தார்.



டில்லியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பிரதமர் மன்மோகன் சிங்......

# ஈழ ஆதரவு அமைப்புகளை ஒன்றிணைத்து வைகோ தலைமையில் 'தமிழர் கூட்டணி'?

மதுரை, ஓக. 16
எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியைத் தோற்கடிக்க 'தமிழர் கூட்டணி' என்ற புதிய கூட்டணி மிக இரகசியமாக தயாராகி வருகிறது. ஈழப்பிரச்சினைக்காகப் போராடும் பல்வேறு அமைப்புகளை இணைத்து இந்தக் கூட்டணியை உருவாக்க முயற்சிகள் நடக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு மே மாதம் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கு தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., தே.மு.த.க. ஆகிய கட்சிகள் இப்போதே தங்களைத் தயார்படுத்த ஆரம்பித்துவிட்டன.

தி.மு.க. கூட்டணியை எப்படியும் வீழ்த்தியே ஆக வேண்டும் என்று அ.தி.மு.க. தரப்பு புதிய வியூகங்களை அமைத்து தங்களது அணிக்கு புதிய கட்சிகளை கொண்டு வரும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

தி.மு.கவும் தனது கூட்டணியை வலுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் ஈழ விவகாரத்தில் தி.மு.க. - காங்கிரஸ் கட்சிகள் மீது சீறிப் பாயும் தமிழ் அமைப்புகளை எல்லாம் ஒருமுகப்படுத்தி தமிழர் கூட்டணி என்ற ஒரு அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி நடக்கிறது.

இந்தக் கூட்டணி அ.தி.மு.கவுக்கு ஆதரவு வழங்குமாம். ஒருவேளை தி.மு.கவை காங்கிரஸ் வெட்டிவிட்டு அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவு ஏற்பட்டால், அதில் வைகோவின் ம.தி.மு.க. இருக்க முடியாத நிலைமை உருவாகும்.

அப்படி ஒரு நிலைமை உருவாகும் பட்சத்தில் இந்தத் தமிழர் கூட்டணிக்கு வைகோவே தலைமை வகிக்கக்கூடும் என்கிறார்கள்.

காங்கிரஸுடன் அ.தி.மு.க. கைகோத்தால் அதிலிருந்து வெளியேறும் இடதுசாரிகளும் இந்தக் கூட்டணியை ஆதரிப்பார்கள். மேலும் பா.ம.கவையும் இழுக்கலாம் என்பது திட்டமாம். இதற்கான வேலைகள் தொடங்கியுள்ளன.

அதேநேரத்தில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி நீடித்தால், இந்தத் தமிழர் கூட்டணி அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக களத்தில் இறங்குமாம்.

## இந்தியச் செய்திகள்

# புதுடில்லியில் பன்றிக்காய்ச்சலால் இவ்வாண்டில் 281 பேர் மரணம்

புதுடில்லி, ஓக. 16
டில்லியில் இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை, பன்றிக் காய்ச்சலுக்கு 281 பேர் பலியாகி இருக்கிறார்கள். கடைசியாக 27 வயதுப் பெண் இறந்திருக்கிறார். மேலும் 27 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக் கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

மராட்டிய மாநிலம் புனே நகரில் கடந்த 2 நாள்களில் 8 பேர் பன்றிக்காய்ச்சலால் உயிர் இழந்தனர். நேற்றுமுன்தினம் 10 மாத குழந்தை இறந்துவிட்டது. புனே நகரில் பல்வேறு வைத்தியசாலைகளில் 46 பேர் இந்த நோய்க்குச் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.




மராட்டியத்தில் உள்ள அவுரங்காபாத் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 30 வயது பெண் பன்றிக்காய்ச்சல் காரணமாக இறந்தார். இதனால் அவுரங்காபாத் நகரில் இந்த நோய்க்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்தது. மேலும் 17 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

ஒரிசா மாநிலம் புவனேஸ்வரத் தில் நேற்றுமுன்தினம் 19 வயது இளைஞர் இந்த நோய் காரணமாக உயிரிழந்தார். அவர் சமீபத்தில் சென்னைக்கு வந்து சென்றவர். அவருடன் சேர்த்து புவனே சுவரத்தில் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்தது. மேலும் 25 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு மே மாதம் பன்றிக் காய்ச்சல் இந்தியாவில் பரவியது. இதுவரை இந்த நோயால் 1,853 பேர் இறந்துவிட்டனர். இதில் அதிகபட்சமாக புனே நகரில் 331 பேர் உயிர் இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுங்கள்! திருச்சியில் ஜெயலலிதா அறைகூவல்

## தமது வாழ்நாளில் கண்டிராத மக்கள் வெள்ளம் என அவர் பெருமிதம்

திருச்சி, ஓக. 16
தமிழ்நாட்டையே ஒரு குடும்பம் சுரண்டிக் கொண்டிருக்கிறது. ஒரு குடும்பம் நம் அனைவரையும் முட்டாள்களாக்கப் பார்க்கிறது. எனவே, குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுங்கள் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா அறைகூவல் விடுத்தார்.

தி.மு.க. அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து திருச்சியில் அ.தி.மு.க. சார்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசும்போதே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

அவர் மேலும் பேசியவை வருமாறு -

ஒரு குடும்பம் நம் அனைவரையும் முட்டாள்களாக்கப் பார்க்கிறது. ஒரு குடும் பம் தமிழ்நாட்டையே சுரண்டிக் கொண் டிருக்கிறது. ஜனநாயக நாடுகள் அனைத் துக்கும் சென்று ஆராய்ச்சி செய்து பாருங் கள். எந்த நாட்டிலாவது தந்தை முதல்வர், மகன் துணை முதல்வர் மற்றொரு மகன் மத்திய அமைச்சர், பேரன் மத்திய அமைச்சர், மகள் நாடாளுமன்ற உறுப்பி னர் என உண்டா?

தமிழக மக்களின் நலனுக்காகவும், தமிழ்நாட்டுக்காகவும் இந்த அரசு மாற்றப்பட வேண்டும். மாற்றும் சக்தி வாக்காளர்களாகிய உங்கள் கையில்தான் உள்ளது.



தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை தி.மு.க. அரசு ஏற்று நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிறது. நாம் இப்போது தேர்தல் ஆண்டில் இருக்கிறோம். தமிழ்நாடு இன்னும் 9 மாதங்களுக்குள் சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறது. அடுத்த அரசைத் தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு எல்லாம் கிடைக்கப் போகிறது.

ஜனநாயக நாட்டின் குடிமக்களின் சக்தி வாய்ந்த ஆயுதம் வாக்களிப்பு என்பதை தயவுசெய்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதன்மூலம் தேசத்தின் விதியை நீங்கள் மாற்றலாம். உங்கள் மாநிலத்தின் விதியை நீங்கள் நிர்ணயிக்கலாம். உங்களின் சொந்த விதியையும் மாற்றியமைக்கலாம். உங்களின் வாக்கு மூலம், மோசமான அரசை ஆட்சியிலிருந்து வெளியேற்றலாம்.

புத்திசாலித்தனமாக வாக்களிப்பதன் மூலம் தமிழ்நாட்டில் ஒரு நல்ல அரசை அமர்த்தலாம். வெறும் ஆயிரம் ரூபாவுக்கு வாக்குகளை விற்றுவிடாதீர் கள். குடும்ப ஆட்சியை ஒழித்து நல்ல அரசை அமைக்க இன்றே, இப்போதே அனைவரும் உறுதிமொழி ஏற்போம்.

நான் 28 ஆண்டு காலமாக அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளேன். தமிழ் நாட்டில் நான் போகாத ஊரில்லை, பேசாத கூட்டமில்லை. எத்தனை பிரம்மாண்டமான கூட்டம் இது. இதுவரை என் வாழ்நாளில் இதுபோன்ற கூட்டத்தை நான் கண்டதில்லை. நான்கரை கிலோமீற்றர் தொலைவுக்கு மக்கள் வெள்ளத்தில் மிதந்து கொண்டே மேடைக்கு வந்தேன். - இப்படி அவர் தெரிவித்தார்.

# கன்னியாகுமரி ஹோட்டலில் இலங்கையர்கள் மூவர் கைது

நாகர்கோவில், ஓக. 16
கன்னியாகுமரியில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இலங்கையர்கள் மூவர் உட்பட நான்கு பேரைப் பொலிஸார் கைதுசெய்தனர். இலங்கையர்களில் ஒருவர் பெண் ஆவார்.

கன்னியாகுமரியில் உள்ள ஹோட்டலில் இலங்கையைச் சேர்ந்த சிலர் தங்கியிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் அங்கு சோதனை நடத்தினர். இதில் ஆனந்தகுமார் (வயது - 45), அவரது மனைவி ஜெயலதா, ரமேஷ் (வயது - 33), வீரமணி (வயது - 45) ஆகிய நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் நாயகனுக்கோர் சேவை நலன் பாராட்டு

## மதிப்புக்குரிய வண. T.S.யோசுவா B.A., Dip. in Theology


### வசந்தம் ஜெனிபர் பெண்கள் இல்லத்தின் உள்ளத்திலிருந்து

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு''

நன்றியுடையவர் தம் இன்ப துன்பத்தில் இணைந்து இருப்பவருடைய நட்பினை, அன்பினை ஏழேழு பிறவியிலும் நினைப்பர். இதேபோல் ஏதோவொரு கிராமத்தில் இருந்த எம்மை ஒன் றாகச் சேர்த்து, ஓர் இல்லத்தின் சிற கிலே பாதுகாத்து, நல்ல முறையில் படித்து, ஓடிவிளையாடி, பல திறமை களை வெளிக்கொணரவும், எம்மை நல்ல நிலையில் உருவாக்க எமக்காய் தொண்டாற்றிய யோசுவா அடிகளார் அவர்களுக்கு வற்றாத நதிபோல பெரு அலை எடுத்துப் பாய்கின்ற காவேரி நதி போல அவருடைய பணிமேன் மேலும் சிறப்புடன் தொடர நாம் உறு துணையுடன் இருந்து வாழ்த்துகின் றோம்.

வாழ்க பாமரனே,
வளர்க உங்கள் பணி,
வாழ்த்துகிறோம்.

**மாணவர்கள்,**
**ஜெனிபர் பெண்கள் இல்லம்,**
**றொபேட் ஆண்கள் இல்லம்.**



அன்புக்கும் மதிப்புக்குமுரிய வண. T.S.யோசுவா போதகர் அவர்கள் கடந்த 1998ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பேரா லயத்தின் குருவாகப் பொறுப்பேற்று இறை பணியுடன் கூடிய சமூகப்பணிகளை மேற் கொண்டார். இவரின் காலப்பகுதியில் சமூகத் திற்கு ஏற்பாட்டு உயர்வுகளுக்காகவும், நன் மைகளுக்காகவும் இவரை வாழ்த்தி இவரது சேவையைப் பாராட்டுகின்றோம்.

### போற்றியே வாழ்த்துவோம்

வீசுபுகழ் யோசுவாவின்
விந்தைமிகு செயற்றிறன்கள்
பாரினிலே விரிந்தோங்க
வேண்டுகின்றோம் இறைபிதாவை.

இன்னல்கள் பல களைந்து
இன்பங்கள் பலருக்கேற்றி
இருண்டவர் வாழ்வுதனில்
இருளதை அகற்றவென்று
உருதனில் மாறியேயிங்கு
இறைவன் வந்தானோ - நன்றி
நினைத்திடும் போதென்றும் - எம்
நிழலாய் நின்றென்றும்
சளைக்காது களைக்காது
கருணையின் தெய்வமாய்
கடமையின் வீரனாய்
ஆற்றிய பணிகளோ
என்னிலடங்காதவை

போற்றியே நாம் என்றும்
பணிந்திடும் போதகர்
வாழ்வினில் தளைத்தோங்க
வாழ்த்துகிறோம் வாயார.

(102054)

**காவேரி கலாமன்றத்தினர் மற்றும்**
**அருட்தீபம் சனசமூக நிலையத்தினர்,**
**காட்டுப்புலம்.**

## காணவில்லை



இல. 32 குமாரசாமி வீதி, யாழ்ப் பாணத்தைச்சேர்ந்த 14 வயதுடைய ஸ்ரீஸ்கந்தராஜா மிதுஷன் என்ப வரை நேற்றுமுன்தினம் (14.08.2010) சனிக்கிழமை முதல் காணவில்லை. கடைசியாக கறுப்பு நிறக் காற் சட்டையும், மஜந்தா கலர் கோடு போட்ட ரீசேட்டும் அணிந்திருந்தார். தயவு செய்து இவரைக் கண்டவர்கள் மேலுள்ள விலாசத்துக்கோ அல்லது கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும்.

**021 300 1407**
**077 8828315**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு சொக்கலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கு, கார்த்திகேசு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சொக்கலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சர வணை நாகேஸ்வரி ம.வி.) நேற்று (15.08.2010) ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சிவ காமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் பாஸ்கரன், சுமதி, காலஞ்சென்ற பாமதி மற்றும் கோமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகநாதன், புஸ்பராதா, தயாபரன் (இ.போ.ச) ஆகியோரின் அன்பு மாமனும் லௌசிகா, மிதுசன், தனுஜன், சானுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, விசுவலிங் கம், சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 16.08.2010) திங்டகிழமை நண்பகல் 12 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.லோகநாதன் (மருமகன்).

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

பருத்தித்துறை,ஓக.16

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 3 இல் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கு மான இரண்டாம் மொழி சிங்கள பாட செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை புலோலி மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தரம் 6 தொடக்கம் 11 வரை சித்திர பாடத்தை கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கான செயலமர்வு புலோலி மெத டிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையில் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

(ஒ-190)

## அகதிகளுக்கு எதிராக கனடாவில் ஆர்ப்பாட்டம்

இலங்கை அகதிகள் கனடாவுக்கு வருகை தந்ததை எதிர்த்து கனடாவி லுள்ள ஒரு பிரிவினர் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுமார் ஐம்பதுக்கும் அதிகமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண் டனர். அகதிகளைத் திருப்பி அனுப்பும் படியும், அகதிகளின் வருகையைத் தடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதுடன், சுலோக அட்டை களையும் ஏந்தியிருந்தனர் என்று அங் கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

## வலி.மேற்கில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

சங்கானை, ஓக.16

வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்புப் பிரசார வேலைகள் துரிதமாக நடைபெற்று வரு கின் றன.

கிராம அலுவ லர் பிரிவு ரீதியாக அரச நிறுவனங்கள், பொது மக்கள், வாழ்விடங் கள் மற்றும் சுற்றாடல் போன்றவை சிரம தானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னோடியாக பொதுச் சுகா தாரப்பரிசோதகர் ரி. குரூபன் கிராம அலுவலர்களுக்கான கலந்துரையா டல்களையும் கடந்த ஒரு மாதகாலமாக இப் பிரிவில் நடத்தி வருகின்றனர். (ஒ- 29)

ஆர். வதனவாசன் அவர்களின்
'இசையோடு...'' எனும்
கிற்றார் வாத்திய இசை
**இறுவட்டு வெளியீட்டு விழா**
காலம்: இன்று(16.08.2010) திங்கட்கிழமை
நேரம்: பிற்பகல் 3 மணி
இடம்: நாவலர் கலாசார மண்டபம்
தலைமை: இ.மதிகரன்
பிரதம விருந்தினர். V.ஞானகாந்தன் (I.M.E.D)
(அதிபர், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலம்)
சிறப்பு விருந்தினர்: 1) திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
(மாநகர முதல்வர் (யாழ். மாநகரசபை)
2) திரு.மு.தெய்வேந்திரன் (ஆசிரியர்)
(தலைவர், யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)
3) திரு.மனுவல் மங்களநேசன்
(யாழ். மாநகர சபை உறுப்பினர்)
4) இசைத்தென்றல் M. யேசுதாசன்
(ஆசிரியர் திருமறைக் கலாமன்றம்)

கொளரவிருந்தினர்: 1) திரு.து. மனோகரன்
(பொதுமுகாமையாளர் யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்)
2) திரு.சி.சிவதாசன் (J.P)(செயலாளர் யாழ். இலக்கிய வட்டம்)
3)திரு. ரெங்கநாதன் (இசைக் கலைஞர்)
(பிராந்திய முகாமையாளர், DM.F)
4) திரு.பு.தஜீரன்
(கிராமசேவையாளர் J/91 அரியாலை)
முதற் பிரதி பெறுபவர் ப.சந்திரதாசன் (சுவிஸ்)
கணனி தொழிநுட்பவியலாளர்
ஒலிப்பதிவு: "ஸப்தமி" ஒலிப்பதிவுக் கலையகம்
(இல. 646, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அரியாலை. விழாக்குழுவினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்,

கடந்த 17.07.2010 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு



### அமரர் ச.ஷைலேந்திரன்

(சயிலன்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.08.2010) திங்கட்கிழமை மு.பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும் பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 38, கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(101945) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தன் தனது தெற்கு, வடக்கு வீதிகளில் பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்து வரும் காட்சிகளும் அடியார்கள் பஜனை செய்யும் காட்சியும் மேலே காணப்படுகின்றன.

# விஜித ஹேரத், அஜித்குமார கைது தொடர்பில் நீதிமன்றத்தில் ஜே.வி.பி. உரிமை மீறல் மனு

கொழும்பு, ஓக. 16

பொன்சேகாவின் விடுதலைக்காக காலியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் அஜித்குமார ஆகியோர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் காலி பொலிஸா ருக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை ஜே.வி.பி. தாக்கல் செய்யவுள்ளது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுக் கூறினார்.

அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்படும்வரை நாட்டில் தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் உயர்மட்ட உத்தரவின்படியே எமது நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத்தும், அஜித்குமாரவும் காலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வது பாரதூரமான விடயமாகும். இது நன்கு திட்டமிட்டே செய்யப்பட்டுள்ளது. நீதிவான் முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டபோது எமது சட்டத்தரணிகள் ஆஜராகுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். பொலிஸாரைக் கொண்டு அரசு நாட்டில் அராஜகத்தை மேற்கொள்கிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக நாம் காலி பொலிஸாருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளோம்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையேல் அவர்கள் விடுதலை செய்யப்படும்வரை மக்களை ஒன்றுதிரட்டி நாம் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம் - என்றார்.

# பல்வேறு சிக்கல், சிரமங்களுக்கு மத்தியிலேயே இந்தத் துறைமுகப் பணிகள் ஆரம்பமாகின

## அம்பாந்தோட்டை வைபவத்தில் ஜனாதிபதி உரை

கொழும்பு, ஓக. 16

பொருளாதார அபிவிருத்தியின் ஊடாகத் தனிநபர் வருமானத்தை வருடம் 4,000 டொலர்களாக உயர்த்துவதே எமது இலக்காகும். இந்த இலக்கை எட்டுவதற்கு முன்னர், நாட்டிலுள்ள சகல வீடுகளுக்கும் மின்சாரத்தை வழங்க நாம் தயாராகிவிட்டோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தின் நீர் நிரப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்தத் துறைமுகத்தை ஆரம்பித்து வைக்கப் பல்வேறு சிக்கல்கள், சிரமங்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கேட்ட குறைகள் எவ்வளவு, பூசிய சேறு எவ்வளவு. அவையெல்லாம் இன்று இந்த நீரில் அடித்துச் செல்லப்படுகின்றன.

நாட்டின் அபிவிருத்தியை நாம் இடைநிறுத்தவில்லை. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டாம். நெடுஞ்சாலைகளை அமைத்து மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க எம்மால் முடிந்தது. பசளை மானியத்தை வழங்கி விவசாயிகளுக்கு பயிர்செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. எமது நாட்டை ஏனைய நாடுகளின் குப்பை கொட்டும் இடமாக்க முடியாது. இனிமேல் 'மேட் இன் ஸ்ரீலங்கா' என்ற பெயர் உலகம் முழுவதும் பரவும் வகையில் எமது உற்பத்திகளை உருவாக்கிப், பொருளாதார மத்திய நிலையமாக இலங்கை மாற்றியமைக்கப்படும்.

கொழும்பில் கடல் நிரப்பப்பட்டு புதிய துறைமுகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவது உங்களுக்குத் தெரியும். புத்தளம் பகுதியில் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையமொன்று நிர்மாணிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் சுற்றுலா வலயமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம், மன்னார், காங்கேசன்துறை, கதிர்காமம் வரை ரயில் பாதைகள் அமைக்கப்படுகின்றன.

விவசாயம், கைத்தொழில் மற்றும் வர்த்தகம் மூலம் பலமுள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும். சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தி திறமை மற்றும் உயர்கல்வி பெற்ற இளைஞர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

நாம் உலகத்திலேயே மிகக் கொடூரமான பயங்கரவாதிகளை ஒழித்து நாட்டை மீட்டுள்ளோம். அதேபோல், இந்த நாட்டில் சர்வதேச துறைமுகம், விமான நிலையங்கள் அதிவேக நெடுஞ்சாலைகள் மின் நிலையங்கள், பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின் றன. நாட்டைக் கட்டியெழுப்ப எம்மால் முடியும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-சி)

## இறுதி யுத்தத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட காலத்தில் என்னால் பராமரிக்கப் பட்ட கட்டமைப்புக்கள் யாவும் சீர்குலைந் திருந்த காரணத்தால் பிரபாகரனின் கோரிக் கையின் பிரகாரம் உடனடியாக ஆயுதங் களைக் கொள்வனவு செய்து என்னால் அனுப்பிவைக்க முடியவில்லை. இதற்கு மாறியிருந்த சர்வதேசச் சூழலும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இதற்கிடையில் பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி என்னுடன் அவசரமாகத் தொடர்பு கொண்டார். அவர் என்னைக் கே.பி. மாமா அல்லது கே.பி. அங்கிள் என்று அழைப்பார்.

வன்னியில் யுத்த நிலைமைய மோசமாகிச் செல்வதால் தனது குடும்பத்தினரைப் பாதுகாப்பாக இலங்கையைவிட்டு வெளியேற்றுமாறு என்னிடம் அவர் உதவி கேட்டார். நானும் இதற்குச் சம்மதித்தேன். ஆனால் பிரபாகரன் இதற்கு உடன்படு வாரா வென்பது எனக்குத் தெரியவில்லை. சாள்ஸ் - அன்ரனி தாம் இறுதிவரை போரா டப் போவதாக என்னிடம் கூறினார்.

ஆகவே பிரபாகரன் இந்தத் திட்டத் துக்கு இணங்காவிட்டால் அவரது மனைவி யையும், இரண்டு பிள்ளைகளையும் வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் நான் ஈடுபட்டேன். இதற்கு ஏதுவாக ஒரு கப்பலை வாடகைக்கு அமர்த்துவதற்கும், ஹெலிகொப்டர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கும் நான் விரும்பினேன்.

கப்பலை இலங்கைக் கடற்படை நெருங்க முடியாத சர்வதேச எல்லையில் நிறுத்தி வைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டது.

ஹெலிகொப்டரில் பயிற்சிபெற்ற புலிகள் இயக்க விமானப்படைப்பிரிவுப் போராளிகளுடன் சென்று பிரபாகரனின் குடும்பத்தினரை வன்னியிலிருந்து மீட்பதுடன், பிரபாகரன் நாட்டைவிட்டு வெளியேற விரும்பாவிட்டால் காட்டினுள் வேறு சிலருடன் அவரை இறக்கிவிட்ட பின், அவரது மனைவி மதிவதனி, மகள் துவாரகா, இளையமகன் பாலச்சந்திரன் ஆகியோருடன் ஹெலிகொப்படரில் செல்வதே எமது நோக்கமாக இருந்தது. ஆனால் அந்தத் திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. அது பெரும் கவலைக்குரிய கதையாகி விட்டது - என்றார் கே.பி. (ஒ-எ-க)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

அங்கு நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்களுக்கு, இந்தியாவே உறுதுணையாக இருந்துள்ளது. இந்தியாவின் விரலசைவுக்கு ஏற்பவே இந்தப் போர்க்குற்றங்கள் அரங்கேறியுள்ளன. இதனை ராஜபக்சஷே கூறியுள்ளார்.

அதற்கமைவாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் சிதம்பரம், தமிழக முதல்வர் கருணாநிதி ஆகியோரதுப் பங்களிப்பும் இதில் இருப்பது உறுதியாகி உள்ளது. அதனால் இவர்களுக்கு எதிராகவும், போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். (ஓ-சி)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றிய இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி இத்தகவலைத் தெரிவித்தார்.

இதன் காரணமாக இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் இன்று இடம்பெறவுள்ள போட்டியில் யுவராஜ் சிங் கலந்துகொள்ள மாட்டார் என்று மகேந்திர சிங் டோனி கூறினார்.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் போட்டியாக அமைந்த இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் கலந்து கொண்டு விளையாடிய யுவராஜ் 5 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

## சன் சீ கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இந்தக் கப்பல் தற்போது பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள கனேடிய கடற்படைத் தளமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மனிதர்களை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வருவது ஒருமோசமான செயல் எனவும் கனடாவின் பெருந்தன்மையை பொருளாதார அனுகூலத்துக்காகத் தவறாகப் பயன்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனவும் கனேடிய பொதுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் விக்டோவ்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை, கனடாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளுக்கு சிறப்பான வாழ்வை ஏற்படுத்த வேண்டியது கனடாவின் கடமை என கனேடிய சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கனடாவுக்கு இந்தியா, சீனா உட்படப் பல நாடுகளில் இருந்து அகதிகள் வந்துள்ளனர். அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது போல் இலங்கை அகதிகளுக்கும் வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (சி)

(மற்றொரு செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர வேலைக்கு 2 ஆயிரத்து ஐநூறு ரூபாவும், அதற்கும் அதிகமாகவும் மற்றும் இலவச சுகாதாரம், காப்புறுதி வசதி, தங்குமிட வசதி மற்றும் காலையுணவு, மதிய நேரத் தேநீர், உரிய இடத்துக்கான போக்குவரத்து வசதி, இறப்பின் போது 30 ஆயிரம் ரூபா பணம் போன்றன சலுகைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றைய தினம் துண்டுப்பிரசுர மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த கிளிநொச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் பதிலாக அரச செயலகத்துக்கு அருகில் மர நிழலிலேயே நேர்முகத் தேர்வு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நேர்முகத் தேர்வினைத் தொடர்ந்து குறிப்பிட்ட யுவதிகளை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இதற்காக அவர்களின் பெற்றோர்களும் அந்த இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதுதொடர்பான மக்களின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பெற்றோர், யுவதிகளுக்கு உண்மையை விளக்கினார். இவ்விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது :-

கிளிநொச்சியில் உள்ள யுவதிகள் பலர் தனியார் நிறுவனம் ஒன்றினால் வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்றும் உடனடியாகத் தலையிட்டு இதைத் தடுத்து நிறுத்துமாறும் மக்கள் என்னிடம் கூறினர்.

இதுதொடர்பாக நான் நடவடிக்கையில் இறங்கினேன். கண்டியில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனம் ஒன்றே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது.

அந்த நிறுவனத்துடன் தொடர்புடையவர்களைச் சந்தித்துக் கேட்டபோது கிளிநொச்சி யுவதிகள் 40 பேருக்குத் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட இருப்பதாகவும் அதற்காக அவர்களை கண்டிக்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினர்.

கிளிநொச்சி இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு மாவட்டம். அங்குள்ளவர்கள் வெளியேற சில நடைமுறைகள் உள்ளன. இராணுவத்திடம் அனுமதி பெற்றே அவர்கள் வெளியில் செல்ல வேண்டும்.

கிளிநொச்சி மக்கள் குடும்பங்களாக இராணுவத்தினரால் பதியப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் சோதனை செய்யவரும் போது பதியப்பட்டவர்கள் இல்லையென்றால் பிரச்சினையாகிவிடும். அதனால், இராணுவ அனுமதியைப் பெற்றே அம்மக்கள் வெளியில் செல்லவேண்டும்.

ஆனால், இந்தக் குறிப்பிட்ட நிறுவனம் இந்த யுவதிகளை அழைத்துச் செல்வதற்கு அனுமதி கேட்டு இராணுவத் தரப்பிடம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்திற்குப் பதில் வரும் முன்பே விண்ணப்பித்த யுவதிகளை அழைத்துச் செல்ல முயற்சி செய்தது - என்பது தெரியவந்தது.

இந்த நிலைமையை விளக்கியே அந்த யுவதிகளை அழைத்துப் போகவிடாது தடுத்தேன். இதற்கு மாற்றுவழியாக அந்த நிறுவனம் கிளிநொச்சியில் வைத்தே 200 யுவதிகளுக்குப் பயிற்சி வழங்கப்போவதாக கூறிச் சென்றுவிட்டது.

இதுதொடர்பாக இன்னும் ஒரு வாரத்திற்குள் என்னுடன் தொடர்புகொள்ளப் போவதாக அந்நிறுவனத்தினர் கூறினர் - என்றார்.

ஆனால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினர் தொடர்பான உண்மைநிலை, நிறுவனத்தின் நம்பகத்தன்மை எதுவும் தெரியாமல் பிள்ளைகளை அனுப்புவது ஆபத்தானது மட்டும் அல்ல நட்டாற்றில் தள்ளிவிடும் செயல் போன்றது என்று சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (அ-ஓ-சி-10-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடு மாதா தேவாலயத்தின் வருடாந்த ஆவணித் திருவிழாவில் நேற்று திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து திரண்டு வந்திருந்த அடியார்கள் மடு அன்னையின் திருத்தலத்தில் கூடியிருந்து திருப்பலிப் பூசையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். (படங்கள்: சசி)

# பொன்சேகா மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு

## ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சொன்னார்.

பத்ரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது எதிர்க்கட்சிகளுடன் தொடர்பை வைத்திருந்தார் என்றும் அதன் ஊடாக அரசியலில் ஈடுபட்டார் என்றும் குற்றஞ்சாட்டி அதுதொடர்பாக விசாரிப்பதற்காகவே முதலாவது இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண.உடுவே தம்மாலோக தேரர், வண. எல்லாவல மேதானந்த தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோர் பொன்சேகாவைச் சந்தித்துப்பேசினர் என்று அப்போது ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்வாறான சந்திப்புகள் பிழையானவை அல்ல. சிவில் நீதிமன்றங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த நேரம் பார்த்து இராணுவ நீதிமன்றம் பொன்சேகாவுக்குத் தீர்ப்பை வழங்கி உள்ளது.

வழக்கு முடிவடைந்து இரண்டு வாரங்களுக்குள் நீதியரசர்கள் தீர்ப்பை ஆராய்வர். அதன்பின்பே தீர்ப்பு வழங்கப்படும். ஆனால், இந்த நடைமுறைக்கு மாறாக வழக்கு முடிந்து மறுநாளே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை எம்மால் ஏற்கமுடியாது. இதற்கு எதிராக நாம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளோம்.

இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் சிவில் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்ட வரலாறுகள் அதிகம் உள்ளன. அந்த வகையில் நாம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

அரசின் இந்த அராஜகத்திற்கு எதிராக இந்த நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டி நாம் இதற்காகப் போராடுவோம். - என்றார். (அ-சி)

# ரூபா 6 கோடி மதிப்பிலான போதைப்பொருள் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் பறிமுதல்

ஆறு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

துபாயிலிருந்து வந்த பிலிப்பைன்ஸ் நாட்டுப் பிரஜை ஒருவர் இந்த போதைப் பொருட்களை கொண்டு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-சி)

## நிறைவேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வருடம் பிற்போடப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் 2011 ஜனவரி மாதம் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னர் அரசமைப்புத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலேயே உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களைத் தொகுதிவாரியாக நடத்த முடியும் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நிறைவேற்று ஜனாதிபதி முறையை நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையாக மாற்றுவதானால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையை உருவாக்கும் அரசமைப்புத் திருத்தம் இப்போதைக்கு சாத்தியமற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசமைப்புத் திருத்தத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான அரசமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படமாட்டாது எனத் தெரியவருகிறது.

இதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இங்குள்ள அரசியல் கட்சிகளுடன் எதுவித கருத்துப் பரிமாறல்களையும் அரசு மேற்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# 490 ஈழத் தமிழர்களுக்கும் கனடா அகதி அந்தஸ்து வழங்கக் கூடாது

## இலங்கை அரசு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 16

சன் சி கப்பல் மூலம் கனடா சென்றுள்ள 490 இலங்கைத் தமிழர்களுக்கும் அகதிகள் அந்தஸ்து வழங்கக் கூடாது - என்று இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

ஆட்கடத்தற்காரர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் கனடா வந்துள்ளனர் என கனடாவுக்கான இலங்கைத் தூதர் சித்ராங்கனி வாகீஸ்வர தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலின் தலைவராக இருந்த வினோத் என்பவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர் எனவும், அவர் பல்வேறு ஆயுதக் கடத்தல் குழுக்களுடன் தொடர்புடையவர் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வகையிலான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அகதிகளாக வந்துள்ள இலங்கையர்களுக்கு, பல்வேறு உதவிகளை வழங்க கனடாவில் அதிக அளவிலான தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் கனடாவின் டொரன்டோ மற்றும் ஒட்டாவா நகரங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொண்ட பாரிய ஆர்ப்பாட்டங்களில் இது உறுதியாகி இருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், கனடாவின் குடிவரவு சட்டத்திட்டம் போதிய இறுக்க நிலையை கொண்டிருக்கவில்லை என்பதை சகலரும் அறிவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## அடியார்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலே குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து பக்தர்கள் ஆலயத்தை நோக்கி அலை அலையாக வரத்தொடங்கினர்.

நேற்றைய உற்சவத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் பங்கேற்றனர் என்று உத்தே சமாக மதிப்பிடப்பட்டது. பங்குகொண்ட பெண்களில் பெரும் எண்ணிக்கையான வர்கள் சேலை அணிந்திருந்தனர். ஆண்கள் வேட்டியுடன் காணப்பட்டனர்.

தெற்கில் இருந்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட, பெரும்பான்மை இனத்தவர்கள் தேங்காய் உடைத்தும் அர்ச்சனை செய்தும் முருகப்பெருமானை வழிபட்டனர்.

பக்தர்கள் ஆலய வீதிகளில் காலணி இன்றி நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆலய வாசலில் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் ஆண்கள் மேலங்கிகளைக் களைந்துசெல்லுமாறும், தொலைபேசி, புகைப்படக் கருவிகளைப் பயன்படுத்தக் கூடாதெனவும் தென்பகுதி மக்களிடம் கண்டிப்பாக எடுத்துக்கூறியபடி இருந்தனர்.

அரைக்காற்சட்டையுடன் வந்த இளம் பெண்களிடம் கண்டி தலதா மாளிகைக்கு எவ்வாறு நீங்கள் செல்கிறீர்களோ அதே போன்று இங்கும் கலாசார உடையின்றி இதுபோன்ற ஆடைகளுடன் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என வலியுறுத்தியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஒ-ஐ-111-236-26)

# இந்திய அரசின் வீடமைப்பு உதவி: இலங்கை இறுக்கமான நடைமுறை

கொழும்பு, ஓக. 16

வடக்கில் இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புக்கான நிதியுதவியைப் பெறுவதற்கு இலங்கை அரசு இறுக்கமாக நடைமுறையைப் பின்பற்றவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குறிப்பிட்ட காணி தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்களைச் சமர்ப்பித்தால் மட்டுமே வீடமைப்புக்கான நிதியுதவி வழங்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சொந்தக்காணி என்றால் அதற்கான சகல ஆதாரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அரச காணிகளில் குடியிருப்போரெனின், 1985 ஆம் ஆண்டுக்கு முன்னரே அங்கு வசித்ததற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வன்னியில் பெருமளவு தமிழர்கள் குடியேறியிருந்தனர். அவர்களுக்கு அரசகாணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதற்கான அனுமதி பத்திரம் மற்றும் உறுதிகள் கூட அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டிருந்தன.

புலிகளின் காலத்தில் வழங்கப்பட்ட இந்தக் காணிகளின் உறுதிகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை அரசு தற்போது ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
ICT - (A/L) 2011 / 2012
MIS
R.Kumaran - B.Sc.
100% practical
Tamil / English Medium
# 74, Sabapathy Lane, Jaffna. TPNO: 0213216083

NEW SCIENCE CENTRE
(Clock tower Rd, Jaffna)
CHEMISTRY - G.Beno (B.Sc)
★ ORGANIC - Tue, Thu-3-4.30pm
ஆரம்பம் - நாளை (3pm)
★ PHYSICAL Fri 3-4.30pm
★ பரிவு
★ ஒட்சி ஏற்றம் தாழ்த்தல் } Sat, Sun 5.15 pm 6.15) pm

NALIN INFORMATION TECHNOLOGIES pvt ltd
NALIN இன் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு
சிறந்த விலைக்கழிவில் கணனிகள் மற்றும்
அதன் உதிரிப்பாகங்கள் விபரங்களை நாளைய
பத்திரிகையில் எதிர்பாருங்கள்
NALIN information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.